www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 130 செப்.18 - செப்.24 - 1997 விலை 10.00 ரூபா

## மட்டக்களப்பு : குண்டு முளைக்கும் சடலங்கள் !



காத்தான்குடி :
**வள்ளங்களை எரித்தது யார்?**

கொழும்பு லொட்ஜ் :
**எட்டடிச் சிறை !**

டயானா :
**ஒரு அவலப் பெண்!**

விமான நிலையம் :
**தமிழரா? அனுமதி இல்லை !**

சம்பள உயர்வா ?
**வெளியே போ !**

ஜே.வி.பி. :
**பெண்கள் ஏன் ?**

நிசார்கப்பானி :
**ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

ஆசிரியர் குழு

பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

இதழ் தொகுப்பு
அரவிந்தன்

வெளியிடுபவர்
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

ஆண்டு சந்தா விபரம்
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் மட்டுமே செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.

# வடகிழக்கு மாகாணசபை: கணக்கு விடும் கணக்காளர்!

ஒரு தனியார் வியாபார ஸ்தாபனத்தினதோ அல்லது அரச பொது ஸ்தாபனத்தினதோ காவல் நாயகமாக இருக்க வேண்டியவர் கணக்காய்வாளராகும். வடகிழக்கு மாகாண சபையின் காவல் நாயகமாக நியமிக்கப்பட்டவர் அப்படி இல்லாதிருப்பது தான் விசனத்துக்குரிய விடயமாகும்.

மாகாண சபையில் நடக்கும் மோசடிகளை, களவுகளை கண்டுபிடிக்க வேண்டியவர் தானே பல மோசடிகளைப் புரிந்துள்ளார். புரிந்து கொண்டுமிருக்கின்றார். அத்துடன் மாகாண, சபையில் பணிபுரியும் 'பந்துமித்ரர்களின் தவறுகளையும் மூடி மறைத்துள்ளார். இவர் குறைந்தது ஒன்றே கால் லட்ச ரூபாய் அளவில் மேலதிகமாகச் சம்பளம் இன்றுவரை பெற்றுள்ளார். இம் மோசடி உடனடியாக நிறுத்தப்படாதவிடத்து மேலும் மாதந்தோறும் ரூபா 3000/= அளவில் அரசாங்கத்தின் பணத்தை கொள்ளையடிப்பார்.

இவர் கணக்காய்வாளர் திணைக்களத்தில் இருந்து ஓய்வு பெற்றவர். ஓய்வு பெறும்போது இவரது சம்பளம் ரூபா 7800/=. மாகாண சபையில் இவர் பெற்ற சம்பளம் ரூபா 8400/=. பொது நிர்வாக சுற்று நிருபம் 37/92இன்படி 1993.01.01இலிருந்து சம்பள உயர்வு பெற இவர் அருகதையற்றவர். இச்சம்பள உயர்வினைப் பெறுவதற்காக தான் பெற்று வந்த சம்பளத்தினை ரூபா 8400/= இலிருந்து 7800/= ஆக குறைத்துக் காட்டியுள்ளார்.

மேலும் இவர் மாகாண சேவையில் சேர்ந்த திகதியை 1990.04.01 இலிருந்து 1990.04.23 ஆக மாற்றியுள்ளார். இதன் நோக்கம் மாகாண சேவையைவிட்டு விலகும் போது மேலதிக ஓய்வூதியம் பெறுவதற்கு ஆகும்.

பொது நிர்வாக சுற்று நிருபம் 2/97இன் படி இவர் 1997.01.01 இலிருந்து சம்பள உயர்வு பெற இவருக்கு அருகதையில்லை. ஆனாலும், இவர் தனது ஓய்வூதியம் பெற்ற திகதி 1990.03.22 எனவும் மாகாண சேவையில் சேர்ந்த திகதி 1990.03.23 எனவும் பொய்யான தகவல்களைக் கொடுத்து ஆளுநரிடமிருந்து சம்பள உயர்வுக்கான அனுமதி பெற்றுள்ளார். பின்னர் பிரதம செயலாளரினால் ஆளுநருக்கு இவர் செய்த மோசடி பற்றி சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மிகவும் கலவரம் அடைந்தார். உடனே ஆளுநரின் ஆலோசனைப்படி 1997.01.01இலிருந்து பெற்ற மேலதிக சம்பளமாகிய ரூபா 21,000 மீளச் செலுத்துவதாக அறிவித்துள்ளார்.

இவரது மோசடி பற்றி பா.உ. டக்ளஸ் தேவானந்தா அறிக்கை ஒன்றை மாகாண சபையிடமிருந்து கோரியிருந்தார். பிரதேச செயலாளர் தனது அறிக்கையை மேலிடத்துக்கு சமர்ப்பித்திருந்தும் இதுவரை அது தேவானந்தாவுக்கு அனுப்பப்படவில்லை. கணக்காய்வாளர் நாயகமும் இம்மோசடி பற்றி கணக்காய்வு செய்துள்ளார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது. மோசடியிலீடுபட்டவர் மாகாண சேவையில் சேருமுன்பு அரசாங்க கணக்காய்வுத் திணைக்களத்திலேயே பணி புரிந்துள்ளார். எனவே அங்கேயும் தன் செல்வாக்கை செலுத்தியுள்ளாரோ தெரியவில்லை.

தண்டனை கொடுத்து உடனே வீட்டுக்கு அனுப்பப்படவேண்டியவரை இன்னும் சில காலத்திற்கு சேவையில் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத்தெரிகிறது.

இதற்கிடையில் தான் புரிந்த மோசடி தன் இரு உதவியாளரினால் தான் வெளிவந்ததென நினைத்து அவர்கள் மீது பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளார். ஏற்கெனவே ஒருவர் மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஓய்வு பெறுவதற்கும் இன்னும் நான்கு மாதங்களே உள்ளது. இந்த இடமாற்றத்திற்கு ஏன் இந்த அவசரம்? இது அவசியந்தானா? அடுத்த உதவியாளருக்கும் அவசியமற்ற தொல்லைகள் கொடுத்து வருகின்றார்.

இது சம்பந்தமாக கடந்த சில வாரங்களாக பல தடவைகள் ஆளுநரை சந்திக்கவென கொழும்பிற்கு உத்தியோக பூர்வ வாகனத்தில் சென்று வந்துள்ளார்.

கொழும்பு செல்லும் ஒவ்வொரு தடவையும் இவருக்கு பாத பூசை செய்யும் உதவியாளரையும் கூட்டிச் சென்றுள்ளார். இவரையே தனக்குப்பின் தன்னிடத்திற்கு நியமிக்கப்போவதாகவும் சூளுரைத்துள்ளார். மேலும் இவரிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட சிரேஷ்ட கணக்காய்வாளரின் மாற்றத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு ஓடித்திரிகிறார். உண்மையில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு ஒரு கணக்காளரையே நியமிக்க வேண்டும். இது தான் மத்திய அரசிலுள்ள நடைமுறை. கணக்காய்வுச் சேவையிலிருந்தவரை நியமனம் செய்வதனால் மாகாண கணக்காய்வுத் திணைக்களம் என்றும் வயோதிப மடமாகவேயிருக்கும்.

இவரது தில்லுமுல்லுகள் இவருடைய சகாவான திறைசேரியின் உதவிச் செயலாளரின் உதவியோடு தான் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

இவர்களின் இந்தத் தில்லுமுல்லுகள் உரிய இடத்தால் கவனிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுமா?

'பரமாத்மா'

## தலைமைப்போட்டியில் கூட்டு உடைவு!

அரசின் தீர்வுயோசனைகளுக்கு எதிராக பிரச்சார நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கான கூட்டணி அமைப்பது தொடர்பாக பேரினவாத கட்சியென அழைக்கப்படும் மக்கள் முக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கொள்கையளவில் இந்த விடயத்தில் இரு கட்சிகளுமே உடன்பட்டிருந்தாலும், அமைக்கப்படும் கூட்டணிக்குள் எந்த கட்சியைச் சேர்ந்தவர் தலைமை தாங்குவது என்ற இழுபறியே முறிவில் கொண்டு போய் விட்டதாகத்தெரியவருகிறது.

ஏற்கெனவே அரசாங்கத்தின் "தவளம" நிகழ்ச்சிக்கு எதிரானபிரச்சார வேலைத்திட்டத்தை தாம் ஆரம்பித்து விட்டதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. பேராசிரியர் நளின் டி சில்வாவின் தலைமையில் இயங்கும் "சிந்தக பரியேஷன" எனும் அமைப்பினால் ஏற்கெனவே தீர்வு யோசனைக்கு எதிரான "இனவாத சக்தி"கள் கூட்டணி அமைத்து இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே 1986இல் ஜே.வி.பி., ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ம.ஐ.மு ஆகிய கட்சிகள் இணைந்து "தாய்நாட்டைக் காப்பதற்கான இயக்கம்" எனும்இனவாத அணியொன்றை உருவாக்கிஇயங்கியது நினைவு கூரத்தக்கது. இந்த கூட்டணியின் உடைவுக்கும்தலைமைப் போட்டியே காரணம் என்பதும் முக்கியமானது.

## புலிகளுடன் பேசு!

இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய மற்றும் பிரிக்கப்பட முடியாத இலங்கையொன்றின் அமைப்பினுள் தீர்வொன்றை எட்டத் தாம் உடன்படுவதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அதே போல்தாமதிக்காது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான வழியொன்றைக் கண்டு பிடிக்க வேண்டுமெனவும் அவர் கூறுகிறார்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டையும்தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் யுத்த பலம் அரசாங்கத்துக்கு இல்லையெனவும், இன்னும் 12 அல்லது 18 மாதங்கள் யுத்தம் இவ்வாறு நிலவுமேயானால்கடும் யுத்த, பொருளாதார அழிவுகள் ஏற்படுமென அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

Lanka Monthly Digest என்ற சஞ்சிகையுடனான நேர்காணலிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி நினைத்த படி நடக்க முடியாது!

நாட்டிலுள்ள மீயுயர் நீதிமன்றத்தைக் கலைத்து விடுவதால் மட்டுமே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெறாது மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்தி அரசியலமைப்பைத் திருத்தியமைக்க முடியுமென முன்னாள் மீயுயர் நீதிமன்ற நீதிபதி கே.எம்.எம்.பீ. குலதுங்க தெரிவித்துள்ளார்.

மூன்றில்இரண்டு பங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும்புதிய அரசியலமைப்பு எவ்வாறெனினும் நடைமுறைப் படுத்தப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அண்மையில்தெரிவித்த கருத்துத் தொடர்பாக வினவப்பட்ட போதே முன்னாள் நீதிபதி குலதுங்க இவ்வாறுதெரிவித்தார்.

நினைத்தபடி அவ்வாறான எதனையும் செய்யப் போய் எவராவது அதற்கு எதிராக மீயுயர் நீதிமன்றத்துக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்தால், தான் அறிந்த வரையில் இந் நாட்டின் மீயுயர் நீதிமன்றம் அதற்கு இடங் கொடாது இருக்குமென அவர் தெரிவித்தார்.

இப்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்புகள்ள அரசியலமைப்பொன்று என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை பற்றி வினவிய போது அது வெவ்வேறானது அல்லவெனவும், ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுபவர்களின் கூற்றுப்படி அது பற்றி (ஜனாதிபதிக்கு) ஏற்பட்டுள்ள விளக்கம் அதுவாக இருக்கலாமெனவும்குலதுங்க கூறினார்.

புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்றைக் கொண்டு வரவேண்டுமானால்அவ்யோசனைகள் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு அதற்கான ம.க.க.வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

ஏதாவது விதத்தில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் பெற்று அவ்யோசனைக்கு ம.க.க.வாக்கெடுப்பொன்றின்போது மக்களின் அங்கீகாரம் கிடைக்காவிடின் அவ் அரசியலமைப்புத் திருத்தத்தைச் சட்டமாக்க முடியாதென புலதுங்க மேலும்தெரிவித்துபர்.

முதலில் ம.க.க.வாக்கெடுப்பொன்றை நடத்தி விட்டுப்பின்பு உரிய திருத்தத்துக்காகப்பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா என வினவியபோது அவ்வாறு செய்ய முடியாதெனவும் அவர் கூறினார்.

## விமான வெற்றிலை

'யாழ்ப்பாணம் செல்பவர்கள் மறக்காமல் எடுத்துச் செல்கிற ஒரு பொருள் வெற்றிலை.

ஒரு வெற்றிலை 5ரூபா கூட விற்கிறதாம் அங்கு. அவ்வளவு கிராக்கி அதற்கு.

ஆனால், பாகிஸ்தானுக்கு வெற்றிலை எடுத்துச் செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பது போல, யாழ்ப்பாணத்துக்கு அதை எடுத்துச் செல்வதிலும் 'லயன் எயார்' ஒரு கட்டுப்பாடு விதித்துள்ளது. 500கிராம் வெற்றிலைதான் ஒருவர் கொண்டு போக முடியும் என்பது அதன் சட்டம்.

ஒரு வேளை லயன் எயாரும் யாழ்ப்பாணம் இன்னொரு நாடு என்று நினைத்து விட்டதோ என்னவோ?

## ஆயுத வியாபாரி கடிதம்!

ஸ்ரீ.லங்கா விமானப் படைக்கு வாடகைக்கு வழங்கவே எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகொப்டர்கள் 08ஐ அரசின் அனுமதியின்றி வாங்க முயற்சிகள் செய்யப்பட்டதாக அச் சம்பவத்தின் தலைவர் எனக் கூறப்படும் நம் நாட்டு ஆயுதக் கொடுக்கல்-வாங்கல்கள் சம்பந்தமான உலகப் புகழ்பெற்ற வர்த்தகரொருவர் அரசுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

உள்ளிருந்து கிடைத்த தகவல்களிற்கிணங்கவே அவ்வாறு செய்யப்பட்டதாக அக் கடிதத்தினூடாக தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

பஸ் வண்டியொன்றுக்கு மில்லியன் ரூபா மட்டில் இலாபம் வைத்துக் கடந்த அரசாங்க காலத்தில் அரசுக்கு பஸ் விற்பனை செய்யும் "வியாபாரத்தில்" ஈடுபட்ட இவ் வர்த்தகர், இப்போதைய அரசின் கீழும் அரசின் பிரபலமானவர்களுடன் இணைந்து ஆயுதக் கொடுக்கல்-வாங்கல் போன்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவராவார்.

அவரின் அவ் அறிக்கையில் இத் தாக்குதல்ஹெலிகொப்டர்கள் வாங்கும் சம்பவத்தின் பின்னணியில் உள்ள பிரபலமானவர்கள் பற்றிய தகவல்களும் வெளிவந்துள்ளதாக அறிய முடிகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இந்த நூற்றாண்டின் அழகிய பெண்

– ரத்னா –

பாரிஸ் சுரங்கப் பாதை யில் சென்று கொண்டிருந்த வேல்ஸ் இளவரசி டயானாவும், அவரது நண்பர் டொடி அல்பயாத்தும் கொல்லப்பட்ட செய்திக்குப் பின்னால் என்ன நடந்தது என்பது இன்னமும் ஒரு கேள்வியாகவே உள்ளது.

'பெப்பராற்சி' (Papparazzi) எனப்படும் பிரான்ஸ் புகைப்படப் பிடிப்பாளர்கள், இளவரசி டயானாவை புகைப்படம் எடுக்க விரட்டிச் சென்றதன் காரணமாக ஏற்பட்ட விபத்திலேயே இம் மரணம் சம்பவித்தது என்று கூறப்படுகிறது.

இப்'பெப்பராற்சி' எனப்படும் புகைப்படப் பிடிப்பாளர்கள் தொழில் ரீதியான புகைப்படப் பிடிப்பாளர்களாக இல்லாத போதும், விளம்பர ஏஜென்சிகளுக்கு தாம் எடுத்த பிரபலங்களின் (Celebrity) புகைப்படங்களை விற்று பணம் சம்பாதிப்பவர்களாக உள்ளனர். ''பணம் சம்பாதிக்கும்'' ஒரே காரணத்திற்காக பிரபலங்களின் பின்னாலும், பிரபலங்கள் இரகசியமாக உலவும் பிரதேசங்களை மோப்பம் பிடித்தும், புகைப்படம் எடுத்து விடும் வழமை கொண்டவர்களாக இவர்கள் உள்ளனர். இவர்கள் இளவரசி டயானாவின் நடவடிக்கைகளுக்கு கொடுத்த முக்கியத்துவமே இவரது உயிரைப் பறித்தது என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்.

இது தொடர்பாக, இளவரசி டயானாவின் சகோதரர் ஸ்பென்சர், ''எனது சகோதரியை பத்திரிகைகள் கொன்று விடும் என்பதை நான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். அவரது புகைப்படங்களுக்கு டொலர்களை வழங்கி பிரசுரித்த பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களுமே இம்மரணத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். அவர்களின் கைகளிலேயே இரத்தக் கறை படிந்துள்ளது'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

சண் (Sun), நியூஸ் ஒப் த வேர்ல்ட் (News of the World), டெய்லி மிரர் (Daily Mirror), சண்டே எக்ஸ்பிரஸ் (Sunday Express) போன்ற 'ரப்லொயிட்' பத்திரிகைகளே இளவரசி டயானாவின் நடவடிக்கைகள், அந்தரங்க விடயங்கள் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்ட பத்திரிகைகளாக இருந்தன.

பொதுவாக பிரிட்டனின் பல்வேறுபட்ட அரசியல், பொருளாதார சிக்கல்களை விட அவர்களுக்கு டயானாவின் அந்தரங்க வாழ்வு பற்றிய செய்திகள் முக்கியமாகி விட்டன. அவை கிட்டத்தட்ட ''டயானா பத்திரிகை''களாகவே மாறிவிட்டிருந்தன. இப்பத்திரிகைகளினால் ஊட்டி வளர்க்கப் பட்டவர்களாக 'பெப்பராற்சி' குழுவினர் விளங்கினர். டயானா டொடியுடன் விடுமுறையைக் கழித்த புகைப்படங்கள் மட்டுமன்றி, அவர் தொடர்பான பிற படங்களையும் இப்பத்திரிகைகள் பல லட்ச டொலர்களுக்கு பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் 'ஸ்டைல்' (Style) எனும் பத்திரிகை கடந்த வருடம், 'மரணம் அடையும் நபர்களை தெரிவு செய்யுங்கள்' என்ற போட்டியை வைத்து பரிசு வழங்கியதோடு, அதில் டயானா, சல்மான் ருஷ்டி, திரேசா, சதாம் ஹுசைன் போன்றவர்களை கல்லறையில் அடக்கியமையும் குறிப்பிடத்தக்கது. இது பத்திரிகைகள் டயானாவுக்கு கொடுத்த முக்கியத்துவத்தையே வெளிக்காட்டுகின்றது.

இவ்வாறு பத்திரிகைகள் டயானாவை முக்கியப்படுத்தியதன் காரணம் தான் என்ன?

1981ல் இளவரசர் சார்ள்சை மணமுடித்ததுடன் பிரித்தானிய இளவரசியாகிய டயானா, அரச குடும்பத்தின் கட்டுப்பாடுகள், விதிகள் என்பனவற்றை விரும்பாத ஒருவராகவே காணப்பட்டார். இறுகிப் போன அரச பரம்பரையின் வாழ்முறைக்கு முற்றிலும் நேரெதிரான, சாதாரண பிரித்தானிய மேற்தட்டு வர்க்கப் பெண்களின் வாழ்க்கையை வாழ விரும்பியவர் அவர். சுதந்திரமானவராகவும், உல்லாசப் பிரியையாகவும் இருக்க விரும்பிய டயானாவின் குடும்ப வாழ்க்கை பற்றிய பத்திரிகைகளின் செய்திகள் மூலம் சார்ள்ஸ் - கமிலா உறவு வெளித் தெரிய வந்ததைத் தொடர்ந்து அது, விரிசலடையத் தொடங்கியது. இது, டயானா வுக்கும், மகன் வில்லியத்திற்கு குதிரையேற்றப் பயிற்சியை வழங்கிய பயிற்சி வீரருக்கும் இடையில் ஏற்பட்ட உறவு பற்றி அவர் பகிரங்கமாக ஒப்புக் கொண்ட போது மேலும் விரிசலடைந்தது. வழமையான அரச பரம்பரை அரசிகளைப் போல அவர் ' அப்படி எதுவும் இல்லை என்று மறுக்காமல்பகிரங்கமாக ஒப்புக் கொண்டது அரச பரம்பரைக்குப் பெரும் இழுக்காகப் போய் விட்டது. இவ்வாறு ஒரு உண்மையை வெளிப்படையாகச் சொன்னதன் மூலம் அவர் அரச பரம்பரைக்குரிய தகுதியை இழந்து விட்டார். விளைவு மகாராணியின் அறிவுறுத்தலின் கீழ் சார்ள்சும் டயானாவும் சென்ற வருடம் விவாகரத்துப் பெற்று தனித் தனியே வாழும் நிலை ஏற்பட்டது.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு,தமது மேலாட்சி அரசியல் தொடர்பாக ஏகப்பட்ட பெருமை. தமக்குக் கீழ் இருந்த எல்லாக் காலனிகளிலும் உள்ள முழு அரச பரம்பரையையும் அழித்து விட்டு முழு உலகுக்கும் தாமே அரசர்கள் என்று முடி சூட்டிக் கொண்ட ஏகாதிபத்திய முடிக்குரியவர்களுக்கே உரிய பெருமை அவர்களுக்கு. ஆக,இத்தகைய பெருமைகள் கொண்ட தம் உயர் வம்சத்திற்கு டயானா, தன் நடவடிக்கைகள் மூலம் இழிவைக் கொண்டு வந்தார் என்ற குற்றச் சாட்டை அவர்கள் முன் வைக்கின்றனர்.

இக்குற்றச்சாட்டை நிலைநிறுத்தும் வகையிலேயே பிரிட்டிஷ் பத்திரிகைகளும் செயற்பட்டு வந்துள்ளன. அவரை மோசமானவராகவும், குற்றமிழைத்தவராகவும் சித்திரிப்பதில் அவை போட்டி போட்டன. இதற்கு அரச குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருந்தது என்பதும் மறுதலிக்கக் கூடியதல்ல. ஒரு வகையில் அரச குடும்பத்தினரின் மறைமுக ஆதரவின் கீழ் இவை செயற்பட்டன என்றும் கூடக் கூறிக் கொள்ளலாம். மாறாக இப்பத்திரிகைகள் நீண்ட காலமாக இருந்து வந்த சார்ள்ஸ் - கமிலா உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமையையும் நாம் கவனிக்க வேண்டும்.

இந்த நிலையில் தான் டயானா எகிப்தியரான அல்பயாத்தை ஒக்டோபர் மாதமளவில் திருமணம் செய்யவிருந்த செய்தியும் ஊர்ஜிதமாகியது. தம் முன்னால் வேறு ஒருவரையும் குறைந்தது, ஒரு அமெரிக்கரையாவது சமனாக கருதாத 'சூரியன் அஸ்தமிக்காத ராஜ்ஜியத்தினர்'' டொடி - டயானாவின் இணைவை விரும்பியிருப்பார்களா என்ன? அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு தகாத உறவாகவே கருதப்பட்டது. போயும் போயும் மதத்தாலும் இனத்தாலும் வேறுபட்ட ஒருவரையா என்ற கோபம் அவர்களுக்கு இருந்தது. ஆனால் இத்தனை யையும் மீறி டயானா -டொடி திருமணம் நிச்சயிக்கப் பட்டது. தமது திருமணத்தைச் செய்வது தான் என்பதில் டயானா தீவிரமாகவும் இருந்தார். பிரித்தானிய சாம்ரராஜ்யத்தின் எதிர்காலத்து பட்டத்து அரசராக வரக் கூடிய வில்லியத்தின் தாய் ஒரு எகிப்திய இஸ்லாமியரை மணந்து கொள் வதா என்ற கோபம் இக் கொலைக்கு ஒரு காரணமாக இருக்கலாமா என்ற சந்தேகம் பரவலாகவே இருந்தது.

இதை வெளிப்படையாகவே, லிபியத் தலைவர் கடாபி,''பிரிட்டனைச் சேர்ந்த இளவரசியொருவர் எகிப்தைச் சேர்ந்த அராபியர் ஒருவரை திருமணம் முடிப்பதைப் பொறுக்காத இரகசிய ஏஜென்சிகளே இதனைச் செய்துள்ளனர்'' என்று தெரிவித்திருந்தார். இதற்கு ஒப்பான கருத்தை எகிப்திய செய்தி நிறுவனமான 'மினா'வும் தெரிவித்திருந்தது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் டயானா கொல்லப் பட்டிருக்கிறார். கொலைக்கு யார் காரணமோ என்னவோ, பிரிட்டிஷ் அரச பரம்பரை தனது பெருமிதத்தையும் பிரித்தானிய சாம்ராஜ்யப் பெருமை கொண்ட பத்திரிகைகள் தமது பெருமிதத்தையும் காத்துக் கொள்ளும் ஒரு வாய்ப்பு இதன் மூலம் உருவாகி விட் டது.இந்த அநியாயமான, அரச பரம்பரையை அவமதிக்கும் டயானாவின் செயல் 'கர்த்தருக்கே பொறுக்கவில்லை' என்று கூறித் திருப்திப் பட்டுக் கொள்ளலாம் அவர்கள்.

ஆனால், வேறு ஒரு விதமாகவும் இதை நோக்கலாம்.

பரந்துபட்ட உலக மக்கள் டயானாவின் மூலமாக ஒரு பழம் பெருமிதம் உடைபடுவதைக் கண்டார்கள். அதன் சிதைவை அவர்கள் உள்ளூர ரசித்தார்கள். அவர் இன்னொரு திரேசாவாக இயங்குவதை வரவேற்றார்கள். இது பிரித்தானிய அரச பரம்பரைக்கு எதிரான - வெளித் தெரியாத உணர்வின் வெளிப்பாடாகவும் விளங்கிக் கொள்ளப் படலாம். ஏனென்றால் வேறெந்த அரச பரம்பரைப் பெண்களையும் போலல்லாது அவர் கொஞ்சம் கீழே இறங்கி வந்தார். அதனால் அவரை தங்களில் ஒருவராக அவர்களால் காண முடிந்தது. அதுவே டயானாவுக்கு ஏகப்பட்ட புகழையும் தேடித்தந்தது.

வெறுமனே பத்திரிகைகள் எழுதுவதால் மட்டும் ஒருவரின் புகழ் ஏறி விடுவதில்லை. அதற்கான சமூக, பொருளாதார ,மனோவியல் காரணிகளும் அவசியம். அப்போது தான் அந்தப் புகழ்ச்சி எழுத்துக்கள் மூலம் ஒருவர் பெருமளவுக்குப் பிரபல்யமடைய முடியும். அந்நிலைமை அங்கு இருந்தது. டயானா பிரபலமான ஒருவராக உருவாகினார். (1994இல் இலங்கையில் சந்திரிகா உருவாகியது போல) மக்களது மன விருப்பின் ஒரு வெளிப்பாடாக, ஒரு குறியீடாக அவர் பவனி வந்தார்.

எவ்வாறாயினும் இளவரசி டயானாவின் மரணம், பிரிட்டிஷ் பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பாகவும் சட்டதிட்டங்கள் தொடர்பாகவும் கேள்வி எழுப்புவதாக இருக்கும் அதே வேளை பலரும் கவனிக்காத ஒரு பக்கமும் இருக்கவே செய்கிறது.

அது தான் அவர் ஒருபெண் என்பது.

அன்று தொடக்கம் இன்று வரை பெண் என்ற ஒரே காரணத்துக்காக சமூக, கலாசார ரீதியான துன்பங்களை அவள் எந்த உயர் குடும்பத்தைச் சேர்ந்தவளாயினும் சரி அனுபவித்தேயாக வேண்டும் என்பதற்கு டயானா கூட விதி விலக்காகி விடவில்லை. ஒரு பெண் என்ற விதத்தில் தான் விரும்பியபடி வாழ்வதற்கு அவருக்கு இருந்த நெருக்கடிகள் வேறெந்தப் பெண்ணுக்குமுரிய பொதுவான நெருக்கடிகள் தான் என்பதை இவ்விடத்தில் நினைவிற் கொள்வது பொருத்தமாகும்.

இந்த வகையில் இரக்க சுபாவமும், பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் கொண்ட டயானா என்ற பெண்ணின் மரணத்தின் இரத்தக் கறை ஆணாதிக்க சமூகத்தின் கைகளில் படிந்திருப்பது மறுக்க முடியாததே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆடைத் தொழிற்சாலை: சம்பள் உயர்வா? போராட்டமா?

செப்டெம்பர் 2ம்திகதி பகல் 12மணிக்கு முகத்துவாரம் அளுத் மாவத்தை வீதியிலுள்ள யூரோ ஏசியன் (Euro Asian) ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஆண், பெண் ஊழியர்களின் அவலக்குரல் அளுத்மாவத்தை வீதி மக்களை திகிலடையச் செய்தது.

சம்பள உயர்வுகோரி வேலைநிறுத்தத்தில் இறங்கிய அந்த ஊழியர்களின் மீது ஆலை முதலாளியின் சேகவர்களாகச் செயற்பட்ட பொலிசாரின் தடியடிப்பிரயோகமும், உள்ளே விடுதிகளில் தங்கியிருந்த பெண் ஊழியர்களை தலைமயிரிலும், சட்டைகளிலும் பிடித்திழுத்து வந்து வீதிகளில் போட்டு உதைத்ததுமே இந்த அவலக்குரலுக்கான காரணமாகும்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக எத்தகைய சம்பள உயர்வும் வழங்கப்படாமல் இழுத்தடித்து வந்தது இந்த ஆலை நிர்வாகம். விலைவாசி ஏற்றம், காரணமாக எழுந்த பொருளாதாரச் சுமையைச் சுமக்க முடியாத காரணத்தால் சம்பள உயர்வு கேட்டு பல தடவைகள் முயன்று அலுத்துப்போன ஊழியர்கள் ஓகஸ்ட் மாதம் 25ம்திகதி நிர்வாகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்கள். ''எமது சம்பள உயர்வு விடயமாக எம்முடன் பேசுங்கள். இல்லையேல் 27ம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் இறங்குவோம்'' நிர்வாகம் அசையவேயில்லை.

இவ்வாடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 230 ஊழியர்களும் 27ம்திகதி முதல் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். நிர்வாகம் எதுவுமே பேசவில்லை.

ஆனால் 1ம்திகதி பகல் இன்ஸ்பெக்டர் புஞ்சி பண்டா என்பவர் பொலிசாருடன் வந்து விடுதியில் தங்கியுள்ளவர்கள் ஒரு மணித்தியாலயத்திற்குள் தொழிற்சாலையை விட்டு வெளியேறிவிட வேண்டும். இல்லையேல் எல்லோரும் அடித்து வெளியே விரட்டப்படுவீர்கள் என எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

மறுநாள் 2ம்திகதி பகல் 11மணிக்கு முகத்துவாரம் பொலிஸ் பொறுப்பதிகாரி நோட்டன் சில்வா, ஏ.எஸ்.பி. லூட்டன் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான பொலிசாருடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகள், தடிகள், ஆயுதங்கள் சகிதம் வந்திறங்கினர். - ஒரு யுத்தத்திற்கு வந்திறங்குபவர்கள் போல.

ஆடைத்தொழிற்சாலைக்குள் நுழைந்து விடுதியில் தங்கியிருந்தவர்களை உடனடியாக வெளியேறும்படி மிரட்டினார்கள். பொலிசாரிடம் தங்களது நியாயமான பிரச்சினைகளைத் தொழிலாளர்கள் கூற முற்பட்டபோதும் பொலிசார் அதைக்காதில் போட்டுக் கொள்ள வில்லை.

விடுதிகளில் தங்கியிருந்த ஊழியர்கள் மீது தடியடிப்பிரயோகம் மேற்கொண்ட பொலிசார் உள்ளிருந்த பெண் ஊழியர்களின் தலைமுடியிலும் சட்டைகளிலும் பிடித்திழுத்து வந்து வீதிகளில் போட்டனர்.

ஆடைத்தொழிற்சாலையில் இருந்து 200 மீற்றர் தொலைவிலுள்ள மோதரவீதி கந்த உட சந்திவரை ஆண், பெண் ஊழியர்கள் அனைவரும் மீண்டும் பொலிசாரால் தடியடிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு விரட்டப்பட்டுள்ளார்கள்.



ஆடைத்தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு துணை நின்று தொழிலாளர்களை காட்டு மிராண்டித்தனமாக தாக்கிய பொலிசின் நடவடிக்கைகளையிட்டு இப்பிரதேச வாசிகள் கூட வெகுண்டெழுந்துள்ளனர்.

பொலிசாரின் இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் ஏழு பெண் ஊழியர்கள் கடுமையாக காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 23வது வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரியங்கா, அனுலா ஆகிய இரண்டு பெண் ஊழியர்களும் பொலிசாரின் தடியடிப்பிரயோகத்தில் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விஜேரட்னா என்ற ஊழியர் பொலிசாரினால் தாக்கப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டு முகத்துவாரம் பொலிசில் தடுத்துவைக்கப்பட்டு 6ம்திகதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

''மூன்றரை வருடங்களுக்கு முன்னர் பன்னிரெண்டு மெசினுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை இன்று 150 மெசின்களுடன் 250க்கு மேற்பட்ட ஊழியர்களுடன் இயங்குகிறது.

இவ்வாடைத்தொழிற்சாலையின் இலாபத்தினால் இன்னொரு ஆடைத்தொழிற்சாலை சப்புகஸ் கந்தவிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் எமது சம்பளம் பற்றி நிர்வாகம் எந்த அக்கறையும் காட்டவில்லை. பல வருடங்களாக இவ்வாடைத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் எமக்கு வெறும் 2000/= தான் சம்பளமாக வழங்கப்படுகிறது'' என்கிறார்கள் தொழிற்சாலை ஊழியர்கள்.

''மேலதிகமாக 750/= சம்பள உயர்வு தரும்படி நாம் கேட்டதற்காகவே நிர்வாகம் பொலிசாரை அழைத்து எம்மை விரட்டியடித்துள்ளது''.

''இவ்வாடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களின் 35 மில்லியன் ரூபா சேமலாப நிதியும் சரி, 30லட்சம் ரூபா ஊழியர் நம்பிக்கை நிதியும் சரி இதுவரை ஊழியர் சேமலாபநிதியத்துக்கு வழங்கப்படவில்லை. எமக்கு அடிக்க வந்த பொலிசார், இதுபற்றி கவனமெடுக்காமல் இருப்பது எப்படி நியாயமாகும்?'' என்று கேட்கிறார் அவர்களுள் ஒருவர்.

செப். 5ம்திகதி பகல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பிரதிநிதிகளை அழைத்து பேசிய நிர்வாகம் ஊழியர்கள் அனைவரும் தொழிற்சங்கங்களிலிருந்து விலகி இனிமேல் எக்காரணம் கொண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க மாட்டோம், சம்பள உயர்வு கேட்க மாட்டோம், நிர்வாகம் தருவதை மட்டுமே ஏற்றுக்கொள்வதென தனித்தனியாக கடிதம் தந்தால் மட்டுமே வேலைக்கு சேர்த்துக் கொள்ள முடியுமென அறிவித்துள்ளது.

''இந்தப்பதில் எரிச்சலையும், அதிருப்தியையும் ஊட்டும் ஒரு பதிலாகும். தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட இறங்கியது. வெறும் ஆசைக்காக அல்ல. வழங்கப்படும் ஊதியத்துடன் வாழ முடியாது என்பதால் தான் என்பதை இந்த நிர்வாகம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.'' இது இன்னொரு தொழிலாளியின் கோபம் கலந்த அபிப்பிராயம்.

இவ்வாடைத் தொழிற்சாலையின் உரிமையாளர் பிராங். இவர் ஓர் ஜெர்மனியர். முகாமையாளர் ஸ்ரீபன் செல்லத்துரை. இவர்கள் இருவருக்கும் பொலிஸ் உயர்பீடத்தில் மிகுந்த செல்வாக்கு உள்ளதாகவும் தெரியவருகிறது.

பொலிசார் நடத்திய இத்தாக்குதல் குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இது பற்றி விசாரணை செய்யுமாறு உத்தரவிடவேண்டியதாயிற்று. இது இத்தாக்குதல்களின் குரூரம் எத்துணை மோசமானதென்பதை உணர்த்துகிறதல்லவா?

இதையெழுதிக்கொண்டிருக்கும் வரையும் இவ்வாடைத் தொழிற்சாலையின் 230 ஊழியர்களும் தொழிற்சாலைக்கு எதிரேயுள்ள மரங்களுக்கு கிழே நியாயம் வேண்டிக்காத்துக்கிடக்கிறார்கள்.

இதேவேளை ஆயுதம் தாங்கிய பத்துக்கும் மேற்பட்ட பொலிசார் ஆடைத்தொழிற்சாலையை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இடைக்கிடையே பாதையால் போவோர் வருவோரை வேறு தடுத்துச் சோதனையும் செய்கிறார்கள்.

தொழிலாளர் சாசனத்தை உதறித்தள்ளிய போக்கும் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களை நசுக்கும் பொலிசாரின் வெறியாட்டமும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியில் சாதாரண விடயங்களாகி விட்டன தான். ஆனாலும் பாண் முதல் பருப்பு வரை மக்களின் அன்றாட தேவைப் பொருட்கள் அனைத்தையும் விலையேற்றிவிட்டு அவர்கள் ஊதியம் கேட்டால் முதலாளிக்காக அடிதடியில் இறங்கவும் தயாராக இருக்கும் நிலைமையை என்னவென்று சொல்லுவது. வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது முழு இலங்கையிலுமே யுத்த நிலையை உருவாக்குவது தான் இந்த அரசாங்கத்தின் 'சமாதான' ஆட்சியின் குறிக்கோளோ என்னவோ?

வெறியாட்டம் நடாத்திய அதிகாரிகளும் பொலிசாரும் இவர்கள் தான் என்று கூறுகிறார்கள் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள்:

நோட்டன் சில்வா,(முகத்துவாரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி), ஏ.எஸ்.பி. லூட்டன், இன்ஸ்பெக்டர் புஞ்சிபண்டா, இதர பொலிஸ் உத்தியோகத்தர்கள்: இல. 31994, இல. 2502, இல. 36455, இல. 17122, இல. R 883, இல. 16615, இல. 9698, இல. 3303, இல. 17220, இல. 8318

வர்மா

### ஜமாயுங்கள்!

தரக்குறைவான போலியோ தடுப்பூசி மருந்தை இறக்குமதி செய்ததன் காரணமாக பல குழந்தைகள் நோய் வாய்ப்பட்ட செய்தி பரவலாக அடிபட்டது.

இந்த தரக்குறைவான மருந்தை இறக்குமதி செய்ததில், சுகாதார அமைச்சின் உயர்மட்ட உத்தியோகத்தர்கள் பலருக்கு சம்பந்தமிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஊழலுக்கு இலங்கை மருந்துக்கூட்டுத்தாபனமே பொறுப்பென்றும், உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்படாத இந்தியக் கம்பனி ஒன்றிலிருந்தே இந்த மருந்து இறக்கப்பட்டுள்ளது என்றும், அரச மருத்துவர் சங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்தக்குற்றச்சாட்டுகள் காரணமாக, ஊசி மருந்துகளை பரிசோதனை செய்ய உலக சுகாதார நிறுவனத்துக்கு அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த சோதனைக்காக அனுப்பட்ட மாதிரி மருந்துகள் உண்மையில் தரக்குறைவானவை என்று சந்தேகிகப்பட்ட மருந்துகள் தானா என்ற சந்தேகம் இப்போது கிளப்பப்பட்டுள்ளது.

தரக்குறைவான மருந்துக்குப்பதில் நல்ல மருந்தையே பரிசோதனைக்கு அனுப்பி தப்பிக்கொள்ள அதிகாரிகள் முயல்கிறார்கள் என்று பேசப்படுகிறது.

அதிகாரிகள் படு கில்லாடிகள்தான்.

ஆனால் குழந்தைகள் தான் பாவம்.

அவர்களுக்குத்தான் மாறி மாறி தடுப்பு தடுப்பு என்று புதிய புதிய மருந்துகளை ஊசியால் குத்திக்குத்தி ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்க திராணியற்றவர்கள் தானே அவர்கள்.

நீங்கள் ஜமாயுங்கள்!

### நிறை இறங்கி விலையேறும் பாண்

ஒரு இறாத்தல் பாணின் விலை ரூ.8.50என்று அரசாங்கம் அறிவித்தது.

ஆனால் கடைக்கு வரும் பாணில் ஒரு இறாத்தல் (450கிராம்) ஒரு போதும் இருப்பதில்லை. 300 கிராம் இருப்பதே அருமை. அதிலும் 50கிராக்கு மேல் இருப்பது கரிக்கட்டிதான்.

இதுபற்றி ஒரு பேக்கரி முதலாளியிடம் கேட்ட போது அவர் சொன்னார், 460 கிராம் பாணைச் செய்தால் எங்களால் ரூபா 15க்கும் கூட விற்கலாம். அதற்குக்கட்டுப்பாடு இல்லை, ஆனால் மக்கள் வாங்க மாட்டார்கள். 450 கிராம் பாணை 8.50க்கு விற்க முடியாது. எனவே 8.50க்கு உ ரிய அளவில் பாண் செய்கிறோம். அது 225 - 330 கிராம்வரை வருகிறது.

எல்லோருக்கும் ஏதோ ஒரு நியாயம் இருக்கிறது.

சாப்பிடுபவர்களுக்கு தான் ஒரு நியாயமும் இல்லைப்போலும்!

### விளங்காத நீதி

தீர்வுத்திட்ட அமுலாக்கலுக்கு முன் புலிகளுடன் பேசுவதானால் ஐ.தே.க வுடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்.

யுத்தத்தைத் தொடங்குவதற்கு ஐ.தே.க வின் உடன்பாட்டை பீரிஸ் கேட்க வில்லை; ஜனாதிபதி முறையை மாற்றுவதாக கூறியபோது அதைக்கேட்க வில்லை. ஏன் பட்டலந்தை விசாரணைக் கொமிசனை நியமிக்கும் போதும் அதைக்கேட்க வில்லை.

ஆனால் புலிகளுடன் பேச மட்டும் ஐ.தே.க.வுடன் இணங்கியாக வேண்டுமாம்.

நீதியமைச்சரின் பல நியாயங்கள் பலருக்கு விளங்குவதில்லை. ஒரு வேளை நீதி என்றால் அது ஒருவருக்கும் விளங்காமல் இருக்க வேண்டுமோ என்னவோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# அரசுக்கு இப்போது குருசந்திர யோகம்!

அதிர்ஷ்டம் சொல்லிக் கொண்டு வருவதில்லை என்பார்கள். சில வேளைகளில் அது கூரையைப்பிய்த்துக் கொண்டும்வந்து விழுவதுண்டாம்.

ஆனால், ஒரு நிபந்தனை, அதிர்ஷடத்தைப் பெறுபவர் அதிர்ஷ்டசாலியாக இருக்கவேண்டும்.

நான் இப்படி எழுதும் போது சமீப காலத்தில் அப்படி அதிர்ஷ்டத்தின்மேல் அதிர்ஷ்டம்பெற்றது யார் என்று நீங்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டு யோசிக்கக் கூடும்.

"வாக்குறுதிகளை நிறைவேற்றுவது" இந்த நாட்டில் அபிவிருத்தி லொத்தர் மட்டுமே என்றாகிவிட்ட நிலையில், சாதாரண மனிதன் முதல் அரசுத்தலைவி ஜனாதிபதிவரை எல்லோரும் அதிர்ஷடத்தை நோக்கி கையேந்தி நிற்பதில் ஆச்சரியமில்லை.

சாதாரண மக்கள் எப்படியோ ஆனால் சந்திரிகாவுக்கும் அவரைத் தலைவியாகக் கொண்ட அரசாங்கத்துக்கும் அடுத்தடுத்து வந்த அதிர்ஷ்டங்கள் கையேந்தாமலே கூரையைப் பிய்த்துக்கொண்டு வந்த அதிர்ஷடங்கள் என்றால் அது மிகையல்ல, அப்படி என்ன அதிர்ஷ்டம் தான் என்று நீங்கள் நினைக்கக் கூடும்.

முதல் அதிர்ஷ்டம் கொழும்பில் நடந்த கிரிக்கெற் விளையாட்டுப் போட்டிகளின் வடிவில் வந்தது. நாம் எல்லோரும் வாயிலே இலையான் மொய்க்க டி.வி.யில் ஓடி ஓடித்திரியம் பந்தை 'ஆ' என்று பார்த்தபடி உட்கார்ந்து இருந்தோம். இதை விட அதிர்ஷ்டம் வேறென்ன வேண்டும்?

அரசாங்கத்தின் அதிர்ஷடம் இத்துடன் நின்று விடவில்லை. இரண்டாவது அதிர்ஷடமும் வந்து சேர்ந்தது: சுசந்திகா வெள்ளிப்பதக்கம் பெற்று நாடு திரும்பினார். ஏதென்ஸ் நகரிலிருந்து அவர் திரும்பியதை முடிந்தளவு பிரம்மாண்டமாக பிரச்சாரம் செய்து அவருக்கு விளையாட்டு அமைச்சுக்கு சொந்தமான ஒரு சொகுசு வீட்டையும்வாகனமொன்றையும்வழங்கி மக்கள் மீண்டும் வாயைப் பிளக்கும் நிலையை உருவாக்கியது. ஆகா எனா நாமெல்லாம் புளங்காங்கிதம் அடைந்து மெய்சிலிர்த்துப் போய் இருந்தோம்.

அடுத்த அதிரஷ்டம், பாரிசில்நடந்த விபத்தொன்றின் மூலம் இளவரசி டயானாவின்வடிவில்வந்து சேர்ந்தது.

ஆக, கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அரசிற்கு குரு, சந்திர யோகமான காலம். அரசாங்கம் இதை மிகவும் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டது. அதிர்ஷ்டம் இரண்டு தடவை வாயிற் கதவை தட்டுவதில்லை என்பதை நன்றாக உணர்ந்து வைத்திருந்தது சந்திரிகா அரசாங்கம்.

முடிந்தளவுக்கு நாசூக்காக தான் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்தது.

பாண் விலையை ஏற்றியது முதல் மருத்துவ உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தத்தைப் பிசுபிசுக்க செய்ததுவரை அது பல சாதனைகளை செய்து முடித்தது.

வன்னியில்நடந்து கொண்டிருக்கும் "ஜயசிக்குறு"வின் களத்திலிருந்து அம்புலன்ஸ் வண்டியில் வந்திறங்கிக் கொண்டிருக்கும் சடலங்களையும் காயப்பட்டவர்களையும் பற்றிய தகவல்களை யாரும் அக்கறைப் படாத ஒரு விடயமாக மாற்றி விட்டது. பத்திரிகைகளும்தமது அக்கறைக்குரிய மக்களையும், அவர்களது அக்கறைக்குரிய முக்கிய செய்திகளை வழங்கும் தமது பணியை செவ்வனே செய்து முடித்தன. சிம்பாப்வேயிலிருந்து புறப்பட்டு மடகஸ்காரில் காணாமல் போன கப்பல் பற்றிய தகவலையும் விட ஜெயசூரிய 376 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைப்பாரா என்ற செய்தியே எமக்கெல்லாம் முக்கிய செய்தியாகிவிட்டது.

டயானாவின் இறப்பு எமக்கு ஏற்படுத்திய அதிர்ச்சியும்இளவரசர் ஹரி தேவாலயத்தில்விம்மி விம்மி அழுததும் எம்முடைய நெஞ்சை உருக்கி விட்டன. இந்தக் கவலைக்கு மத்தியில்கிழக்கில் முஸ்லிம்களது படகுகளைகளை எமது முன்னாள் விடுதலை இயக்கமொன்று எரித்ததையோ அல்லது வடக்கிலே 'ஸ்ரிஞ்சர்' ஏவுகணை பற்றி கூறி மிரட்டியபடி அரசாங்கம் வவுனிக்குளம் தேவாலயத்தில்குண்டுபோட்ட விடயமோ எமக்கு முக்கியமானதாகப்படவில்லை.

நாம் ஒன்றில் மகிழ்ச்சியில் குதூகலித்துக்கொண்டோ அல்லது அதிர்ச்சியில் விறைத்துப்போயோ இருந்தோம்.

அரசாங்கத்துக்கு அடுத்தடுத்து வந்த அதிர்ஷ்டங்கள்இவை...

வரலாற்றில் இப்படியான அதிர்ஷ்டங்கள் அடுத்தடுத்து ஒரு அரசாங்கத்துக்கு வாய்ப்பது அருமையிலும்அருமை. அதிலும்எப்படிக் காலத்தை ஓட்டுவது என்று தவித்துக்கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்துக்கு இப்படியான ஒரு அதிர்ஷ்டம் கிடைத்ததை விட அதிர்ஷ்டம்வேறு இருக்க முடியாது.

ஆனால்,

இவ்வளவு அதிர்ஷ்டங்களையும்மீறி ஒரு உண்மை இருக்கிறது. ஆம், அதிர்ஷ்டங்கள் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்துகொண்டிருப்பவை அல்ல என்பது தான் அது. அப்படி அடிக்கடி வரும் போது, அவற்றை அதிர்ஷ்டமாக யாரும்கருதுவதுமில்லை.

எதிர்வரும் நவம்பர் மாதத்துள் பாராளுமன்றத்தில் தீர்வுப் பொதியை சமர்ப்பிக்கப்போவதாக திரும்பத் திரும்பக் கூறி வருகிறது அரசாங்கம். இன்றைய இந்தத் தீர்வுப் பொதி தமக்கான அரசியல் தீர்வை வழங்கும் என்று தமிழ்மக்கள்நம்புகிற அதிர்ஷ்டம் ஒன்று நடக்குமென்று நம்பினால், அப்போது தான் அரசாங்கத்தின் குரு, சந்திர யோகம், கூரையைப் பிய்த்துக்கொண்டு ஓடும்நிலை ஏற்படும்.

அதிர்ஷ்டங்கள், வாய்ப்புகளோடு சம்பந்தப்பட்டவை என்பதால், வாய்ப்பே இல்லாத விடயத்தில் அதிர்ஷ்ட வாய்ப்புக்கு இடமே இல்லை.

அரசுக்கு இது புரிகிறதோ இல்லையோ, இது புரிய வேண்டும் என்பதை மட்டும் சொல்லி வைக்கலாம்.

மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அண்மைய அறிக்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்து தெரிவித்துள்ள கண்டனமும் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் தெரிவித்துள்ள நம்பிக்கையீனமும் அரசாங்கத்தின் அத்திவாரம் கொஞ்சம் கொஞ்சமாக துருப்பிடித்து வருவதைக் காட்டுகிறது...

இதைப் புரிந்து கொள்ள மறுத்து அரசாங்கம் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்து தொடருமானால், அதற்குப்பிறகு அதைக் காப்பாற்ற கடவுளுக்கும் முடியுமோ என்பது சந்தேகம் தான்.

அரசாங்கத்துக்கு சாமரம் வீசியபடி. சமாதானப் பாதையில் முன்னேறி வருவதாக மதியுரை கூறிவரும்சமாதான விரும்பிகளுக்கும் இது விளங்கிக் கொண்டால்நல்லது.

இதற்கு மேல் எதைச் சொல்ல. அதிர்ஷ்டம் இருந்தால் இன்னொரு தடவை அரசாங்கத்தின் அதிர்ஷ்டத்தைப்பற்றி எழுதுவோம்.





# இரண்டும் ஒன்றுதான்

மட்டக்களப்பில் நஞ்சு கலக்கப்பட்ட சாராயத்தைக் குடித்து அறுபதற்கும் மேற்பட்டோர் மரணமான செய்தி, முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் ஒரு செய்தியாக வெளிவந்திருந்தது.

சாராயத்தில் தண்ணீர் கலப்பதும், 'ஸ்பிறிற்' கலப்பதும் ஒன்றும் புதிய காரியம் அல்ல. காலம் காலமாக நடந்து வருகிற ஒரு விடயம்தான். சாராய வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்க வழமையாக செய்கிற ஒரு செயல்தான்.

வித்தியாசம் என்னவென்றால் இம்முறை அவர்கள் கொஞ்சம் அதிகம் கலந்துவிட்டார்கள். தண்ணீருக்குப் பதிலாக அதிகளவு 'ஸ்பிறிற்றை' கலந்துவிட்டார்கள் அவ்வளவுதான்!

எல்லாப் பத்திரிகைகளும் இந்த அநியாயத்தையிட்டு அதிர்ச்சியுடன் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் ஐலண்ட் பத்திரிகை மட்டும் இப்படிக் கலக்கப்பட்டதற்கு ஒரு புதிய காரணத்தையும் கண்டுபிடித்து எழுதியிருந்தது.

இந்த சாராயத்தை இராணுவத்தினர் பாவிக்கலாம் என்பதற்காக புலிகளே இவற்றுக்குள் விஷத்தைச் சேர்த்திருக்கலாம் என்று ஒரு பொலிஸ் அதிகாரியை மேற்கோள்காட்டி அது தனது மூன்றாம் திகதிய தலைப்புச் செய்தியில் செய்தி வெளியிட்டிருந்தது.

ஐலண்ட் பத்திரிகைக்கு எந்தச் செய்தியிலும் ஏதாவது ஒரு விதத்தில் புலிகளைச் சம்பந்தப்படுத்தி எழுதுவது, அல்லது தமிழர்களைச் சம்பந்தப்படுத்தி (தமிழர்கள்புலிகள் என்பது அதன் 'தியரி') எழுதாவிட்டால் தலை வெடித்துவிடும்.

சாதாரண செய்திகளை எழுதும் போது அது 'தமிழர்கள்', 'தமிழ் இளைஞன் ஒருவன்' என்ற தகவலைச் சேர்க்காமல் எழுதுவதில்லை. அதுவும் முன்பக்கச் செய்தியாகப் போடும் போதும் கூட அது - தகவல் உண்மையோ, பொய்யோ என்பது முக்கியமில்லை. எழுதிவிடும். விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டால், அது மிகச் சாதாரண சந்தேகத்தின் பேரிலான கைதாக இருந்தால் கூட, 'ஒரு தமிழர் கைது' என்று கூறி இன அடையாளத்தை வெளிப்படுத்துவதில் மிகவும் அக்கறை காட்டும்.

ஒரு நாடு, ஒரே மக்கள் - இது இலங்கை - நாம் இலங்கையர் என்ற முழக்கத்தை ஜனாதிபதி ஒரு புறம் உயர்த்திப்பிடிக்க, மறுபுறம் இப்பத்திரிகை 'இன அடையாளத்தை' வெளிப்படுத்துவதில் அக்கறையாக இருந்து வருகிறது...

'எவ்வளவு துயரமான நிலைமை' என்று சலிப்புடன் சொன்னேன் எனது நண்பர் ஒருவரிடம், அவர் சொன்ன பதில் வேறுவிதமாக இருந்தது.

'இரண்டும் ஒண்டுதான். ஜனாதிபதி ஒரே இனம் என்று சொல்லி இங்கே இருக்கின்ற எங்களின்ரை தனித்துவத்தை இல்லாமல் பண்ணுகிறார். எல்லாம் ஒரே இனம் எண்டு சொல்லுறதுக்கு அடுத்ததாக வரப்போற வசனம் அந்த ஒரு இனம் சிங்கள இனம் என்பதுதான்...! ஐலண்ட் பத்திரிகை சொல்லுவதும் அதுதான். இந்த நாட்டிலை இருக்கிறது சிங்கள இனந்தான். அநியாயம் செய்ய வெண்டும் ஒரு இனம் இருக்குது.. அது தமிழ் இனம்... ஆக, இரண்டும் ஒண்டுதான்.

''ஆனால் ஜனாதிபதிக்குத்தான் 'ஐலண்டை'ப் பிடிக்காதே...''

''புலிக்கு மட்டுமல்ல சிங்கத்துக்கும் தான் புல்லுத்தின்னப் பிடிக்காது. அதுக்காக சிங்கத்துக்கு சிறுத்தையைப் பிடிக்குமெண்டில்லையே...''

எனக்கு புரிகிறது போலும் இருந்தது. புரியாதது போலும் இருந்தது. தலையை ஆட்டி வைத்தேன், மௌனமாக.

# இவர்களும் தான்

ஜனநாயகம், சமாதானம் போன்ற விடயங்களில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒரு பத்திரிகையாள நண்பரை அண்மையில் சந்தித்தேன்.

நாட்டில் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் குறித்து மிகுந்த அக்கறையுடன் இயங்குபவர் அவர்.

நடந்துகொண்டிருக்கும் யுத்தம் மக்களின் உயிரைக் குடிக்கிறது, அவர்களது சொத்துக்களை நாசமாக்குகிறது, அவர்களை அநாதைகளாக அகதிகளாக மாற்றி நடுத்தெருவில் நிறுத்துகிறது, யுத்தம் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் ஒரு தீர்வாக அமைய முடியாது என்பவற்றில் எல்லாம் அவருக்கு அசைக்க முடியாத கருத்துக்கள் உண்டு.

உரையாடலில் இடையே, 'அப்படியானால், யுத்தத்தை நிறுத்துமாறு நீங்கள் ஏன் கோரிக்கை முன்வைக்கக்கூடாது' என்று அவரிடம் கேட்டேன். யுத்தம் நிறுத்தப்படுவது சமாதான முயற்சிகளுக்கு தவிர்க்க முடியாத ஒரு முன் நிபந்தனை என்பது எனது அபிப்பிராயம்

ஆனால், அதிர்ச்சியூட்டும் விதத்தில் அந்த நண்பரின் அபிப்பிராயம் வேறாக இருந்தது.

யுத்தத்தை நிறுத்துமாறு இப்போது யுத்தவாதிகளான புலிகள் இயக்கத்தினரும் கூட கோருகிறார்கள். யுத்தத்தில் பலவீனப்பட்டு இருக்கும் அவர்களுக்கு இன்னொரு யுத்தத்துக்கான தயாரிப்பில் ஈடுபட வாய்ப்பளித்ததாகிவிடக்கூடியது என்பதால் யுத்தத்தை நிறுத்துமாறு கோருவது ஒரு சரியான கோரிக்கை அல்ல என்றார் அவர்.

''ஆனால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே!''

''உண்மைதான். எனவேதான் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தும் வேலையில் தீவிரமாக இறங்கவேண்டும் என்று நாம் கூறுகிறோம். இதன் மூலமாக யுத்தத்தை தேவையற்ற ஒன்றாக ஆக்கமுடியும்...''

''ஆக, யுத்தத்தால் ஏற்படும் அனர்த்தங்களை விடவும் முக்கியமானது யுத்தவாதிகளான புலிகள் முறியடிக்கப்படுவது என்று சொல்லுகிறீர்கள்''

''ஆம்''

''அப்படியானால், புலிகள் ஒருகால் முறியடிக்கப்பட்டு விட்டபின் யுத்தம் தொடராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?''

''அதற்குப் பிறகு யுத்தத்தை நடத்தவேண்டிய தேவை என்ன இருக்கிறது?''

''ஏன், அரசாங்கத்தின் முப்படைகளும் இருக்கின்றனவே? யுத்தம் இல்லாமல் புலிகளுக்கு இருக்க முடியாது என்றால், அவர்களுக்கு மட்டும் முடியுமா?''

நண்பர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்:

''எப்படி இருந்தாலும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை வைப்பது அதுவும் இந்த நிலையில் முன்வைப்பது புலிகளுக்கு வாய்ப்பளிப்பதாகவே இருக்கும்''

நான் பிறகு பேசவில்லை. 'யுத்த நிறுத்தத்தை ஆயுத வியாபாரிகள், யுத்தவாதிகள், ஆதிக்க வாதிகள் மட்டும்தான் விரும்பவில்லை என்பது தவறு. ஜனநாயக, சமாதான விரும்பிகளும் கூட அதை விரும்பவில்லை என்பது மனதில் ஒரு நெருடலாக உறுத்திற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சடலத்தில் முளைக்கும் கைக் குண்டுகளும், துப்பாக்கிகளும்

| | | | |
|---|---|---|---|
| 25.08.1997 | எஸ். லெச்சுமிகாந்தன் | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் | களுவாஞ்சிக்குடி பொலிஸ் |
| 23.08.1997 | எஸ். சிவகுமார் | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் | ஜெயந்திபுர பொலிஸ் |
| 21.08.1997 | என். நடேசானந்தம் | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் | ராசிக்குழு |
| 21.08.1997 | டி. செல்வம் | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் | ராசிக்குழு |
| 21.08.1997 | சு. சுந்தரலிங்கம் | துப்பாக்கிச்சூட்டினால் மரணம் | வேலவெட்டை இராணும் |
| 21.08.1997 | எஸ். செல்வதுரை | காணவில்லை. | இராணுவத்தால் கைது |
| 21.08.1997 | இ. சீனித்தம்பி | காணவில்லை. | இராணுவத்தால்கைது |

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு ஏவப்படும் எறிகணை வீச்சுக்கள் நகரின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை காலமும் இராணுவத்தினரே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு வந்துள்ளனர். ஆனால், இன்று புலிகளும் இதற்கு எதிரான பதில் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கிய பின்பே இராணுவத்தினர் ஒரு பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஓகஸ்ட் 24ம் திகதி பி.ப. 5.52 மணியளவில் புலிகளால் வீசப்பட்ட எறிகணை மட்டக்களப்பு 3வது பிரிகேட் இராணுவத் தலைமைச் செயலகத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு, ஐந்து இராணுவத்தினருக்கு கை, கால் கழற்றவேண்டிய நிலையிலும் மேலும் 13 இராணுவத்தினர் படுகாயங்களுடனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். புளொட் முகாமில் வீழ்ந்த எறிகணையால் 6 பேர் காயமடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து கல்லடி முகாமை மையப்படுத்தி வீசப்பட்ட எறிகணை, முகாமை அண்டிய மக்கள் வா்மும் இடத்தில் விழுந்ததால் ஒருவர் கொல்லப்பட்டு 18 பேர் காயமடைந்துள்ளனர். இந்த எறிகணைத் தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு உடல், உள ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இரவு நேரத்திலோ, பகலிலோ முகாமில் நிம்மதியாக இருக்க முடியாத நிலைமை. எதிர்காலத்தில் இந்த எறிகணைத் தாக்குதலின் பரிணாம வளர்ச்சி எவ்வாறிருக்குமோ என்ற ஒரு பயவுணர்ச்சி இராணுவத்தினருக்கு உளவியல் ரீதியான பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

3வது பிரிகேட் இராணுவ தலைமை அலுவலகத்தில் எறிகணை வீழ்ந்து வெடித்தது 3வது தடவையாகும். ஏற்கெனவே இவ்வாறு வீழ்ந்ததாலேயே கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியின் அலுவலகம் வெலிக்கந்தைக்கு மாற்றப்பட்டது. இச்சம்பவத்தின் போது பதிலுக்கு இராணுவம் மேற்கொண்ட எறிகணை வீச்சில் கன்னங்குடாவைச் சேர்ந்த யோ. ஜதுர்ராஜா என்ற இளைஞன் கொல்லப்பட்டு ஒருவர் காயம் அடைந்துள்ளார். இவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிவந்த உழவு இயந்திர சாரதி இ. சேகரம் வவுணதீவு இராணுவத்தினரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்றைய நிலையில் ஏனைய தமிழ் இயக்கங்கள் மக்களுக்கெதிரான அடாவடித்தனங்களை, பாலியல் வன்முறைகளை செய்கின்ற வேளையில் புலிகள் எது செய்தாலும் சரி என்று மக்கள் ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை வளர்கின்றது.

புலிகள் நகருக்குள் இவ்வாறு எறிகணை வீச்சுக்களை நடத்துவது தாம் தோல்வியடைந்து வருவதை மூடிமறைக்கவே என்று இராணுவம் கூறிவருகிறது. யுத்தமானது மோசமான கட்டத்தை நெருங்கிவிட்டது என்ற உண்மையை மறுக்கும் கையாலாகாத்தனமே இராணுவத்தின் இக்கூற்று என்கிறார் மட்டக்களப்பு நகரின் ஒரு அரச அதிகாரி.

அண்மையில் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதி ஒருவர் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியைச் சந்தித்த போது இன்னமும் ஏழு வருடங்களில் வட-கிழக்கில் எந்தவொரு தமிழ் மக்களும் இருக்கப் போவதில்லையென்று கூறினாராம். இந்த நிலையில் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்கின்றபோது பொது மக்களும் கொல்லப்பட வேண்டும் என்பதற்காக இராணுவம் சன நெருக்கடியான பகுதிகளில் நிலை கொள்ளலாம் என்ற ஒரு அச்சம் பரவலாக அடிபடுகின்றது.

இது இவ்வாறிருக்க நகரை அண்டிய பகுதிகளிலும், செங்கலடி, கொம்மாந்துறை, வந்தாறுமூலை ஆகிய பகுதிகளிலும் அப்பாவி இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டும், தடுத்துவைக்கப்பட்டும் வருகின்றனர்.

23.08.1997 அன்று எஸ். சிவகுமார் என்ற இளைஞர் ஜெயந்திபுர பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் ஜெயந்திபுர பொலிசாரினால் பி.ப.6.30 மணியளவில் தடுத்து வைக்கப்பட்டு இரவு 11.45 மணியளவில் கருவேப்பம்கேணி பாடசாலை வளவிற்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். 24ம்திகதி காலை இவரது சடலத்தை எடுத்துச் சென்று முகாமுக்கு முன் வைத்து அருகில் கைக்குண்டுகளையும், துப்பாக்கியையும் போட்டு இவர் புலி என்றும், இவர் தங்களை தாக்குவதற்காக வந்தவர் என்றும் கூறினர்.

இதேபோன்று 25.8.1997ல் பட்டிருப்பு பாலத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த எஸ். லட்சுமிகாந்தன் பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இதேவேளை பட்டிருப்பு பாலத்துக்கு அப்பால் வதிவிடமாகக் கொண்டவர்களையும், இப்பகுதியில் கடமைபுரியும் ஊழியர்களையும் தவிர வேறு எவரும் இப்பகுதிக்கு செல்லக்கூடாது என களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரும் பொலிசாரும் தெரிவித்துள்ளனர். போரதீவு, பழு காமம் பகுதிகளில் இருந்து நகருக்கு வந்து செல்பவர்கள் பாலத்தைக் கடக்கும் தண்டனையாக பொலிசாருக்கு மண்மூடை நிரப்பிக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தண்டனையாக அடியும் உதையும் கொடுக்கப்படுகின்றதாம். களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் அரச ஊழியர்களுடனும், மாணவர்களுடனும் மிகவும் மோசமான முறையில் நடந்து கொள்கின்றனர். இவர்களது கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளை சுற்றி வளைத்து கைது செய்யப்படும் அனைவரும் அரச ஊழியர், மாணவர்கள் என்ற பேதமின்றி பிரதி ஞாயிறு தோறும் முகாமுக்கு கையொப்பமிடச் செல்ல வேண்டும். இதனால் வெளிவாரியாக பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு கையொப்பமிடச் செல்பவர்களை படையினரின் மலசல கூடம் கழுவ வைப்பதற்கும், விறகு வெட்டுவதற்கும், முகாமை ஒட்டடை அடித்து துப்பரவு செய்வதற்கும் குழுக்களாக பிரித்து விடுகின்றார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அண்ணளவாக 130பேர் வரை கையொப்பம் இடச் செல்கின்றனர். இதனால் ஞாயிறு விடுப்பு தினமும் அரச ஊழியர்களுக்கு வேலை நாளாக மாறிவிட்டது. ஏனைய நாட்களில் அலுவலகத்திற்கு சென்று கையொப்பமிட்டு அலுவலக வேலை செய்யவேண்டும். ஞாயிறு தினத்தில் படையினரிடம் கையொப்பமிட்டு இவர்களுக்கு அடிமை வேலை செய்ய வேண்டியது, தமிழரின் தலைவிதி என வங்கி ஊழியர் ஒருவர் சலித்துக் கொண்டார்.

21.08.1997 அன்று ஏறாவூரைச் சேர்ந்த செல்வம், மகிழவெட்டுவானைச் சேர்ந்த நடேசானந்தம் (17) என்ற இருமாணவர்கள் ராசிக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் நடேசானந்தம் ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆண்டு 11 இல் கல்வி கற்கின்றார் இவர்கள் என்ன காரணத்துக்காக சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது தெரியாத ஒரு விடயமாகவே இருக்கின்றது.

கதிரவெளிக்கு மேற்குப் பக்கமாக உள்ளதும், பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்ததுமான வேலவெட்டை என்ற இடத்துக்கு மீன்பிடிக்க சென்ற சு. சுந்தரலிங்கம் என்பவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இவரோடு சென்ற சி. செல்வதுரை, இ. சீனித்தம்பி என்ற இருவரும் இதுவரை வீடுதிரும்பவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியாது.

25.08.1997 அன்று கூழாவடி, மாமாங்கம் ஆகிய இடங்கள் இராணுவத்தினராலும், ராசீக் குழுவினராலும் சுற்றி வளைக்கப்பட்டு, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இங்கு அனைவரதும் அடையாள அட்டைகளைப் பார்த்து விடுவித்த பின்னர் குறிப்பிட்ட சில ஆண்களும் பெண்களும் தடுத்து வைக்கப்பட்டு வித்தியாலய வளவுக்குள் வைத்து ஒவ் வொரு ஆணினதும் பெண்ணினதும் அங்கிகள் கழற்றப்பட்டு சோதனை செய்யப்பட்டது. பெண்களை பெண் இராணுவத் தினர் சோதனை செய்தனர். இருந்தாலும் சோதனைக்குப் பயன்படுத்தப்பட்ட இடம் திறந்த வெளியாக இருந்ததே விசனத்துக்குரியதாகும்.

மதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வாசு வாக்கு மூலம் ! மங்கள

**பொ.**ஐ.மு அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அளித்த வாக்குறுதிகளில்ஒன்றுதான்ஆட்சிக்கு வந்ததும் "தொழிலாளர் சாசனத்தை அமுல்படுத்துவோம்" என்பது. பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. அதனது எல்லா வாக்குறுதிகளையும் போலவே தொழிலாளர் சாசனமும் கிடப்பில் போடப்பட்ட விடயமாயிற்று. இங்கே பொ.ஐ.மு.வின்முக்கிய அமைச்சர்களுள் ஒருவரான மங்கள சமரவீர தொழிலாளர் போர்ாட்டங்கள் குறித்து என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறார் என்பதை பொ.ஐ.மு.வின் இன்னொரு எம்.பியான வாசுதேவ நாணயக்கார லங்காதீபபத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். அந்தக் கேள்வியையும் பதிலையும் படித்துப் பாருங்கள்.

**நீங்கள் டபிள்கேம் காரரா என்ற சந்தேகத்தை எவராவது எழுப்பினால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? பகலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நீங்கள் இரவில் உங்கள் கொள்கையை மாற்றிக் கொள்கிறீர்கள் எனவும் உங்கள் பிள்ளைகள் கல்வி கற்று தொழில் செய்வது அமெரிக்காவில் எனவும் கேள்விப்படுகிறோம்.**

நான் காலியில் பாடசாலைக்குச் செல்லும் காலத்திலேயே அரசியலுக்கு வந்தேன். அன்றில் இருந்து நான் போடுவது டபிள் கேமா?ட்ரபிள் கேமா? என மக்களுக்குத் தெரியும். அதனால் அமைச்சர் மங்கள சமரவீரவினதோ அல்லது வேறு எவரினதோ குற்றச் சாட்டுக்களுக்கு பதிலளிப்பதில் அர்த்தம்இல்லை.

மங்கள சமரவீர 1989ஆம் ஆண்டில் தான் பாராளுமன்றத்துக்கு வந்தார். தொழிலாளர் வர்க்கமென்று ஒன்று இல்லயென ஒரு நாள் அவர் கூறினார். நான் அதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருந்தேன். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கத்துக்காகப் போராடி சிறை சென்றவன் நான் எனக் கூறியபோது நானென்றால்அவ்வாறான முட்டாள்தனம் எதனையும் செய்ய மாட்டேன் என மங்கள சமரவீர கூறினார். நான் அவரது நிலைப்பாட்டை அறிந்து கொண்டது அன்றுதான்.

**அவ்வாறெனின் உங்களுக்கும் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு மிடையில் கடந்த சில தினங்களுக்கு முன் ஏற்பட்டது இடதுசாரிகள் வலதுசாரிகள் என்ற கொள்கை ரீதியான முரண்பாடேயன்றி தனிப்பட்ட குரோதம் ஏதும் இல்லையென நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். இன்று நிலவும் உலகப் பொருளாதார யதார்த்தத்தினுள் நீங்கள் பிற்போக்குவாதி எனவும் தான் முற்போக்குவாதியெனவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

முற்போக்குவாதி யார்? பிற்கோக்குவாதி யார் எனவரலாறே தீர்மானிக்கும். தாழ்ந்த சமூகமொன்றிலிருந்து அதனை விட வளர்ச்சியடைந்த சமூகமொன்றுக்குச் செல்வதே முற்போக்கு எனப்படும். பண்ணையடிமை யுகத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு வருவதும்முற்போக்கானதே. முதலாளித்துவத்தினுள் முற்போக்குக்கால கட்டம் இருந்தாலும் அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்று உள்ளதோ விகாரமான உலகமயப்படுத்தலுக்கும் பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டும் ஆதிக்கத்துக்கும்வழி விடுத்துள்ள நிலைமையே. முதலாளித்துவ முற்போக்குவாதத்தின் அடிப்படைக்குறிக்கோளானது போட்டா போட்டியாகும்ஆனால்இன்றுஇருப்பதோ ஆதிக்கமேயன்றிப் போட்டா போட்டியல்ல. வீழ்ச்சியடையும் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டத்திலேயே சிலர் இக் கரணம் அடிக்கின்றனர். ஐ.தே.க. செய்த விளையாட்டையே இவர்களும் காட்டுகின்றனர். அன்று நடைபெற்ற சமூக அழிவு இன்றும் நடைபெறுகின்றது. இந் நிலைமை முற்போக்கானதா? பிற்போக்கானதா என இவ் அழிவுக்குள் சிக்கியுள்ள மக்கள் தீர்மானிப்பர்.

அதனால் எனக்கும் மங்கள சமரவீரவுக்குமிடையில் மட்டுமல்ல எஸ்.பீ.திஸாநாயக்க, சீ.வி.குணரத்ன, கிங்ஸ்லிரீ.விக்கரமரத்தின, இந்திக்க குணவர்தன போன்ற அமைச்சர்களுடனும் கூட எனக்குப் பாரிய கொள்கை முரண்பாடுகள் உள்ளன. ஜீ.எல்.பீரிஸ் அக் கோஷ்டியின் புரோகிதரென்றாலும் கடும் செயற்பாட்டாளரொருவர் அல்ல. லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் அதன் அனுதாபிகளே. நிமல்சிறிபால டி சில்வா போன்றோர் அதன் இரு பக்கத்தில் வேண்டிய பக்கத்துக்கு இழுத்து கொள்ளக்கூடியவர்கள். மேற்கூறிய இக் கோஷ்டியினர் திறந்த பொருளாதாரத்தின்பெயரால்ஏகாதிபத்தியவாதிகளின் புதிய திட்டத்தையே இவ்வாறு செயற்படுத்துகின்றனர். அவ்விடத்தில் அவர்களுன்பெரும்மோதலை ஏற்படுத்த வேண்டி ஏற்படும். நான் அந் நிலமையையே சுட்டிக் காட்டுகிறேன்.

இதுவாசுலங்காதீபவுக்கு வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி. தொழிலாளர் தொடர்பாக, இந்த அரசாங்கம் எவ்வாறான கொள்கையைக்கடைப்பிடிக்கப் போகின்றது, என்பதை இப்பேட்டி உணர்த்துகிறது. இதற்கு மேலும் பொ.ஐ.மு. தொழிலாளர் சாசனத்தை நடைமுறைப்படுத்தும் என்று நம்புபவர்களை என்னவென்பது?

# தமிழரா? விமான நிலையத்தில் அனுமதி இல்லை!

**த**மிழ்மக்களுக்கெதிராக இடம் பெற்றுவரும்சம்பவங்களில்வெளிநாடு செல்வதைத்தடுத்தல்என்பது புதிதாக இணைந்துள்ளது. கடந்து 7.7.97 அன்று வெளிநாடு செல்லவிருந்த பலர் விமான நிலையத்தில் வைத்து கடவுச்சீட்டுப் பறிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

சகல ஆவணங்களுடனும், உரிய முறையில் தாய் எயர்வேய்ஸில் பாங்கொக் நோக்கி செல்லவிருந்த பல தமிழர்கள் எதுவித நியாயமான காரணமுமின்றி விமான நிலைய அதிகாரிகளின் கெடுபிடிக்குள்ளாகியிருக்கின்றனர். இவர்களது கடவுச் சீட்டுக்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பலர் சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் பாதிப்புற்ற நந்தினி (22 வயது. கடவுச் சீட்டு இல: டு 0703529) என்ற பெண்மணியின் மாமனாரான ஜெகநாதன் என்பவர் தனது மருமகளுக்கு நேர்ந்த அவலம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்தைக் கோரியுள்ளதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளார்.

கொழும்பு பொலிஸாரினாலும் புலனாய்வுத் துறையினராலும் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைக் காண்பித்தும் தனது கடவுச் சீட்டு பறிக்கப்பட்டு தடைப்படுத்தப் பட்டதாகவும் இதனால் தனக்கு வெளிநாட்டில் நடக்கவிருந்த திருணத்தில் தடையேற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட பல உயர் அதிகாரிகளின் அசட்டையும் தமிழர்களை அவர்கள் நடத்தும் முறைமையும் சுட்டிக காட்டப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டை பறிமுதல் செய்தவர்கள் அதனை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளனர். அங்கு போய் விசாரித்த போது எதுவித காரணமும் சொல்லாமல் இழுத்தடித்துள்ளனர். இது தொடர்பாக இத்திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு எழுத்துமூல முறைப்பாடு செய்தும், அவரிடமிருந்து எதுவித பதிலும் வரவில்லை எனத் தெரிகிறது. அத்துடன் இச்சம்பவத்துடன் தொடர்புற்ற இலஞ்ச, ஊழல் கரங்கள் பற்றிய முறைப்பாடொன்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப் பட்டுள்ளது. அத்திணைக்களம் மாத்திரமே இது தொடர்பாக தனது பதிலை அனுப்பியுள்ளது. அதுவும் இவ்விடயம் தமது கட்டுப்பாட்டுச் செயலுக்கு அப்பாற்பட்டதென்றும், இது தொடர்பாக தாம் எதுவும் செய்ய முடியாததால் இதனை குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப் பாட்டாளரிடமே தாம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

விமானநிலையத்தில் இவ்வாறு கடவுச்சீட்டுக்களை பறிமுதல் செய்த வேளையில் பணம் வைத்திருந்த பலர் அங்குள்ள அதிகாரிகளுக்கு 'சந்தோஷம்" கொடுத்து அவற்றை மீளப்பெற்றுச் சென்றுள்ளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாதங்கள் இரண்டாகியும் கடவுச்சீட்டு திருப்பி வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதை சுட்டிக்காட்டி ஜெகநாதன் கட்டுப்பாட்டாளருக்கு எழுதிய கடிதத்தில் கடவுச்சீட்டை பறிமுதல்செய்வதாயின்ஒரு நீதிபதியின் உத்தரவின் பேரில்மட்டுமே செய்யப்பட முடியும் என்றும் அதைப் பறிமுதல் செய்யும்அதிகாரம்குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு கிடையாது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடவுச்சீட்டு இப்பொழுது தயாரணசிங்க என்ற உதவிக் கட்டுப்பாட்டாளரிடம் இருப்பதாகவும் அவர் அதை திருப்பித்தராமல்இருக்க பல சாட்டுக்களை சொல்லிவருவதாகவும் இக் கடிதம் குற்றம் சாட்டியுள்ளது.

கடவுச்சீட்டை உடனடியாக கையளிக்காவிடில் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அக்கடிதத்தில் ஜெகநாதன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரத்தமும் சதையுமான ஒரு பெண்.



''**மு**ன்னொரு காலத்திலே... ஒரே ஒரு ஊரிலே.,. ஒரே ஒரு ராச குமாரியாம்...'' என்று தொடங்குகின்றன, எமது பெரும்பாலான பாட்டிக் கதைகள். எல்லா இடங்களிலும் பாட்டிக் கதைகள் இவ்வாறு தான் அமைந்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் வேல்ஸ் இளவரசி டயானாவுக்கு இவ்வளவு செல்வாக்கு எங்கிருந்து வந்தது?

சாதாரண பாலர் பாடசாலை ஆசிரியையான டயானா கார் விபத்தில் இறந்து போயிருந்தால் இவ்வளவு பெரும் அனுதாப அலை எழுந்திருக்குமா? அவர் அரச குடும்பத்தில் கல்யாணம் செய்யாதிருந்தால், தனது கணவனுடன் மனஸ்தாபப்பட்டதை இட்டும், தற்கொலை செய்ய முயன்றதையிட்டும் புத்தகங்கள் எழுதப்பட்டிருக்குமா? அல்லது அவரது அந்தரங்க வாழ்க்கையைப் பத்திரிகைகள் அலசி ஆராய்ந்திருக்குமா? அதை வைத்தே பணம் சாம்பாதிக்க முயன்றிருக்குமா?

இளவரசர் சார்ள்ஸை காதலிக்க ஆரம்பித்த பின்னரே டாயனா உலகின் கவனத்தை ஈர்த்தார். ஆனால் அரச குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களை விடவும் செல்வாக்கு பெருகியது எவ்வாறு?

டயானா மனித குலத்துக்கு செய்த சேவைகள் ஏதோ கொஞ்சம் தான். எமது நாட்டு வைத்தியசாலை ஒன்றிலுள்ள சாதாரண தாதி டயானாவை விடவும் அதிகளவு சேவை செய்கின்றார்.

அரச குடும்ப அங்கத்தவராகிவிட்ட பின்னரும் டயானா சாதாரண மக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அவர்களுடன் சுமுகமாகப் பேசினார். அரச மிடுக்கு அவரிடம் இருக்கவில்லை. கல் நெஞ்சுக்காரியாக இருக்கவில்லை. சாதாரண மக்களைத் தொட்டுப் பேசினார். அதன் மூலம் அவர்களது இதயத்தைத் தொட்டார். அவர் வித்தியாசமான இரர்ஜகுமாரியாக இருந்தார். பாட்டிக் கதைகளில் வரும் இராசகுமாரிகளைப்போல் அவருடன் மானசீகமாக உரையாட எமக்கெல்லாம் முடிந்தது. அரச குடும்பம் பற்றிய பிரமைகள் உடைந்தன. அதனாலேயே டயானாவின் செல்வாக்கு ஏனைய அரச குடும்ப அங்கத்தவர்களிலும் பார்க்க மிக மிக அதிகரித்தது.

அவர் நேர்மையாக இருந்தார். தனது வேரிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள முயலவில்லை. அவரால் அது முடியவுமில்லை. அரச குடும்பத்தின் போலி கௌரவத்திற்கும், விறைப்புக்கும் அவர் அடி பணியவில்லை. ஆனால் அந்த அமைப்பு தருகின்ற சொகுசையும், ஆடம்பரத்தையும் அனுபவிக்க அவர் தயங்கவுமில்லை. அந்த அமைப்பின் உள்ளார்ந்த சீர்கேடான அம்சங்களும், முரண்களும் அவரைத் தொடர்ந்து துரத்திச் சென்று சித்திரவதை செய்தன. இறுதியில் கொன்றும் விட்டன.

மிகவும் சாதா்ரணமான ஒரு பணக்கார சீமாட்டியாக அவர் நேர்மையாக வாழ்ந்து விட்டுப் போயிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம். அவரது துன்பியல் முடிவுக்காக அனுதாபப்படலாம்.

அனேகமான பெண்களைப் போலவே அவரும் அவரது கணவனால் புரிந்து கொள்ளப்படவில்லை. கடைசியில் விவாகரத்து செய்து விட்டு தனக்கு பிரியமான வழியைத் தேடிப்போயிருக்கிறார். அத்துடன் அவரை நாங்கள் விட்டிருக்கலாம். ஆனால் நமது ''பாட்டிக் கதை பாரம்பரியம்'' விடவில்லை!

எமது பத்திரிகைகளும் யுத்தம், அழிவு, அரசியல் தீர்வு என்பன பற்றியே ஒவ்வொரு நாளும் எழுதி எழுதி அலுத்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த சமயத்தில் வந்தது டயானாவின் மரண அறிவித்தல்! நான்கு வர்ணப் படங்களுடன் அமர்க்களப்படுத்தி விட்டார்கள்.

ஒரு பத்திரிகை யானையுடன் டயானாவை ஒப்பிட்டிருக்கிறது. இருந்தாலும் இறந்தாலும் டயானா பத்திரிகைத் தீனி!


டயானா பற்றி பல புத்தகங்கள் வந்திருக்கின்றன. அவரது வாழ்க்கை வரலாற்றைத் தழுவி திரைப்படம் ஒன்றும் சமீபத்தில் வெளிவந்திருந்தது. இனியும் வரும். பாட்டிக் கதைப் பாரம்பரியம் தொடரும். மனிதனுக்குக் கதை கேட்கும் ஆசை உள்ளவரை இது நடந்து கொண்டேயிருக்கும்.

ஆழ்வார்க்குட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**பெண்கள் தொடர்பாக விடுதலைத் தாபனங்கள் எவ்வாறு நடந்து கொண்டன; கொள்கின்றன என்ற கேள்வி பெண்ணிலைவாத அமைப்புகளிடையே வலிமையாக உள்ளது. அண்மையில் ராதிகா குமாரசுவாமி எழுதிய கட்டுரைக்கு புலிகளின் அமைப்புக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் எதிர்வினைகள் வந்தன. இக்கட்டுரை ஜே.வி.பி. அமைப்பானது (மக்கள் விடுதலை முன்னணி) பெண்கள் உரிமைகள், பெண்ணிலைவாத சிந்தனைகள் என்ற கருத்தோட்டத்தில் எவ்வாறு இருந்தது என்பதை மீள்பார்வை செய்கிறது.**

**இது ஜே.வி.பியின் ஆரம்பகாலத் தலைவர்களுள் ஒருவரான கெலி சேனநாயக்காவின் மீள் பார்வையின் தமிழ் வடிவமாகும்.**

# ஜே.வி.பி.யும் பெண்ணியமும்

## ஒரு மீள் பார்வை

**கெலி சேனநாயக்கா**

*தமிழில் : மாஷா*

71ம் ஆண்டுக்கிளர்ச்சி அண்மைக்கால இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு மைல் கல்லாகும். இக்கிளர்ச்சியில் பெண்களின் பங்கு பற்றல் பற்றி எனது கருத்துக்களை விட மாறுபட்ட கருத்துக்களும் இங்கு இருக்கக்கூடும். ஆனால், இது பற்றி நான் வெளிப்படையாகப் பேச வேண்டும். அக்காலத்தில் ஜே.வி.பியின் ஆரம்ப காலத் தலைவர்களில் ஒருவன் என்ற வுகையில் பெண்கள் தொடர்பாக ஜே.வி.பியின் மனோபாவம் குறித்து விபரிக்க விரும்புகிறேன்.

71ம் ஆண்டு கிளர்ச்சியின் அரசியல் நடவடிக்கைகளில் மிகக்குறைவான பெண்களே பங்குபற்றினர். 71ம் ஆண்டு கிளர்ச்சியில் பங்கு பற்றியதாக குற்றம் சாட்டப்பட்டு கிட்டத்தட்ட 450பெண்கள் அரசால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

உண்மையில் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கையைக் கொண்டு கிளர்ச்சி நடவடிக்கையில் அவர்களின் பங்களிப்பு பற்றி கணிப்பிட முடியாது. இவ்வாறு கூறுவதன் மூலம் கட்சி உறுப்பினர்களின் தாய்மார், தங்கைமார், மனைவிமார் என நிறையப் பெண்கள் புரிந்த தியாகம், அனுபவித்த துயரங்கள் குறித்து நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என நினைக்கவேண்டாம். அவர்கள் செய்த தியாகம் அமரத்துவமானது.

மேற்சொன்னபடி அன்று கைது செய்யப்பட்டிருந்த 450 பெண்களில் பதினான்கு அல்லது பதினைந்து பேர்தான் இயக்கத்தின் முழு நேர உறுப்பினர்கள். 150 பேர் வரையில் ஜே.வி.பியால் நடாத்தப்பட்ட ஐந்து அரசியல் வகுப்புகளில் கலந்து கொண்டவர்கள். ஏனையவர்கள் ஜே.வி.பியின் முழு நேர உறுப்பினர்களின் மனைவிமார்கள், தாய்மார்கள், சகோதரிகள் போன்றவர்களாவார்கள். உங்களது மகனோ, சகோதரனோ, உறவினர் ஒருவரோ முன்னைய இயக்கம் ஒன்றின் உறுப்பினராக இருந்தால் உங்கள் வீடு கட்சி வேலைகளுக்கு திறந்து விடப்படும் தானே! நீங்கள் உண்ணவும், ஆதரவும் வழங்குவீர்கள். அரசியல் வகுப்புகள் உங்கள் வீடுகளில் நடாத்தப்படும். ஏன் சிலவேள்ளை ஆயுதங்களை மறைத்து வைக்கக்கூட உங்கள் வீடுகள் உதவியிருக்கும். இதுதான் இவர்களுக்கும் நடந்தது. பிற்பாடு இத்தகைய வீடுகள் அரச இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டன. வீட்டில் உள்ளவர்கள் கைது செய்யப்பட்டனர். சில பெண்கள் இறுதி வரையும் அகப்படாது இருந்தனர்.

ஜே.வி.பி கட்சியை உருவாக்கும்



பொழுதும், கிளர்ச்சியின் பொழுதும் பெண்களை உள்வாங்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது. ஜே.வி.பியின் முழுநேர உறுப்பினர்களுக்கு அதிகளவு பெண்களை கட்சியுடன் இணைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மாணவியர், க.பொ.த. உயர்தர மாணவியர், அலுவலகங்களில் பணியாற்றும் இளம்யுவதிகள் ஆகியோரையே அதிகம் இணைக்கமுறப்பட்டனர்.

**உண்மையில் ஜே.வி.பி; பெண்களை அமைப்புக்குள் உள்வாங்க விரும்பியதற்கான காரணம் பெண்ணியம் தொடர்பினாலான அக்கறையினாலோ பெண் விடுதலை தொடர்பான பிரக்ஞையினாலோ அல்ல.** பதிலாக புரட்சிகர அரசியல் இயக்கம் ஒன்றில் பெண்கள் பங்கேற்பு இன்றியமையாத ஒரு அம்சம் எனக் கருதப் பட்டதாலேயே. சீனப்புரட்சி உருவாக்கிய தாக்கமும், ஆர்வமும் பெண்களை புரட்சியுடன் இணைப்பதில் கட்சி உறுப்பினர்களிடையே மிகுந்த ஆர்வத்தை உண்டு பண்ணி இருந்தது. ஆரம்பகால இடதுசாரி இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பு பாரிய அளவினதாக இருந்த பொழுதும், 1966இல் இருந்து 71வரையும் பெண் உரிமை தொடர்பான கருத்தியல் ஜே.வி.பிக்கு அந்நியமானதாகவே இருந்தது.

இடதுசாரிகளின் காலத்தில் நாங்கள் 'சூரியமல்' இயக்கத்தைக் குறிப்பிடமுடியும். 1956 ஆண்டு கடையடைப்பு நடந்த பொழுது பெண்கள் வீதிகளில் ரொட்டி சுட்டதை நினைவு கூறலாம். அப்பெண்கள் மக்களின் எதிர்ப்புணர்வை வெளிக்கொண்டு வந்தார்கள். மேடைகளில் பேசினார்கள். ஸ்தாபன வேலைகளை ஆண் தோழர்களுடன் தோளோடு தோளாக நின்று பகிர்ந்து செயற்பட்டார்கள். ஆனாலும் உறுதியான இடதுசாரி பெண்தலைவர்களுக்கான தேவை இருந்தபொழுதும் அக்கால பெண் இயக்கங்களிலும் அம்முயற்சிகள் தொடர்ந்து வளர்ச்சி அடையவில்லை. இதேநிலைமையை ஜே.வி.பிக்குள்ளும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. இன்றுவரையும் உறுதியான பெண் தலைவர்கள் எவரும் இல்லையென்பதுடன் அவ்வாறு உருவாவதற்குரிய சூழ்நிலைகளும் இருக்கவில்லை எனலாம்.

இடதுசாரி இயக்கங்களுடன் ஒப்பிடும் பொழுது ஜே.வி.பிக்குள் பெண்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பற்றியது குறைவு. மறுபுறத்தில் 71ம் ஆண்டு கிளர்ச்சியில் இடதுசாரி இயக்கத்தைப் போல் அல்லாது பெண்கள் இராணுவக் குழுக்களில் பங்கு பற்றினர். ஆயினும், இங்கும் நிலவிய சூழ்நிலைகளும் பெண்களைத் தலைவர்களாக உருவெடுக்க விடவில்லை.

எனது ஞாபகசக்தியை முழுவதுமாக மீட்டிப்பார்க்கையில் ஐந்து அல்லது ஆறு பெண்கள் மட்டுமே அன்றைக்கு இயக்கத்தில் இருந்த செயற்பாட்டுக்குழுக்களில் இருந்தனர். மாவட்டக் கமிட்டியிலோ முடிவெடுக்கும் உயர் கமிட்டியிலோ பெண்களே இருக்கவில்லை.

ஜே.வி.பி. உருவாகத்தொடங்கியதில் இருந்து 71ம்ஆண்டு கிளர்ச்சிவரையுள்ள காலம் மிகவும் குறுகியது. இக்காலம் ஒரு அமைப்பு அரசியல் மிகவும் குறுகியது. இக்காலம் ஒரு அமைப்பு; அரசியல் ரீதியாகவும், பெண்கள் பிரச்சினை தொடர்பான கருத்துக்கள் ரீதியாகவும் தன்னை வளர்த்து கொள்ள போதாது என்பதும் கவனிக்கத்தக்கது. இதனாலும் பெண்ணை முடிவெடுக்கும் உயர் கமிட்டிகளுக்குள் இணைத்துக்கொள்ளும் தேவை உணரப்படாது போயிருக்கலாம்.

65ம் ஆண்டில் இருந்து 68ம் ஆண்டு வரை பெண் உறுப்பினர்களே கட்சிக்குள் இருக்கவில்லை. கட்சியின் முழுநேர உறுப்பினர்கள் மாவட்டங்களுக்குள் சென்று வேலை செய்ய ஆரம்பிக்கும் வரையும் கட்சிக்குள் இதே நிலைமை நீடித்தது. எனவே நீண்ட நாட்களின் பின் கட்சிக்குள் வந்த பெண்கள் அதற்கும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் முன்பிருந்தே கட்சிக்குள் இருந்து வந்த ஆண்களை (சீனியர்கள்) மீறித் தலைமைக்குழுக்களுக்குள் சம அந்தஸ்த்துடன் வரச் சந்தர்ப்பம் இருக்க வில்லை.

வித்தியோதய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சந்திரா, மகாராகே, கமானி, சம்பதி, தர்மசோகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சேபாலி ஆகியோர் ஆரம்பத்தில் கட்சியுடன் இணைந்து கொண்ட சிலராவார். இவர்கள் 1969இல் முழுநேர கடசி உறுப்பினர்களாயினர். பிற்பாடு பல்கலைக் கழகத்தில் இருந்து லினா இரேயின் போன்றவர்கள் இணைந்தனர். இவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் செயல் முனைப்பு உள்ளவர்களாகவும் இருந்தனர். இவர்கள் கட்சியின் தீர்மானம் எடுக்கும் நிலைகளை நோக்கி உயர்ந்தும் இருப்பர் ஆனால் 71ம் ஆண்டு ஜே.வி.பி மீது தொடுக்கப்பட்டத்தாக்குதல் அதனைத் தடுத்துவிட்டது.

அரசியல் வேலைகளைப் போலவே யுத்தத்தை/சண்டையை எதிர்கொள்ளவேண்டியத் தேவை ஏற்பட்டபொழுது பெண்களும் இராணுவப்பயிற்சி பெற்றனர். சீருடைகளையும் இராணுவப் பயணப்பைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

எமது கட்சி பெண்களை தகவல்கள் பரிமாறுவோராக மட்டுமே பயன்படுத்தியது என்பது பிழையானதாகும். உதாரணமாக எங்களுடைய இராணுவப்பிரிவு ஒன்று; தாக்குதலின் பின்பு வில்பத்து காடுகளுக்கு தப்பிச்சென்றபொழுது அக்குழுவில் தாக்குதல்களில் பங்கு பற்றிய பெண்களும் இருந்தனர்.

பெண்கள்ள தகவல்களைப் பரிமாறிக்கொள்ளப்பயன்படுத்தியதன் நோக்கம் பெண்கள் மீது பொலிஸ் அதிகளவுக்கு சந்தேகப்படவில்லை என்பதே. கிளர்ச்சிக்கு பிற்பாடு நாங்கள் சிறைமுகாம், களில் இருந்த பொழுது வெளியில் இருந்தவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதில் பெண்கள் பெரிதும் உதவியாக இருந்தனர்.

71ம் ஆண்டு கிளர்ச்சியின் பொழுதும் அதற்கு முன்பும் பெண்கள் தொடர்பாக எமது அமைப்பு கொண்டிருந்த முக்கியத்துவம், அணுகுமுறைகளும் கிளர்ச்சி சீர்குலைந்த பின்னர் இருக்கவில்லை.

கிளர்ச்சியின் சீர்குலைவுககு முன்னர் அமைப்பின் ஆண் உறுப்பினர் ஒருவர் அமைப்பின் பெண் உறுப்பினர் ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக அறியப்படவில்லை. ஆனால், அரச ஒடுக்குமுறை காரணமாக நாங்கள் வில்பத்து காடுகளுக்குள் பின்வாங்கி வாழ்ந்த பொழுது இத்தகைய சம்பவங்கள் நடைபெறத் தொடங்கின.

கட்சி அனுபவித்த கடுமையான தோல்வியுணர்வு கட்சியுள் நிலவிய ஒழுங்குகளையும் கட்டுப்பாடுகளையும் சீர்குலைத்திருந்தது. நீடித்த தலைமறைவு வாழ்க்கையின் சலிப்புணர்வும் மேலோங்கியிருந்தது இவை தவறுகளை நோக்கி தள்ளி இருக்கலாம். இவ்வாறு கூறுவதன் மூலம் கட்சியினுள் நிகழ்ந்த தவறுகளை நியாயப்படுத்துவதாக கருதவேண்டாம். ஆனால் இத்தவறுகளுக்கான சூழ்நிலைகளையே கூற விரும்புகிறேன்.

> **"உண்மையில் ஜே.வி.பி. பெண்களை அமைப்புக்குள் உள்வாங்க விரும்பியதற்கான காரணம் பெண்ணியம் தொடர்பா ன அக்கறையினாலோ, பெண் விடுதலை தொடர்பானபிரக்ஞையினாலோ அல்ல."**

71ம் ஆண்டு கிளர்ச்சிவரையும் இயக்கத்தலைவர்கள் எவரும் திருமணம் செய்யக்கூடாது என்கிற விதிமுறை வெற்றிகரமாக நடைமுறையில் இருந்தது. கட்சியின் ஆண் - பெண் அங்கத்தவர்கிடையே திருமண உறவுகள் இருக்கவில்லை. ஆயினும் தலைவர்களால் உருவாக்கப்பட்ட இவ் விதிமுறைக்ள் அவர்களாலேயே முதலில் மீறப்பட்டன.

நம்மைச் சூழவுள்ள மரபு ரீதியான சமூகம், பெண்களைப்பற்றி என்ன பார்வையைக் கொண்டுள்ளதோ அதையே ஜே.வி.பியும் கொண்டிருந்தது.

உதாரணமாக எங்கள் அமைப்பைச் சேர்ந்த சகோதரி ஒருவர் 71ம் ஆண்டு கிளர்ச்சிக்காலத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். பிற்பாடு இவர் ஜே.வி.பி தலைவர் ஒருவரை மணந்தார். குறித்த அத்தலைவர் தன்மனைவி பாலியல் வன்முறைக்குட்பட்டவர் என்பதை வன்மையாக மறுத்துக்கொள்வதுடன் தான் மணம் புரியும்போது. அவர் ''கற்புடனேயே'' இருந்தாள் எனவும் கூறிக்கொள்வார்.

கற்பு' என்பது பற்றி மரபு ரீதியாகவே சமூகம் கொண்டிருந்த அதே நிலைபாடுகள் ஜே.வி.பிக்குள்ளும் நிலவியது என்பது இதன்மூலம் விளங்கிக்கொள்ளலாம்!

இளைஞர் கிளர்ச்சியில் பங்கேற்ற பெண்களிடமும் கூட பெண்களின் உரிமைகள் தொடர்பான தெளிவுகள் இருக்கவில்லை. அதிகாரத்தை அடைவதற்காகவும், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்

→13

www.tamilarangam.net



**எதற்காக அமெரிக்கா சென்றீர்கள்? அமெரிக்கா உங்களின் வெளிப்பாட்டை எப்படி பாதித்தது?**

நல்ல முக்கியமான விஷயம். நான் அமெரிக்கா செல்ல முதலே களனிப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றினேன். அப்போ தொல்கலைப்பொருட்களைப் பாதுகாத்தல் சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள வேண்டி இரண்டு வாரங்கள் லோஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திற்கு சென்றிருந்தேன். அந்நகரத்திலுள்ள ஓவிய கூடங்களையும், அருங்காட்சியகங்களையும் பார்த்த போது அமெரிக்கா ஓவியத்தைக் கற்றுக்கொள்ள ஏற்ற இடம் என்று உணர்ந்து கொண்டேன். எனவே நான் அங்கு தங்கி எனது பட்டமேற்படிப்பை தொடர வேண்டும் என்று தீர்மானித்தேன். எனக்கு இலங்கை திரும்ப பயணச்சீட்டை பல்கலைக்கழகமே தந்திருந்தது. அதை கிழித்துப்போட்டுவிட்டு என்னிடமுள்ள 200 டாலர்களுடன் வாஷிங்டன் செல்லும் அபாயகரமான முடிவை துணிவுடன் மேற்கொண்டேன்

இது நிகழ்ந்தது சித்திரை 88இல். பல்கலைக்கழக அனுமதிக்குரிய காலக்கெடு முடிந்து விட்டதாக அங்கு எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள். இருப்பினும் முயற்சித்துப்பார்க்கலாம் என்று வாஷிங்டன் பல்கலைக்கழகம் சென்று நிர்வாக செயலாளரைச் சந்தித்தேன். அவர் இதுவரை இந்தவழியில் எவரும் அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கு வரவில்லை என்று கூறிவிட்டுச் சிரித்தார். பின்பலரின் உதவியுடன் எனக்கு அங்கு தங்கிப் படிக்க வாய்ப்புக்கிடைத்தது.

இந்தப்பல்கலைக்கழகம் மற்றைய அமெரிக்க பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் போது மிகச்சிறியது. அவர்களிடத்தில் மிக சிறப்பான ஓவியத்துறை இருக்கிறது. அங்கு நவீன சீரியல்பான முறையில் (Modern Classical way) ஓவியம் கற்பிக்கிறார்கள்.

**நவீன சீரியல்பான முறை என்று எதைச் சொல்கிறீர்கள்?**

அங்கு ஓவியர் செசானை (Cezanne) ப்பற்றி நிறைய அறியவும், செய்யவும் வேண்டியும் இருந்தது. ஒரு மாணவனாக ஒவ்வொரு நாளும் உயிர் ஓவியங்கள், உயிருரு கோட்டுப் படங்கள் மேலும் மனித உருசார்ந்த பிற படைப்பு முயற்சிகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம். நான் எனது தேர்வில் எவ்வளவு தெளிவாக உள்ளேன் என்று உணர்ந்து கொள்ள அரூப படைப்பு முயற்சிகள் செய்ய வற்புறுத்தப்பட்டேன். நியூயோர்க் போன்ற இடங்களில் மாணவர்கள் விரும்பாததைச் செய்ய வற்புறுத்தப்படுவதில்லை. ஒன்றரை வருடங்கள் நான் அவர்கள் சொன்னதைச் செய்தேன். பின் இறுதி ஆறு மாதங்கள் தான் நான் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கப்பட்டேன்.


நான் ஓவியத்தை Body of Knowledge என்று நினைப்பதால் ஒருவர் இவ்வாறு பயிற்சி பெறுவது முக்கியமானது என்று கருதுகிறேன். ஏனெனில் இதனூடு பகுப்பாய்வு செய்யப் பழக்கப்படுகிறோம். இந்த வகையில் கொகெயின் (Gauguin), செசான் (Cezanne), வன்கோ (Van gogh), பிக்காசோ (Picasso), போன்றவர்களை வரலாற்று ரீதியில் மட்டுமின்றி பார்வை மொழியிலும் அறிந்து கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டோம். இது ஒரு அற்புதமான கற்கை நெறி என்று நான் நினைக்கிறேன். இதனூடு தான் என்னை நான் அறிந்து கொண்டதும்.

இந்த அனுபவம் தான் 1983க் கலவரத்திற்கு பிந்திய பிரச்சினைகளையும் மனநிலையையும் உடைந்த ஸ்தூபாக்கள் மூலம் வெளிப்படுத்த அடிப்படையாய் இருந்தது. ஸ்தூபா சிதைவுறாத அதன் முழுவடிவில் இலங்கைப் பௌத்தத்தின் சின்னம். ஆனால் அது இப்போ உடைந்து விட்டது. நான் இதை 'ஸ்தூபாவின் சிதைவு' எனச்சித்திரித்தேன் சொல்லவேண்டியதனைத் தையும் இது உயிருடன் சிறைப்பிடித்தது.

**இப்படைப்புகளுக்கு பார்வையாளரின் எதிர்வினை எவ்வாறு இருந்தது?**

அமெரிக்காவில் இது அவர்களுக்குப் பிடித்திருந்தது. நான் 1992ல் இவற்றை இங்கு காட்சிப்படுத்தியபோது மக்கள் இதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தார்கள். ஏனெனில் வடக்கில் என்ன நடந்ததோ அது இப்போ தெற்கில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அன்று வடக்கில் இருந்த இலங்கை இராணுவத்திற்காக தேவாலயங்களில் பிரார்த்தனைகள் நடாத்திய அம்மாக்கள் அது தெற்கிற்கு வந்த போது உண்மையை தெரிந்து கொண்டார்கள். அவர்கள் அவர்களுக்கிடையில் எனது படைப்புக்களை விமர்சித்திருக்க கூடும். ஆனால் எனது முகத்திற்கு நேர எதையும் சொல்லவில்லை.

> 19ம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கைக் கலைச்சங்கம் உருவாக்கப்பட்டது. இது இன்றுவரை முட்டாள்தனமான பயனற்ற ஓர் அமைப்பாகவே இருந்துவருகிறது. தரமான படைப்பாளிகள் இதிலிருந்து - தொடர்பைத் துண்டித்து விட்டார்கள் - இது அரசு அங்கீகாரம் பெற்ற கலையை பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம்



சந்திப்பு: தா.சனாதனன்

எனது பட்டப்படிப்பை முடித்த நிலையில் அதே பல்கலைக்கழகத்தில் இளம் பேராசிரியராக ஆறு மாதங்கள் கடமையாற்றினேன். அமெரிக்க மாணவர்களுக்கு ஓவியம் கற்பிப்பதிலும் அங்கு ஓவியராய் இருப்பதிலும் எந்த அர்த்தமுமில்லை என்று நினைத்தேன். அங்கிருந்து இந்தியா சென்றேன். அங்கு புராதன கலைப்பொருட்களைப் பாதுகாக்கும் பயிற்சியாளராக ஆறு மாதங்கள் பணியாற்றினேன். பின்னர் 1995லும் இந்தியா சென்றேன்.

இந்தியாவைப் பாராமலும், அதைப்பற்றி தெரிந்து கொள்ளாமலும் நாங்கள் இலங்கை பற்றி பேச முடியாது என்பது எனது எண்ணம். நான் இன்னும் எலிபன்ராவை (Elephanta) உலகின் புராணத்துவமான (Profound) இடமாக கருதுகிறேன். இருண்ட மந்தாரமான குகையுள் உள்ள பெரியளவிலான நெஞ்சு வரையிலான மும்மூர்த்திகளின் வடிவமும் பின் வெளியில் உள்ள முழு உருவங்களும் அவற்றின்

# " எலின்பாராவில் தான் என்னை ஒரு அற்ப உயிரியாக உணர்ந்தேன் "

ஜெகத் வீரசிங்க



ஸ்தூபாவின் சிதைவு

இன்னல்களும்... மறக்க முடியாதவை. 'எனது வாழ்வின் எஞ்சிய நாட்களை அங்கு தங்கி அந்த உணர்வை எனது ஓவியங்களில் சிறைபிடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் நான் என்னை ஒரு அற்ப உயிரியாக உணர்ந்தது எலிபன்ராவில்தான். ஒரு பௌத்தனான நான் எப்படி இதை உணர்கிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆம், பொலநறுவையிலோ, வேறு பெரிய புத்த திருவுருவங்களின் முன்னோ நான் இதை உணர்ந்துள்ளேன். இது தனிப்பட்ட பழக்கத்தாலும், உறவாலும் விளைந்தது. இது சமய சம்பந்தமானது. ஆனால் எலிபன்ரா கலை சம்பந்தமானது.

நான் இலங்கை திரும்பி மீண்டும் அகழ்வாய்வு பட்டமேற்படிப்பு நிலையத்தில் விரிவுரையாளராக சேர்ந்தேன். அழகியல் கற்கை நிலையத்தில் வருகை விரிவுரையாளராயும் பணியாற்றுகிறேன்.

***எந்த ஓர் இயக்கத்தின் தோற்றமும், அது சார்ந்த இடத்தாலும், காலத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது. அப்போதைய அரசியல், பொருளாதார, சமூகதத்துவ காரணிகள் அவற்றின் இருப்பையும் போக்கையும் நிர்ணயித்துள்ளன. இந்த வகையில் மேற்கத்தேய நவீனத்துவம் இலங்கை ஓவியச் சூழலின் போக்கை எவ்வாறு தீர்மானித்தது? நவீனமயமாதல் காலனித்துவத்திற்கு எந்த வகையில் துணை போனது?***

ஆசியாவிற்கு நவீனத்துவத்திற்கு முன் மேற்கில் இருந்து ஓவியத்தின் புதிய தொழிநுட்பம் தான் வந்தது. (New Technology of Painting) இதற்கு முன் முகலாயர் காலத்தில் சிற்றோவியங்கள் ஆக்கப்பட்டு சுவர்களில் தொங்கவிடப்படுகிற ஒரு வழக்கம் இருந்தது. ஆனால், இது பண்டமாற்றுக்கும், வியாபாரத்திற்குமுரிய ஓர் பொருளாய் இருந்ததா என்று எனக்குத்தெரியாது. இலங்கை அனுபவத்தில் ஓவியம் அவ்வாறு இருந்ததில்லை. அது கட்டடக் கலையின் ஓர் பகுதியாக, வழிபாட்டின் ஓர் பகுதியாக வெளிப்பாடுகளில் உயர்ந்த தொன்றாக இருந்தது. பிரித்தானியர்களோடு தான் க்ன்வஸ்சில் ஓவியம் தீட்டும் தொழில் நுட்பமும் வந்தது. ஓவியம் பண்டமாற்றுக்கான பொருளானதும் தனிமனித வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் வந்ததும் அப்போதுதான்.

இலங்கையில் உண்மையான நவீன ஓவிய இயக்கம் 43 குழுவினூடு நிகழ்ந்தது. அதே வேளையில் இது இந்தியாவில் பல்வேறு நிலைகளினூடு நிகழ்ந்து கொண்டிருந்தது. சுதந்திர போராட்ட கால இம்முயற்சிகளில் இருவகையான போக்குகள் காணப்பட்டன.

1. அஜந்தா சீகிரியா போன்றவற்றை மீண்டும் தேடிச்செல்கின்ற முயற்சிகள்.
2. ஆனந்த குமாரசாமி, தாகூர் போன்றவர்களால் வலியுறுத்தப்பட்ட இந்த நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இக்காலத்திற்கு சமகாலத்தவராய் இருத்தல் என்கிற விஷயம்.

பிரித்தானியர்களால் தமது தேவையைப் பூர்த்தி செய்ய என்று தொடக்கப்பட்ட தெருக்கள், புகையிரதப் பாதைகள் அமைத்தல், கல்வி போன்ற விடயங்கள் மறைமுகமாக தவிர்க்க முடியாமல் எமக்கும் நன்மையளித்தன. இது ஓவியத்திலும் நிகழ்ந்தன. எமது ஓவியர்கள் ஆசிய அனுபவங்களை இந்த நவீன தொழிநுட்பத்தில் பகிர்வதன் மூலம் இந்த மேற்கத்தேய மொழியை ஆசியமயமாக்கினார்கள். இலங்கையில் ஜோர்ச் கீற், தெரணியாகல.. போன்றவர்களும் அமிர்தா சேர்கில், தாகூர் போன்றவர்கள் இந்தியாவிலும் பயன்படுத்தியது பிரஞ்சு நவீனத்துவத்தையேயன்றி பிரித்தானிய அல்லது ஆங்கிலேய உற்பத்திகளை அல்ல. உண்மையில் நவீன ஓவியம் பிரித்தானியர்களின் கல்வித்திட்டத்தில் இருக்கவில்லை. விக்ரோறிய மெய்ப் பண்பு வாதமே அவர்களின் திட்டத்தில் இருந்தது. எனவே பாரீசில் கருக்கொண்ட நவீனத்துவத்தை ஏற்றுக்கொண்ட அனைவரும் ஒரு வகையில் காலனித்துவத்திற்கு எதிராக செயற்பட்டார்கள். பிரித்தானியர்கள் என்றும் இதனை ஏற்றுக்கொண்டதில்லை. இலங்கையில் கல்வி உயர் அதிகாரியாக இருந்த வின்சர் (Winsor) போன்றவர்கள் இந்த நவீனத்துவத்தை ஆதரித்தார்கள் என்பது உண்மையே. இது தனிப்பட்ட ரீதியில் தான். வரலாற்றில் பிரான்சும், பிரித்தானியாவும் நேசமாக இருந்ததில்லை. நீங்கள் பிக்காசோ போன்று படம் வரைவது என்பது அதிகார பூர்வ சலூனுக்கும், விக்ரோறியப் பெறுமானங்களுக்கெதிராக சவால் விடுவதன் வெளிப்பாடு தான். பிரான்சில் நவீனத்துவம் அதிகாரபூர்வ சலூனுக்கும், அதிகார மனப்பான்மையுடையவருக்கும் எதிரானது. பிரித்தானியாவில் விக்ரோரிய மெய்ப்பண்பு வாதம் காலனித்துவத்துடன் சம்பந்தமானது. வரலாற்று பற்றிய புரிந்துணர்வுடைய எவரும் நவீனத்துவம் காலனித்துவத்திற்கு தொண்டாற்றிய ஒன்று என்று சொல்லமாட்டார்கள்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கை கலைச்சங்கம் (Ceylon Society of Art) உருவாகப்பட்டது. இது இன்றுவரை முட்டாள்தனமான பயனற்ற ஓர் அமைப்பாகவே இருந்து வருகிறது. தரமான படைப்பாளிகள் இதிலிருந்து தொடர்பைத் துண்டித்து விட்டார்கள். இது அரசு அங்கீகாரம் பெற்ற கலையை (-அன்று விக்ரோறிய தலைப்பெறுமானங்களை) பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம்.

நவீனத்துவம் மேற்கில் குறிப்பாக பிரான்சில் தோன்றிய ஒன்று என்றாலும் அடிப்படையில் அதன் பாடங்கள் பல ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டவை.

வளரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பு லொட்ஜ்கள் : எட்

''இப்போது எனக்கு இந்த வாழ்க்கை பழகிப் போய்விட்டது'' என்கிறார் அச்சுவேலியைச் சேர்ந்த நாகரட்ணம். இரண்டு வருடங்களுக்கு மேலாக பழைய சோனகத்தெருவிலுள்ள லொட்ஜ் ஒன்றில் அவரின் காலம் கழிகிறது. நாகரட்ணமும் அவரின் மனைவி ராஜேஸ்வரியும் மட்டும் தான். மாதாந்த வாடகை ஆறாயிரம் ரூபா, மூன்று நேரமும் கடைச் சாப்பாடு, மதியமும் இரவும் தவறாது சாப்பாட்டுக்கு முதல் பக்கத்திலுள்ள பார் ஒன்றுக்குள் நுழைந்து கொஞ்சம் ஊற்றிக் கொள்வதுஎன்று காலம் கழிகிறது.

இதைவிட வெள்ளியும் செவ்வாயும் கோவில், லொட்ஜில் உள்ள எல்லோரும் சேர்ந்து படம் போட்டுப்பார்ப்பது. வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளுடன் தொலைபேசியில் பேசுவது என்று எங்களது பொழுது போகிறது என்கிறார் நாகரட்ணம்.

இவருக்கு மாதாந்தம் பதினைந்தாயிரம் ரூபா அளவில் எல்லாமாகச் செலவாகிறது. தொலைபேசி அழைப்புகளுக்கே நிறையக் காசு போகிறது என்கிறார். வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் பேசும் போதுஅங்கிருந்து வரும் அழைப்புக்கு நிமிடத்துக்கு மூன்று ரூபா வீதம் எடுக்கிறார்கள். (இது லொட்ஜிக்கு லொட்ஜ் வித்தியாசப்படும்)

இவரின் மூன்று பிள்ளைகளும் டென்மார்க்கிலும் கனடாவிலுமாக இருக்கிறார்கள். அவர்களையும் லொட்ஜில் கொண்டு வந்து நிற்பாட்டித் தான் அனுப்பினேன் என்கிறார் அவர். இந்த லொட்ஜில் தான் நீண்ட நாட்களாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார். தானும் மனைவியும் கனடா போக மட்டும் இந்த லொட்ஜில் தான் இருக்கப் போவதாகவும் கூறினார்.

55 வயதான நாகரட்ணத்தைக்கூட இதுவரை புறக்கோட்டைப் பொலிஸார் மூன்று தடவைகள் கொண்டு போய் விசாரித்திருக்கிறார்கள். இப்போது எல்லாமே பழகிப் போய் விட்டது என்கிறார். நாகரட்ணத்தைப் போல் ஆயிரக் கணக்கான தமிழர்களின் வாழ்க்கை இப்படித்தான் போகிறது.

இந்தியப் படைகளின் வருகைக்குப் பின்னரான காலகட்டங்களில் தான் கொழும்பை நோக்கிய தமிழர்களின் வரவின் வேகம் அதிகரித்துக் காணப்பட்டது.

வடகிழக்கில் இந்தியப்படைகளின் வெறியாட்டம், வடகிழக்கு மாகாண அரசின் கட்டாய ஆட்பிடித்தல் நடவடிக்கைகள், தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் என்பன கொழும்பில் தமிழர்களுக்குப் பாரிய அச்சுறுத்தல்களாக இருக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில் தான் கொழும்பில் புதிய புதிய லொட்ஜ்கள் புற்றீசல்கள் போல் கிளம்பின. செட்டியார்தெரு, கதிரேசன் வீதி, ஆட்டுப்பட்டித்தெரு, புதிய சோனகத்தெரு, டாம் வீதி, பழைய சோனகத்தெரு, ஐந்துலாம்புச்சந்தி, சென்றல்றோட், ஐந்தாம் குறுக்குத்தெரு, பிரின்ஸ் **வீதி, விவேகானந்தா மேடு, ஆமர் வீதி, கொட்டாஞ்சேனை, கிராண்பாஸ் என கொழும்பின் மத்திய பகுதி எங்கு திரும்பினாலும் லொட்ஜ்தான்.**

**இதைவிட மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை போன்ற இடங்களிலும் பல லொட்ஜ்கள்** உள்ளன.

கோழிக்கூடு போன்ற சின்னச் சின்ன தொடர் அறைகள், இரண்டு அறைக்கு ஒரு மின்விசிறி, பொதுவான குளியலறைகள், சுகாதாரமின்மை, நெருக்கம், வாகனங்களின் இரைச்சல், நிமிர்ந்து படுத்தால் முட்டுகிற அறைகள், பொலிசாரின் கெடுபிடி, லொட்ஜ் உரிமையாளர்களின் மிரட்டல், அதிகாரம் இதற்கு மத்தியில் தான் ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்க்கை லொட்ஜ்களுக்குள் அமுங்கிப் போய்க் கிடக்கிறது.

ஒரு நாளைக்கு ஐம்பது ரூபா கொடுத்து தங்குபவர்களும் (ஒரு பாயும் தலையணையும் கொடுப்பார்கள் ) உண்டு. இதற்குமப்பால் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை பகுதிகளிலுள்ள இம்பீரியல், ஒமேகா இன், சிலோன் இன் போன்ற ஹோட்டல்களில் ஒரு நாளைக்கு முன்னூற்றி ஐம்பது ரூபாதொடக்கம் ஐநூறு ரூபா வரை கொடுத்து மாதக்கணக்கில் தங்குபவர்களும் உண்டு.

வதிவிட அறைகள் வழங்குவதற்காக கட்டப்பட்டவற்றைவிட, பலசரக்குக்கடைகளாகவும், களஞ்சியங்களாகவும் கட்டப்பட்ட அறைகள் கூட 'சிப்போட்'டினால் அறைகளாகப் பிரிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. 8'x8' அளவுள்ள சிறிய சிறிய பெட்டிகள் போல இருபுறமும் அறைகளும் 2 1/2அடி அகலமான நடைபாதையும் கொண்ட அறைகளுக்குள் 'குடும்பங்கள்' வாழ்க்கை நடத்துகின்றன. வெளிநாட்டுப் பயணம், மகனை அல்லது மகளை அனுப்ப ஏஜன்சியிடம் காசு கொடுத்துவிட்டு காத்திருப்பது, திருமணத்துக்காக மகளை அனுப்ப வந்திருப்பது, தமிழர் என்ற காரணத்தால் கொழும்பில் வீடு வாடகைக்கு எடுக்க முடியாததால் தங்கியிருப்பது என்று இந்த விடுதியில் தங்கியிருப்பவர்களது தங்குதல்களுக்கு பல காரணங்கள். இவர்களது போக்கிடமற்ற நிலைவை பொலிசும், லொட்ஜ் உரிமையாளர்களும் நன்றாகப் பயன்படுத்தி தமது வரும்படியைப் பெருக்கி வருகின்றனர். மொத்தத்தில் கொழும்பில் இலகுவாக பணம் பண்ண சிறந்த ஒரு தொழிலாக இந்த லொட்ஜ் தொழில் இருந்து வருகிறது.

எந்நேரமும் திடீர் திடீரென வரும் பொலிசாரின் கெடுபிடி, பிடித்து விசாரித்தவர்களை மீண்டும் மீண்டும் கொண்டு போய் அடைப்பது, அறைகளுக்குள் சென்று உள்ளேயுள்ள பொருட்களை கொட்டிக் கிளறுவது, குழந்தைகளுடன் பெண்களையும் விசாரணைக்கு அழைத்துச் செல்வது எனப் பல சம்பவங்கள் பல தடவைகள் நடந்துள்ளன. பொலிசாரின் நடவடிக்கைகள் அநேகமாக நள்ளிரவுகளில் தான் இடம் பெறுவதுண்டு.

லொட்ஜ்களில் கைது செய்யப்பட்ட பலதமிழ் இளைஞர்கள் இன்னமும் காணாமல் போனவர்களாக வேயுள்ளனர். இதை விட சிலர் மகசீன், வெலிக்கடை, களுத்துறை மஹர, நாலாம்மாடி போன்ற இடங்களில் மாதக் கணக்கிலும், வருடக்கணக்காகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

சாதாரணமாகக் கைது செய்யப்படும் இளைஞர்களை விடுவிப்பதற்கு லொட்ஜ் உரிமையாளர்கள் பெற்றோர்களிடம் ஆயிரக் கணக்கில் வாங்குவதும் உண்டு. இதில் பொலிசாருக்கும் நிறையவே தொடர்புண்டு.

கொழும்பிலுள்ள லொட்ஜ் ஒன்றிலிருந்து அண்மையில் பொலிசாரால் பிடித்துச் செல்லப்பட்ட 35 வயது இளைஞர் ஒருவரின் தாய் இப்படிக் கூறினார்.

''எனது மகனிடம் அடையாள அட்டையும் இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கப்பல்துண்டும் இருந்தது. லொட்ஜ்ஜிலே பொலிஸ் பதிவும் இருந்தது. அப்பிடி இருந்தும் விசாரிக்க எண்டு பிடிச்சுக் கொண்டு போனாங்கள். மற்றாக்களை இரண்டு நாளிலை விட்டிட்டாங்கள். என்ரை மகனோடை சேர்த்து நாலைஞ்சு பேரை விடவேயில்லை. இன்னும் விசாரணை முடியேல்லை எண்டு சொல்லி வைச்சிருந்தாங்கள்... பிறகு லொட்ஜ்காரர்தான் காசு குடுத்து எடுத்து விடுறனெண்டு சொல்லி எடுத்துவிட்டவர்''

''எவ்வளவு குடுத்தனிங்கள்''

''பத்தாயிரம்''

''உடனை விட்டிட்டாங்களே''


''இல்லை கோட்டுக்கு கொண்டு போய் விசாரிச்சிட்டு விட்டவங்கள்''

அப்படியான அந்த 50வயது தாய், கணவனை இழந்த பெண். ஒரே மகனை ஊரிலே 'சண்டையிலை மாட்டுப் படாமலிருக்க' என்று கூட்டி வந்தவர். தனது மருமகன் (தமையனின் மகன்) வெளிநாட்டில் இருப்பதால் அவன் உதவுவான் என்று வந்தவர். ''வெளியிலேயே அனுப்ப மருமகன் தான் எல்லா ஒழுங்குகளும் செய்தவர்... அதுக்கிடையில் இவங்கள் பிடிச்சிட்டாங்கள்... சிங்கப்பூர் போக டிக்கட் போட்ட அண்டு தம்பியை எடுக்க முடியேல்லை... காசு குடுத்ததுக்குப் பிறகும் இரண்டு நாள் கழிச்சுத் தான் விட்டாங்கள். அதாலை பயணம் தடைப்பட்டுப் போச்சு.

இவருக்கு நடந்த விடயம் என்ன என்பது அவர் சொல்லும்போதே புரிந்தது. வெளியே போகத் தயாராக இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி காசு பிடுங்கியிருக்கிறார்கள். பாவம், இந்த அப்பாவிப் பெண்மணிபோல் இன்னும் எத்தனைபேரோ? சாதாரண முறையில் விடுபடக் கூடியகைதுகளைக் கூட, புலியெனக் கூறி உள்ளே போட்டு விடுவதாக மிரட்டி, உதவி செய்வதாக நடித்து பணம் கறப்பதற்கென்றே சிலர் இயங்கி வருகின்றனர்.

பல லொட்ஜ் உரிமையாளர்கள் லொட்ஜில் தங்கியிருப்பவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வந்தது தெரிந்ததும் பொலிசுக்கு அறியத்தந்து அவர்கள் பிள்ளைகளை பிடித்துக்கொடுத்து விட்டு பின்னர் ஆயிரக்கணக்கில் பணம் கறப்பதெல்லாம் சர்வ சாதாரணம்.

உசேனியா வீதியிலுள்ள ஒரு பிரபலமான லொட்ஜ் அது. தாயும் இரண்டு மகனும். மூத்தமகனுக்கு ஸ்பொன்சரில் கனடாவுக்கு செல்ல வாய்ப்புக் கிடைத்தது.



டிக்கட்டும் ஏனைய சாமான்கள் வாங்குவதற்குமென கனடாவிலுள்ள தந்தையிடமிருந்து உண்டியல் மூலம் லொட்ஜ்க்கு பணம் வந்தது. மனேஜரிடம் தான் பணம் கொடுக்கப்பட்டது.

அன்று மாலை திடீரென லொட்ஜ்க்குள் நுழைந்த ரிப்ரொப் உடையணிந்த மூவர் அந்தத் தாயையும் இரண்டு மகன்மாரையும் அறைக்குள் நுழைந்து விசாரிக்கத் தொடங்கினார்கள்.

சிங்களம் தெரியாததால் மனேஜர் தான் மொழி பெயர்ப்பாளர். ''உங்கள் பிள்ளைகள் இருவரும் புலிகளில் இருந்தவர்களாம் கொண்டு போகப்போகிறார்களாம்'' என்றார் மனேஜர். தாய் அழுது கெஞ்சி மன்றாடினாள்.

மனேஜர் அவர்களுடன் ஏதோ பேசினார். பின்னர் மனேஜர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களுக்கு இருபதினாயிரம் ரூபா கொடுக்கப்பட்டது. மனேஜருக்கும் ஐயாயிரம் ரூபா, சாராயப் போத்தல்கள், கோழிப்புரியாணி என்பன கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர் தான் அந்த இளைஞன் கனடா செல்ல முடிந்தது. பின்னர் தாயும் மகனும் வேறு லொட்ஜுக்கு மாறி விட்டார்கள். சம்பவம் நடந்த அன்றிரவு அந்த மனேஜரும் விசாரணை செய்ய வந்தவர்களும் மருதானையில் உள்ள பார் ஒன்றுக்குள் மது அருந்திக்கொண்டிருந்துள்ளார்கள்.

ஆக, விசாரிக்
பொலிசாரோ அ
னரோ அல்ல. ெ
மனேஜரும் இர

ஆசாமிகளும் ெ
நாடகமே இது எ
புரிந்தாலும் இதை
முறையிட முடியு
முறையிடப் போ
மீளவும் புலியென
மாட்டி விடமாட்
எந்த உத்தரவாத
பொலிசாரும் இவ
பாட்டைக் கேட்க
இவர்களை விச
விடவோ நியாயபூ
லவே. பொலிசாரு
சம்பவங்களை பய
கறந்த சம்பவங்கள்
யமானவையல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...டிச் சுவருக்குள்ளே !

...ந்தவர்கள் ...து சி.ஐ.டியி ... காடையர். ... திருகுதாள

... செய்த ... பின்னர் ...ய் எங்கு ...லிசுக்கு ...மனேஜர் ...லிசாரிடம் ...ன்பதற்கு ...லையே. ... முறைப் ... அல்லது ... விட்டு ...கள் அல் ...மாதிரிச் ...தி பணம் ...ம் இரகசி

சில லொட்ஜ் உரிமையாளர்கள் லொட்ஜில் தங்கியுள்ளவர்களை பொலிசார் போன்று அதிகாரத் தொனியில் மிரட்டுவது, அடிப்பது, பொலிசில் பிடித்துக் கொடுப்பது, போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். (பம்பலப்பிட்டி டிக்மன் றோட் லொட்ஜ் ஒன்றில் நடந்த பல விடயங்களை சரிநிகர் ஏற்கெனவே வெளியிட்டிருந்தது.)

சவூதியில் ஐந்து வருடங்கள் இருந்து விட்டு கொழும்புக்கு வந்து மெசஞ்சர் வீதியிலுள்ள ஒரு லொட்ஜில் தனது தம்பியுடன் இருந்த சந்திரகுமார் என்பவர், தான் கொண்டு வந்த பணத்தில் ஒன்றரை லட்சத்தை வெள்ளவத்தையிலுள்ள ஒரு ஏஜன்சியிடம் தனது தம்பியை ஜேர்மனிக்கு அனுப்புவதற்கு கொடுத்துவிட்டு மூன்று மாதங்களாக ஏஜென்சிக்காரன்கள் பின்னால் அலைந்துள்ளார்கள். வெள்ளவத்தையிலுள்ள ஏஜென்சிக்காரனின் வீட்டுக்கு சென்று அண்ணனும் தம்பியும் சண்டை பிடித்துள்ளார்கள். அனுப்பாவிட்டால் காசைத் திருப்பித் தரும்படியும் கேட்டுள்ளார்கள்.

அன்றிரவே லொட்ஜுக்கு சென்ற பொலிசார் அண்ணனையும், தம்பியையும் புலியெனப் பிடித்துப் போய் நாற்பத்தியொரு நாள் உள்ளே போட்டு விட்டார்கள்.

நாற்பத்தியொரு நாள் உள்ளே இருந்து விட்டு வந்தவர்களுக்கு லொட்ஜில் அதிர்ச்சி காத்திருந்தது. லொட்ஜ் முதலாளியிடம் கொடுத்திருந்த பணத்தில் நாற்பத்தியொரு நாளும் அறையில் இவர்களின் உடுப்புகள், சூட்கேஸ் என்பவற்றை வைத்திருந்ததற்காக ஒரு நாளைக்கு நூறுரூபாவீதம் எடுத்து விட்டுத்தான் மிகுதிப்பணத்தைக் கொடுத்துள்ளார்.

இவர்களைப் பிடித்துக்கொடுத்த ஏஜன்சிக்காரனும் இல்லை. கொடுத்த பணமும் இல்லை. சந்திரகுமார் மீண்டும் சவூதி போய்விட்டார். தம்பிக்காரன் ஊருக்குப் போய் விட்டார்.



PHOTO: TIMBI

சந்திரகுமார் மாதிரி ஏஜென்சிக்காரனிடம் கொடுத்த பணத்தை கேட்ட பலர் ஏஜென்சிக்காரர்களால் புலியென நாமம் சூட்டப்பட்டு பொலிசாரிடம் மாட்டிவிடப்பட்ட சம்பவங்கள் ஏராளம் நடந்துள்ளன.

மருதானை ஆனந்தாக்கல்லூரிக்கு அருகிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த ஏழாலையைச் சேர்ந்த தந்தையும் மகனும் மருதானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, பின் தந்தையார் உடன் விடுதலை செய்யப்பட்டார்.

மகனுக்கு லொட்ஜ் உரிமையாளர் மூலம் ஐயாயிரம் ரூபா கொடுத்துதான் எடுக்கவேண்டியிருந்ததாக தந்தையார் கவலையுடன் குறிப்பிட்டார்.

இதைவிட மருதானைப் பொலிசில் புதிதாகப் பதியச் சென்றால் பொலிசாருக்கு 'சம்திங்' கொடுத்தேயாக வேண்டும். லொட்ஜ்களில் பிடிபடுபவர்களை 'றேட்' பேசி எடுத்துவிடுவதற்கென்றே ஒரு கும்பல் கொழும்பில் இருக்கிறது. இவர்களுக்கும் லொட்ஜ் உரிமையாளர்களுக்கும் பொலிசாருக்கும் மிகவும் நெருக்கமான உறவுகள் உண்டு.

செட்டியார் தெருவிலுள்ள ஒரு லொட்ஜிலும், அதற்கு அருகிலுள்ள விடுதிகளிலும் நகைவேலை செய்வோர் உட்பட நாற்பதுக்கு மேற்பட்டோர் ஒரு தடவை பொலிசாரால் கைது செய்யப்பட்டபோது இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபாவீதம் கொச்சிக்கடையிலுள்ள ஒரு பிரபல தரகர் மூலம் பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

காசுகொடுக்காத பலர் உடன் விடுதலை செய்யப்படவில்லை. கொச்சிக்கடையைச் சேர்ந்த இத்தரகர் மிகவும் பிரபலமானவர். பல லொட்ஜ்காரர்கள் இப்பொலிஸ் தரகர்களுடன் மிகவும் நெருங்கிய உறவினைக்கொண்டுள்ளனர்.

ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள லொட்ஜ் ஒன்றிலிருக்கும் கனகசபை கூறுகிறார். ''லொட்ஜில் வைத்து எனது மகனுடன் ஒன்பது பேரை பொலிசார் பிடித்துக் கொண்டு போனார்கள். வேறு சிலர் இத்தரகர் மூலம் பணம் கொடுத்து தொடர்புகொண்டார்கள். ஆனால் எல்லோரையும் பொலிசார் விசாரித்துவிட்டு அடுத்தநாள் மாலையில் விட்டுவிட்டார்கள்.

அன்றிரவு லொட்ஜுக்கு வந்து இத்தரகர் இரண்டாயிரம் ரூபா கேட்டார். எனது மகனை பொலிசார் விசாரித்து விட்டுத்தான் விட்டிருக்கிறார்கள் எதற்குக் காசு என்றதற்கு எனக்கு அடிக்க வந்து அடையாள அட்டையைப் பறித்து விட்டார். பிறகு இரண்டாயிரம் ரூபா கொடுத்த பின் தான் அடையாள அட்டையை வாங்க முடிந்தது என்கிறார் கனகசபை.

அடிக்கடி புறக்கோட்டைப்பகுதிகளிலுள்ள லொட்ஜ்கள் பொலிசாராலும், இராணுவத்தினராலும் சாட்டாக சுற்றிவளைக்கப்பட்டு நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு பஸ்வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுவது மாதத்திற்கு ஒரு தடவையாவது நடக்கும்.

கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுபவர்கள் அநேகமாக ஹெட்டியாவத்தையிலுள்ள துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தான் விசாரிக்கப் படுவார்கள்.

ஓகஸ்ட் 30ம்திகதி நள்ளிரவும் புறக்கோட்டையிலுள்ள அநேகமான லொட்ஜுக்கள் பொலிசாராலும் சுற்றிவளைக்கப்பட்டு 200க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் ஹெட்டியாவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள்.

ரவீந்திரன், இவர் கதிரேசன் வீதியிலுள்ள லொட்ஜ் ஒன்றில் ஒன்றரை வருடங்களாக குடும்பத்துடன் இருக்கிறார். தான் இதோடு ஏழாவது தடவை கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தத் தடவை விசாரணையின் போது பலருக்கு பொலிசார் அடித்து துன்புறுத்தியதாயும் சொன்னார்.

இதையெல்லாம் மீறி ஏரியாச் சண்டியர்களின் தொல்லை உள்ளது. லொட்ஜிலிருந்து வெளியே இறங்கினால் சிகரெட் அல்லது கப்பம் கொடுக்க வேண்டும். சில லொட்ஜ் உரிமையாளர்களும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

பொலிஸ் ரிப்போட் பணம், முக்கிய தஸ்தாவேஜுகள் என்பன லொட்ஜ் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இரவு பத்துமணிக்கு பின்னர் வெளியே சென்றவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. உறவினர்கள், நண்பர்கள் காலை எட்டு மணிக்கு பின்னர் தான் சந்திப்பதற்கு அனுமதி உண்டு.

சில லொட்ஜ்களில் உறவினர் நண்பர்கள் சந்திப்பதற்கு அனுமதி இல்லை. ஒவ்வொரு லொட்ஜ்களிலும் ஒவ்வொரு வகையான கட்டுப்பாடுகள் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஆனால் அறவிடப்படும் பணத்திற்கு ஏற்றவாறு லொட்ஜ் உரிமையாளர்கள் எந்த விதமான வசதியும் செய்து கொடுப்பதில்லை. அநேகமான லொட்ஜ்கள் வெறும் கோழிக்கூடுகளாகவோ, மாட்டுத்தொழுவங்களாகவோ தான் தென்படுகின்றன.

இந்த அசௌகரியமான நிலை பற்றி யாரும் வாய்திறக்க முடியாது. கதைத்தால் 'விருப்பமில்லாட்டி விட்டிட்டு வெளியே போ' என்ற திமிர்த்தனமான பதிலே லொட்ஜ் நிர்வாகத்திடமிருந்து கிடைக்கிறது. 'உங்களுக்கு அவ்வளவு வசதி வேணுமெண்டால் போய் ஹில்டனிலை இருங்கோ... உங்களுக்கு பாவம் எண்டு இடந்தந்த எங்களை செருப்பாலை அடிக்கோணும்' என்கிறார்கள், என்று கூறுகிறார் டாம் வீதியிலுள்ள லொட்ஜ் ஒன்றில் இருக்கும் 30வயது இளைஞர் ஒருவர். 'தாம் தொழில் செய்யவில்லை, சேவை, செய்கிறோம் என்ற நினைப்பு அவர்களுக்கு போகிற போக்கில் தமிழ் மக்களுக்கு மாபெரும் சேவை செய்தவர்கள் தாமே என்று கூறி அடுத்த முறை தேர்தலில் கூட இவர்கள் இறங்கிவிடக்கூடும்' என்று சிரித்தப்படி சொல்கிறார் இந்த இளைஞர்.

ஐ.தே.க அரசின் காலத்தின் போது இருந்த லொட்ஜ்களின் பெருக்கமும், உழைப்பும் இப்போது இல்லை. சில லொட்ஜ் உரிமையாளர்கள் தாங்களாகவே மூடிவிட்டனர். பல லொட்ஜ்களை பொலிசார் மூடியது அறிந்த விடயமே.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்கு பின்னரான காலகட்டத்தில் மூன்றாவது ஈழப் போருக்கு பின்னர் வடகிழக்கிலிருந்து கொழும்புக்கு வரும் தமிழர்களை கட்டுப்படுத்தியமை, சீரான போக்குவரத்தின்மை போன்ற காரணிகளால் பல லொட்ஜ் உரிமையாளர்கள் கொழுத்த பணம் கறக்கும் தங்கள் உழைப்பை மெல்லமெல்ல இழக்கத் தொடங்கினார்கள்.

கொழும்பில் தமிழர்களின் செறிவையும், வரவையும் கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் பல தடவைகள் லொட்ஜ்களுக்கு சென்று அங்குள்ளோரை வெளியேறிவிடுமாறும் மூடிவிடப் போவதாகவும் அச்சுறுத்தினர்.

லொட்ஜ்களில் கைது செய்யப்படுவோரின் வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. புதிதாக வருவோரை பதிவு செய்ய முடியாதென அச்சுறுத்தினர்.

ஜெம்பட்டா வீதியிலுள்ள ஒரு லொட்ஜ்ஜில் கிரனைட் இருந்ததாகக் கூறி கொட்டாஞ்சேனைப் பொலிசாரால் புல்டோசர் மூலம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

பல லொட்ஜ்கள் இரவோடிரவாக உள்ளேயிருந்தோரை எந்த முன் அனுமதியும் கொடுக்காமல் வெளியேற்றிவிட்டு சீல் வைக்கப்பட்டன.

செட்டியார் தெருவிலுள்ள ஒரு லொட்ஜில் நள்ளிரவில் வந்த பொலிசார் உள்ளேயிருந்தவர்களை வெளியேற்றிவிட்டு பூட்டிவிட்டு சென்றனர். சிறுவர்கள், குழந்தைகள் பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகள் எனப் பலதரப்பட்டோரும் கொட்டு மழையில் வீதியில் நின்ற கொடூரம் கூட நிகழ்ந்தது.

பிரேமதாச - புலிகள் நட்புக் காலத்தில் புலிகளும், அதற்கு பின்னரான காலங்களில் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கங்களும் இயக்கங்களிலிருந்து உதிரிகளாக விடுபட்டு அரச படைகளுடன் திரியும் பல தனிநபர்களும் கூட லொட்ஜ்களுக்கு சென்று மிரட்டுவது பணம் பறிப்பது, கடத்திக்கொண்டு போய் தாக்குவது, கொலை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் இன்னும் தொடர்வதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதெல்லாம் அரசும் பொலிசும் தமிழர்களை கொழும்பிலிருந்து அப்புறப்படுத்த எடுக்கும் உளவியல் ரீதியிலான தாக்குதல்கள் என்பது வெள்ளிடை மலை.

கொழும்பு தமிழர்களுக்குப் பாதுகாப்பான பிரதேசம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற அரசியல்வாதிகளும் மனித உரிமையாளர்களும் லொஜ்ட் பக்கம் சற்றுப் பார்த்தால் என்ன? ஒடுக்குமுறைக்கும்அதிகாரத்துக்கும் லஞ்சத்துக்கும் உறவென்ன வென்று தெரிந்தா போகும் ?

○

எழிலரசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குழந்தைகளும் உங்களிடையே...

8



MIKE WELLS/OXFAM

## துணிச்சலை ஊட்ட சந்தர்ப்பங்கள் முக்கியமில்லை!

டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட் --- தமிழில் அருண்

### அடையாளம் காணலும் உயிரியல் விதியும்

உயிரியல் விதியினை நிறைவு செய்வதற்கு ஆண்பிள்ளைகள் தமது தகப்பன்மாருடனும், பெண்பிள்ளைகள் தமது தாய்மாருடனும் அடையாளம் காணப்படுவது அவசியமாகும். பெண் பிள்ளைகள் பெண்களாகவும், ஆண்பிள்ளைகள் ஆண்களாகவும் வளரும் வளர்ச்சிப்போக்கில் இவ்வாறு அடையாளம் காணப்படுதல் ஒரு முக்கியமான படிமுறையாகும். சிறுவர்களுடனான உறவு மதிப்பையும், அன்பையும் அடிப்படையாகக்கொண்டதாக அமைகையில் இந்த அடையாளம் காணப்படலுக்கானவாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. குழந்தைகளின் அன்பைப் பெறுவதில் வெற்றி கொள்வதன் மூலம், எமது பாலியல் தொடர்பான பாத்திரத்தை சரிவர ஆற்றுவதற்கான அவர்களது விருப்பையும் வெற்றி கொள்ள முடிகிறது. ஆயினும் பெரும்பான்மையான பெற்றோர்கள் தாம் ஆற்றவேண்டிய பாலியல் பாத்திரம் என்ன என்பதை அறியாதவர்களாகவே உள்ளனர்.

### தந்தைமை அல்லது தாய்மைக்கான மாதிரிகள்:

பெரும்பாலான சமூகங்களில் தகப்பனின் செயற்பாடுகளை விட தெளிவான விதத்தில் தாயாரின் செயற்பாடுகள் வரையறை செய்யப்படுகின்றன. தாய்மை என்பது, பராமரித்தல், கட்டித்தழுவுதல், உடைமாற்றிவிடுதல், அன்பு செய்தல், அக்கறை காட்டல், புன்னகை செய்தல், உரையாடுதல், விளையாடுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். தாயின் பிள்ளைப் பராமரிப்பு என்பது உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய தாய்மைப் பராமரிப்பில் குறை ஏற்படும்போது அது குழந்தையின் உள ஆரோக்கிய நிலையை பாதிப்பதுடன் அதன் வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்கவும் செய்கிறது. இதற்கு நேரெதிராக தந்தைமை என்பது, இயற்கை சார்ந்ததாக அல்லாமல் கலாசாரம் சார்ந்ததாக உள்ளது. உயிரியல் ரீதியாக கூறுவதானால், தகப்பனாரது பங்களிப்பானது குழந்தை பிறக்க முன்னரே தொடங்கி முடிந்து விடுகிறது. ஏனைய விடயங்கள் எல்லாம் சமூக ரீதியாகவே தீர்மானிக்கப்படுகின்றன. ஆயினும், சில சமூகங்களில், ஆண்பிள்ளைகளில் மட்டுமே தகப்பன்மார் ஆர்வம் காட்டுகின்றனர். பெண்குழந்தைகள் குறைந்த பட்சம் பிள்ளைகளாகக் கூட ஏற்றுக்கொள்ளப்படுவதே இல்லை. வேறு சில சமூகங்களில் தகப்பன்மார் ஒரு பொறுமை வாய்ந்த ஆசிரியனின் பணியை ஆற்றுகின்றனர். குழந்தை வளர்ப்பு முழுக்க முழுக்க தாயாரிடமே விடப்பட்டு விடுகிறது. இன்னும் சில சமூகங்களில் குழந்தைகளை தகப்பன்மார் ஒரு சர்வாதிகாரியைப் போல கட்டி ஆளுகின்றனர்.

எமது சமூகத்தில் தகப்பன் பெரும்பாலும் பெயரளவுக்கே ஒரு குடும்பத்தலைவன் என்ற பெயரைக் காண்டவராகிறார். குடும்பத்தில் அவரது அந்தஸ்து என்ன என்பதோ, அவரது கடமைகள் என்ன என்பதோ பெரும்பாலும் வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை. அமெரிக்கத் தந்தை ஒரு மறைந்திருக்கும் உதவியாளராகவே கருதப்படுகிறார். காலையில் அவசரமாகப் போகிறார். பகல் முழுவதுமே நிற்பதில்லை. இரவில், களைத்துப்போய் வீடு திரும்புகிறார். வார இறுதிகளில் அவர் விளையாடுவதில்லை, தொலைக்காட்சியைப் பார்ப்பார் அல்லது முற்றத்துப் புல்லை மட்டமாக வெட்டிக்கொண்டிருப்பார். தகப்பனாருடன் பயனுள்ள விதத்தில் அவருடன் சேர்ந்து அவரது செயற்பாடுகளில் பங்காற்றவோ, உரையாடலில் ஈடுபடவோ பிள்ளைகட்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

இதன் விளைவாக, தாயாரே குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒருவராக, முற்றாக இல்லாவிட்டாலும் பிரதானமான பொறுப்பாளராக, கட்டுப்பாட்டொழுங்குக்கு பொறுப்புள்ளவராக அமைகின்றார். இத்தகைய ஒரு நிலை தாயாரின் நீண்டகாலமாக இருந்து வரும்பாத்திரத்தை ஆபத்துக்குள்ளாக்குகிறது. முன்னைய காலங்களில் தாயார் அன்பையும், இரக்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய அதேவேளைகளில், தகப்பனார் கட்டுப்பாட்டொழுங்கையும் விழுமியங்களையும் பிரதிநித்துவப்படுத்துபவராகவே இருந்தார். குழந்தைகள், குறிப்பாக ஆண் குழந்தைகள் தமது புரிதல்களை பெரும்பாலும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றனர். தகப்பனார் குறித்த சர்வதேசமயப்படுத்தப்பட்ட பிரதிமை ஆனது அவர்களை துர்நடத்தைகளை நோக்கிய தூண்டுதலுக்கு எதிராக எச்சரிப்பதாகவும், ஆக்கிரமிப்பு நடைமுறைகட்கு எதிராகத் திட்டுவதாகவும் அமைந்துள்ளது. இதனால் தகப்பன் ஸ்தானம் அவர்களைப் பொறுத்தவரை குடும்பத்துக்கும் புற உலகுக்கும் இடையிலான ஒரு பாலமாக அமைகிறது.

நவீன குடும்பங்களில், தகப்பனது பாத்திரம் தாயினது பாத்திரம் என்பவை பெருமளவுக்கு தனித்துவமானவையாக இருப்பதில்லை. பெரும்பாலான பெண்கள் வெளியிலே வேலை செய்கின்றார்கள்; குடும்பத்துக்கு வெளியே உள்ள 'ஆணின் உலகத்தை' நோக்கி அவர்கள் செல்கிறார்கள். அத்துடன் பெரும்பாலான ஆண்கள் வீட்டிலே பிள்ளைப் பராமரிப்பு வேலைகளில் குழந்தைகட்கு உணவூட்டல், உடைமாற்றல், குளிக்கவார்த்தல் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள்.

சில ஆண்கள் இந்தப் புதிய சந்தர்ப்பங்களை, குழந்தைகளுடன் பெருமளவுக்கு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள உதவுகின்றன என்பதால் அவற்றை வரவேற்கின்றார்கள் என்றபோதும், குழந்தை ஒரு தாயினதும், ஒரு தகப்பனினதும் குழந்தையாக இருப்பதிற்குப் பதில் இரண்டு தாய்மாரின் குழந்தையாக ஆகிப்போகும் ஒரு ஆபத்தும் இருக்கிறது என்பதும் உண்மையே.

### தகப்பனின் பாத்திரம்

தனது பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு தகப்பனாரின் தேவை ஒவ்வொரு குழந்தைக்கும் இருக்கிறது. ஆண்தன்மை என்பது ஒரு பாடத்திட்டத்தைப் படிப்பதன் மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. அது, நாளாந்த வாழ்க்கையின் போது தகப்பனின் மாதிரியினூடாகவே கற்றுக்கொள்ளப்படுகிறது. ஃபிராய்ட் சொன்னார்: சிறுபராயத்தில் தகப்பனாரது பாதுகாப்பு போன்ற ஒரு முக்கியமான வலிய பாதுகாப்புக்கு அவசியமில்லை. குழந்தைக்கு தேவைப்படுவதெல்லாம், தனது தகப்பனார் தன்னை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பார் என்று தெரிந்திருப்பது மட்டுமே.''

குழந்தைக்கு மூன்று ஆபத்தான சந்தர்ப்பங்களில் தகப்பனாரது வழிகாட்டல் தேவைப்படுகிறது. வெளியுலக மிரட்டல்களிலிருந்து பாதுகாப்பு குழந்தைக்கு தேவைப்படும்போது, அதன் உள் மனதின் பயங்களிலிருந்து பாதுகாப்பு தேவைப்படும்போது, தாயாரின் அளவுக்கதிகமான பாதுகாப்புணர்வு நடவடிக்கைகளின் போது இது தேவைப்படுகின்றது. வெளியுலகம் குழந்தைக்கு ஆபத்தானதாகும். பாதுகாப்பாக இருப்பதற்காக குழந்தைகட்கு, வீட்டிலுள்ள ஆபத்தான நவீன சாதனங்கள், அயல் வீடுகளிலுள்ள பழைய காலத்து நடைமுறைகள் என்பவற்றையிட்டு பாதுகாப்பு அவசியம். பல்வேறு விடயங்கட்கு மத்தியில் குழந்தை பாதையை ஒரு வாகனத்துடன் விபத்துக்குள்ளாகாமல் குறுக்கறுத்துப்போகவும், மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகாமல் மின்சார உபகரணங்களை பயன்படுத்தவும் பழகிக்கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு தனது கோபத்தில் வரும் விருப்பங்களையும், பயம் காரணமாக எழும் ஆர்வங்களையும் கையாள தகப்பனாரது உதவி தேவைப்படுகிறது. ஒவ்வொரு இளம் பையனும் தனது தாய் தனக்கு மட்டுமே சொந்தமானவளாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றான். இதற்கெதிரான எவ்வரையும் அவனால் சகிக்க முடிவதில்லை.

அத்துடன் தனது சகோதரனையும், தகப்பனையும் தூக்கியெறிந்துவிடுகின்ற கட்டற்ற செயல்களில் அவன் ஈடுபட்டிருக்கக்கூடும். அல்லது கனவுகளில் அவர்களை ஒதுக்கிக்கொள்ளக்கூடும். இத்தகைய தூக்கியெறிகின்ற கட்டற்ற செயற்பாடுகள் வன்முறை சார்ந்ததாகவும் இருக்கக்கூடும். அவர்களை ஒதுக்கிவிடுகின்ற கனவுகள், இரவில் பயந்து அழுவது, எழுந்து நடமாடுவது போன்ற தன்மைகளை உள்ளடக்கியிருக்கலாம். குழந்தையால் இன்னமும் தமது விருப்பங்கட்கும் உண்மை நிலைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதால், அது மிகவும் அதிகமாகப் பயப்படுகிறது. அக்குழந்தையால் தனது விருப்பங்கள் நிஜமாக முடியாது என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் தகப்பனாரது பாத்திரம் இரண்டு அம்சங்களைக்கொண்டது. ஒன்று குழந்தையின் விரக்தி, கோபம், பயம் என்பவற்றை அனுதாபத்துடன் அணுகுதல். அதேவேளை அமைதியான உறுதியுடன் பிள்ளைக்கு தைரியமூட்டும் விதத்தில் இச்செய்தியைத்தெரிவிக்க வேண்டும். ''கவலைப்பட வேண்டாம் மகனே.. நீ பயப்படுகின்ற உனது விருப்பங்களை செய்ய நான் விடமாட்டேன்...''.

சில பெற்றோர், தமது குழந்தைகளது அழிவுத்தன்மை வாய்ந்த, முறை தவறிய நடவடிக்கைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். சில இல்லங்களில் பெற்றோரது படுக்கை அறை இரவோ பகலோ எந்தநேரத்திலும் ஆக்கிரமிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. சில வீடுகளில், அளவுக்கதிகமாக இடங்கொடுக்கும் தகப்பன் முன், தாயை வார்த்தைகளாலோ அல்லது கைகளாலோ குழந்தைகள் தாக்குவதைக் காணலாம். இத்தகைய நடவடிக்கைகள் சகிக்கப்படுவது நல்லதல்ல. இவை குழந்தைகளிடையே குற்ற உணர்வு வளரவும், பெற்றோர் அவமானப்படவும் இடமளிக்கிறது.

தவறான நடத்தையுள்ள பிள்ளையிடமிருந்து தாயைப் பாதுகாக்கின்ற அதேவேளை, அளவுக்கதிகமான பாதுகாப்பும் குறித்து அக்கறைகாட்டும் தாயிடமிருந்தும் பிள்ளையைப் பாதுகாப்பது தகப்பனது கடமையாகும். இப்படி நான் சொல்லும் போது, அது தாய்மார் எல்லோரும் அளவுக்கு மீறிய பாதுகாப்புணர்வுக் கொண்டவர்கள் என்று சொல்வதாக கொள்ளப்படத் தேவையில்லை. ஆனால் சில தாய்மார் வயது வந்த பின்னும் கூட பிள்ளைகளை குழந்தைகளாக நடத்துவதைக் காணலாம். வெறுமனே வசதியாகவும், அன்புடனும் வளர்ப்பது மட்டுமல்ல, குழந்தையை விடுதலை 'பெறச்செய்வதும் தகப்பனது பொறுப்பாகும்.

தாயாருடைய அன்பு குழந்தைக்குதான் விரும்பப்படுகிறேன் என்று சொல்லுகிறது என்றால், தகப்பனாரது உறுதி குழந்தைக்கு தான் தகுதிவாய்ந்தவன் தான் என்று தெரிவிக்கிறது. தகப்பன்மாரது சொந்த வளர்ப்பில் பெருமளவுக்கு பாரம்பரிய தாக்கங்கள் இல்லாதிருப்பதால் அவர்களுக்கு தாய்மாரை விட இலகுவாக சுதந்திரத்தை அனுபவிக்க பிள்ளைகளை அனுமதிக்க முடியும். குழந்தையின் புதிய நடவடிக்கைகளைப் பார்க்கவும், அனுமதிக்கவும் தயாராக இருக்கும் போது குழந்தை குற்ற உணர்வு அற்றதாக வளர்ச்சி பெறுகிறது.

தகப்பனார் நம்பிக்கையையும், துணிச்சலையும் ஊட்டுவதற்கு உரிய சந்தர்ப்பங்கள் எவை என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. இத்தகைய செயல்கள் எங்கும் எப்போதும் எவ்விடத்திலும் செய்யப்படலாம். இச்செயல்கள் விளையாட்டில் விசேட திறமையையோ அல்லது, பொழுது போக்கு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதையோ, கட்டாயம் கொண்டிருந்தால் மட்டும் செய்யப்பட வேண்டும் என்பதில்லை. இதற்கு தேவையானதெல்லாம் உறுதியான வழிகாட்டியாகவும், நட்புள்ள பாதுகாவலனாகவும், செயற்பட உள்ள தயார் நிலை மட்டுமேயாகும்!

(வரும்)

www.tamilarangam.net



நாடகப் போட்டிகளில்



# சமூக நாடகங்களுக்கு கல்தா?

''மலையக 'நாடகப்பாரம்பரியத்திற்குப் பிறகு புதிய வரவுகள்'' என்ற பொன். பிரபாகரனின் 'சரிநிகர்' 129ம் இதழ் கட்டுரையை படித்தேன். சில உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் பிரபாகரனுக்கு நன்றி. அதே நேரத்தில் வெளியே தெரியாத சில தகவல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனது கருத்திற்கு ஆதாரமாக, 31.08.1997ல் கண்டி பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற பாரதி விழாவில் கௌரவிக்கப்பட்ட முன்னாள் கல்விப்பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.வை.எம். முஸ்லிம் தெரிவித்த கருத்துக்கள் அமைகின்றன.

கண்டி கல்விக்காரியாலயத்தில் பணியாற்றிய பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் பேசிய பொழுது கூறியதாவது.

''இந்த மலையக சமூகத்தின் திறமைகளைப்பற்றி சில உண்மைகளைத் தெரிவிக்க வேண்டும். முன்பு நான் அரசாங்க உத்தியோகத்தன். இப்பொழுது ஓய்வுபெற்றுவிட்டேன். அதனால் உண்மைகளைத் துணிந்து கூறலாம். முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்களும் மேடையில் இருப்பதால் இவற்றை தெரிவிக்க விரும்புகிறேன்.''

''நான்கு தமிழ்த்தினவிழாக்களை நடத்தியவன் என்ற ரீதியில் மலையக மாணவர்களின் திறமையைப் பற்றி என்னால் கூற முடியும். பொகவந்தலாவ சென் மேரிஸ் கல்லூரியின் ''வெளிச்சம் வெளியே இல்லை'' என்ற நாடகம் பிரதேச மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் வெற்றி பெற்று கொழும்பிலே நடைபெறவிருந்த அகில இலங்கை போட்டியில் பங்கு பற்ற தெரிவு செய்யப்பட்டது.''

''இந்த நாடகத்தை பங்குபற்ற அனுமதிக்கவேண்டாம் என எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனைச் சொன்னவர்கள் தலைவரின் பின்னால் இருந்தவர்கள். இந்த அரசியல்வாதிகளின் முயற்சிகளை அலட்சியப்படுத்தி இதனை பங்கு பற்ற அனுமதி வழங்கினேன்.''

''கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்த் தினவிழா இறுதிப் போட்டியில் பங்குபற்றிய இந்நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது. ஆனால் இதற்குரிய ''தங்கப்பதக்கம்'' விழாவில் வழங்கப்படவில்லை. இதே நாடகத்தை இறுதிப் போட்டியில் பங்குபற்றச் செய்தமைக்காக விசாரணை எல்லாம் நடைபெற்றது.''

''இந்த நாடகத்தை தெரிவு செய்த நடுவர்கள் இருவர் இங்கு இருக்கிறார்கள். ஒருவர் அந்தனி ஜீவா, மற்றவர் மானா மக்கீன். மலையகத்தவர்கள் எத்தனை முட்டுக்கட்டைகளைத் தாண்டி வரவேண்டியுள்ளது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்'' என்றார்.

'வெளிச்சம் வெளியே இல்லை என்ற நாடகம் தமிழ்த்தின விழாப் போட்டியில்' அகில இலங்கை ரீதியில் இறுதிப்போட்டிக்கு பங்கு பற்றியபொழுது, நான், பத்திரிகையாளரும், நாடகக்கலைஞருமாகிய மானா மக்கீன், வானொலி, நாடக தயாரிப்பாளரான மயில்வாகனம் சர்வானந்தா ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினோம். முதலில் புராண நாடகங்களைப் பார்வையிட்டோம். பின்னர், சமூக நாடகங்களைப் பார்வையிட்டு நீண்டநேரம் விவாதித்தபின்னர், முதல் இடத்துக்குரிய நாடகம் ''வெளிச்சம் வெளியே இல்லை'' என்பதை தெரிவித்தோம். உத்தியோக பூர்வமாக முதல் மூன்று இடங்களைப்பெற்ற நாடகங்கள் அறிவிக்கப்பட்டன.

இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது. எங்களை வாகனத்தில் கூட்டிக்கொண்டு வரும்போது கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த செல்வநாயகம் என்ற பெண்மணி சொன்னார் (இவரே நாடகப் போட்டிக்கு பொறுப்பாக இருந்தவர்) ''ஒரு முக்கிய அமைச்சிலிருந்து நாடகத்தை மேடையேற்ற வேண்டாம்'' என அறிவித்தல் வந்ததாகத் தெரிவித்தார். 'நாடகம் அரங்கேறிவிட்டது. முடிவு அறிவிக்கப்பட்டு விட்டது' என அந்தப் பெண்மணியிடம் மானா மக்கீன் கூறினார்.

மறுநாள் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கல்வி அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டனர். பரிசளிப்பின்போது முதலாம் இடத்தைப்பெற்ற நாடகத்திற்கு 'தங்கப் பதக்கம்' வழங்கப்படவில்லை.

நாடக நெறியாளர் என்னிடம் வந்து எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப்பார்த்தீர்களா என்றார். அப்பொழுது விழா முடிந்து அமைச்சர்கள் மேடையை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார்கள். நான் நெறியாளர் நிசாமை அழைத்துக்கொண்டு அமைச்சர் ரணிலிடம் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சென்றேன் - அவர் பாதுகாப்புடன் காரில் ஏறிவிட்டார்.

பின்னர் அமைச்சர் தொண்டமான் தன் பாதுகாவலருடன் வந்து கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று 'மலையகத்திற்கு நாடகத்திற்காக முதல் தடவையாக 'தங்கப் பதக்கம்' கிடைத்துள்ளது. அது வழங்கப்படவில்லை' என்று கூறியவாறு, இவர் தான் நாடகத்தை நெறிப்படுத்தியவர் என நிசாமை காட்டினேன். அமைச்சர் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு வெளியேறினார்.

அதன் பிறகு மானா மக்கீனும் ஆத்திரத்தில் குமுறிக்கொண்டிருந்தார். நான், நிசாம், மானா மக்கீன், ஹட்டனைச் சேர்ந்த இரு அதிபர்கள் என்ன செய்வது என கலந்தாலோசித்தோம்.

இறுதியில் கல்வியமைச்சுக்கு நாங்கள் ஐவரும் கையொப்பமிட்டு தந்தி அனுப்புவது என முடிவு செய்தோம். இரவே தலைமைத் தபால் அலுவலகத்திற்கு சென்று தந்தி கொடுப்பது என முடிவு செய்து மண்டபத்தை விட்டு வெளியே வந்தபொழுது இரு அதிபர்களும் தலைமறைவாகி விட்டார்கள். (இது நிசாமுக்கும் தெரியும்) இதனால் கோபமடைந்த மானா மக்கீன் ''சமூகத்தில் இவர்களுக்கு இருக்கும் அக்கறையைப் பாருங்கள்'' என குமுறினார். நிசாமும் தனது ஆசியர் தொழிலுக்கு ஆபத்து வரும் எனப் பயப்பட்டார்.

இரவு, வெகு நேரமாகிவிட்டதால் நாங்கள் பிரிந்து விட்டோம். மறுநாள் நான் மாத்திரம் கல்வியமைச்சரான ரணில் விக்கிரமசிங்காவுக்கு இதனை விசாரணை செய்யும்படி 'தந்தி' கொடுத்தேன். அந்தச் செய்தியை சரிநிகர், யுக்திய ஏனைய பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தேன். 'தொண்டாவின் வேலை' என்ற தலைப்பில் யுக்திய இந்தச் செய்தியை பிரசுரித்திருந்தது. சரிநிகரும் செய்தி வெளியிட்டிருந்தது. 'வீரகேசரி எனது கடிதம் ஒன்றைப் பிரசுரித்தது.

அதன்பிறகு எந்தத் தமிழ்த் தினவிழா போட்டிகளுக்கும் நான் நடுவராக அழைக்கப்படவில்லை. இது பற்றி கல்வியமைச்சின் உயர் அதிகாரியான அல்பிறட் அவர்களைக் கேட்டபொழுது ''என்னை எந்தப்போட்டிக்கும் இனி நடுவராக அழைக்கக்கூடாது'' என அமைச்சர் ஒருவர் கட்டளையிட்டிருப்பதாக தெரிவித்ததுடன் உங்கள் மலையக மக்களின் தலைவரான அமைச்சரே ''தங்கப் பதக்கம்' கொடுத்தால் உங்களுக்கு எல்லாம் ஆபத்து ஏற்படும் என எச்சரித்தார். அதனால் தான் வழங்கப்படவில்லை'' என்றார்.

அதன் பிறகு நடைபெற்ற தமிழ்த் தினவிழா போட்டிகளிலிருந்து சமூக நாடகங்கள் போட்டியை அகற்றிவிட்டார்கள். இதுபற்றி கேட்க ஒரு தமிழ் ஆசிரியர்கள் கூட முன்வராதது ஆச்சரியமே!

*அந்தனி ஜீவா*

## ஜே.வி.பி.யும்..

8→

காகவும் தொடர்ச்சியான சண்டையில் ஈடுபடுதல் என்பதே அமைப்பின் சகல தரப்பின் நோக்கமாக இருந்தது. தவிரவும் தம்மைச் சூழ இருந்த மரபுரீதியான சமூக கட்டமைப்பை உடைப்பது எப்படி என்பது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை.

கிளர்ச்சியின் பின்னர் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் தாங்கள் பெண்கள் என்ற காரணத்தால் அனுபவித்த (பால் ரீதியான) கொடுமைகளை வெளிக்கொண்டு வரவிரும்பவில்லை. அவற்றை தங்களுக்குள்ளேயே அமுக்கி கொண்டனர். பாலியல் முறைக்கேட்டுக்கோ வன்முறைக்கோ உள்ளான பெண்ணுக்கு இந்தச் சமூகம் ஒரு பொழுதும் ஆதரவாகவோ, உதவியாகவோ இருப்பதில்லை. இதனால் அவர்கள் தங்களுக்குள் ஒடுங்கிக்கொண்டனர். கட்சியும் கூட இவற்றை வெளிக்கொண்டுவர நடவடிக்கை எடுக்கவில்லை. மற்றுமொரு பிரச்சினை சிறைகளில் இருந்து விடதலையானதுமே பெண்களை அவர்களது பெற்றோர்கள் சிறையிட்டுவிட்டனர்.

அந்தப்பெண்கள் மேற்கொண்டு சமூகரீதியாவோ, அரசியல் ரீதியாகவோ தொழிற்பட முடியாதவர்களாக ஆகிப்போயினர்.

கதிர்காம அழகி மன்னம்பேரியின் விடயம், அவள் பொது மக்கள் மத்தியில் வைத்து வெளிப்படையாக சித்திரவதை செய்யப்பட்டதனால் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி வெளியாகியது.

ஆனால் ஏராளமான பெண்கள் சிறைகளில் இதே துயரத்தை அனுபவித்திருந்தனர்.

மீண்டும் 1978இல் ஜே.வி.பி மீள ஒழுங்கமைக்கப்பட்டபொழுது அது பெண்கள் தொடர்பாக என்ன அணுகுமுறையை கடைப்படித்தது எனக்கவனிப்பது சுவாரசியமானதாகும்.

1978இல் முதன்முதலாக ஜே.வி.பியின் அரசியல் வரலாற்றில் பெண்கள் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. **சோசலிசப்பெண்கள் அமைப்பு** என அது அழைக்கப்பட்டது. இவ்வமைப்பின் பிரதான குழுவில் ஆறு முழு நேரப்பெண் உறுப்பினர்கள் இருந்தனர். நந்தசீலி, கருணா, லீலா, பத்மா ஆகியோர் இவர்களுடன் அடங்குவர். பிரதான குழுவும் அதன் கூட்டங்களும் .ஆண் உறுப்பினர் ஒருவரால் தலைமைதாங்கப் பட்டன.

இந்த அமைப்பின் நோக்கம் பெண்களின் உரிமைகள் ஒழுங்கு முறைகள் தொடர்பான பிரச்சினைகளை கையாளுவதாக இருக்கவில்லை. இவ்வமைப்பு தற்போது அறியப்படுகின்ற பெண்ணிலைவாத இயக்கங்கள் நாட்டின் கலாசாரத்தை சீரழிக்கவெனவே உருவாக்கப்பட்டவை என கருதியது. தமது நோக்கம் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான மாற்றமான புரட்சிகர இயக்கம் ஒன்றை கட்டியெழுப்புவதேயென இவ்வமைப்பு கருதியது.

→17

# சாகாத மனிதம் : குடா நாட்டுக்குப் போய்விட்டு வந்த உணர்வு !

செப்டெம்பர் 2ம்திகதி மாலை 6.30க்கு கொழும்பு பிரிட்டிஷ் கவுன்ஸிலில் 'வடலிக்கூத்த ரின்' இரு நாடகங்களை பார்க்கக் கிடைத்தது.

முதலில் 15 நிமிடங்களுக்குள் தயாரிக்கப்பட்ட 'ஒற்றுமையே பலம்'' எனும் ஒத்திகைபார்க்கப் படாத ஓர் உருவக நாடகம்.

இன்றைய சமகாலப்பிரச்சினையின் நிகழ்வுகளை உட்கருவாகக் கொண்டிருந்த இந்நாடகம் பார்வையாளர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும் வலிமை குன்றி தீராத நோயாளியாகிப்போன எமது மக்களின் பிரச்சினையைப் பற்றிப் பேசியது. இவ் உருவக நாடகத்தின் சில குறியீடுகள். ஆரம்பமே நோயாளியாக டொக்டரை நோக்கிச் செல்வது தான் சிக்கல் நிறைந்த தன்மையொன்று தொக்கி நிற்கிறது.

இருப்பினும் இன்னும் இன்னும் தீராத நோயாளியாகிப்போய்க் கொண்டிருக்கும் எமது மக்களின் பிரச்சினைகளை தொட்டுக்காட்டுகிறது. படைப்பாளிகளின் பலம் அற்புதம்.

அடுத்ததாக யாழில், சென்ற மாதம் மட்டும் எட்டுத்தடவை மேடையேற்றப்பட்ட ''சாகாத மனிதம்'', யுத்தகால வாழ்வும், தாயை இழந்து தந்தையால் நிர்வகிக்கப்படும் நான்கு பிள்ளைகளும், அவர்களின் குடும்ப வாழ்நிலைச்சிக்கல்களும், இடம்பெயர்வும், காலச் சூழலும், அந்நியமாகிப்போகின்ற வயோதிப உறவும் அருமையாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் ஒரு சராசரி குடும்பத்தின் இன்றைய வாழ்நிலை எப்படியிருக்குமோ அப்படியே தெரிகின்றது. வராத பென்சன், இன்னமும் தொடரும் ரியூசன் வாழ்க்கை, கட்டுப்படுத்த முடியாத கடைசிப்பெடியன், வெளிநாடொன்றுக்கு செல்லும் மூத்த மகன், கொழும்புக்கு கம்பூட்டர் படிக்கச் செல்லும் இரண்டாவது மகன், பாஸ், கிளாலிப்பயணம்....

கல்யாண வயதும், காதலும் குடும்பப் பொறுப்புமென மூத்த மகள், ரியூசனும் கவலையற்ற தன்மையுமென இரண்டாவது மகள், அந்த ஒற்றை மேசை அரிக்கன் லாம்பு, கலையும் கூட்டுக் குடும்பம்.

அந்தக்கடிதம், வீட்டைவிட்டோடும் கடைசிப்பெடியன், அவர்களின் துயரம், அதையும் மீறியெழும் ஓர் நம்பிக்கை...

இடப்பெயர்வு கால மக்களின் அவசரம், துடிப்பு, துயரம், வேதனை எல்லாவற்றையும் மீறி ஒதுக்கப்படும் வயோதிபத்தின் வேதனை, (இறுதியில் அந்த யாசகனின் பாத்திரம் தேவைதானா? இருப்பினும் நடிப்பு நன்று.)

எல்லாப்பாத்திரங்களும் அப்படியே மனசுக்குள் வந்து குந்திக் கொண்டன. நாமும் குடாநாட்டுக்குள் கொஞ்சநேரம் குந்தியிருந்து விட்டு வந்த ஓர் உணர்வை ''சாகாத மனிதம்'' எமக்கு தந்ததென்றால் உண்மை தான்.

*வர்மா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிஸார் கப்பானி கவிதைகள்

நிசார் கப்பானி (1932-) அறபு உலகின் முக்கியமான கவிஞர்களுள் ஒருவர். சிரியா நாட்டில் பிறந்தவர். டமஸ்கஸ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவர். இருபத்தைந்து கவிதைத் தொகுதிகளும் ஒரு சுயசரிதை நூலும் வெளியிட்டுள்ளார். தற்கால அரபு இலக்கிய வரலாற்றில் 'ஜூன் இலக்கியம்' (அல் - அதப் அல் - ஹுசைறானி) என அழைக்கப்படும் இலக்கியப் போக்கை (1967 - 1987) இவரது 'பின்னடைவு நூலுக்கு எழுதிய அடிக்குறிப்புகள்' என்னும் கவிதை தொடக்கி வைத்தது என்பர். மஹ்மூட் தர்வீஷ், சமீஹ் அல் - காசிம், றஷீத் ஹுசைன் முதலியோர் இக்கவிதைப் போக்கைப் பிரதிபலித்த முக்கிய பலஸ்தீனக் கவிஞர்களாகக் கருதப்படுகின்றனர்.

'பின்னடைவு நூலுக்கு எழுதிய அடிக் குறிப்புகள்' என்ற இவரது கவிதை 1967ல் முதல் முதல் பிரசுரிக்கப்பட்டது. 1967ஜூன் யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியினால் நொறுங்குண்ட தேசத்தின் மனநிலையை இக்கவிதை பிரதிபலிக்கின்றது. அறபு உலகம் முழுவதிலும் ஆட்சியாளரால் இக் கவிதை தடைசெய்யப்பட்டது. அதன்விளை வாக ஒவ்வொரு அறபு நாட்டிலும் இக் கவிதை களவாகக் கடத்திச் செல்லப்பட்டது. ரகசியமாக அச்சிட்டு மனனம் செய்யப் பட்டது.

இங்கு இடம்பெறும் நிசார் கப்பானியின் மூன்று கவிதைகளும் அப்துல்லா அல்-உதாரி மொழி பெயர்த்து வெளியிட்ட Modern Poety of the Arab World (Penguin - 1986) என்னும் ஆங்கில நூலில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவை.

*தமிழ் வடிவம்: எம்.ஏ. நுஃமான்*



1

நண்பர்களே,
பண்டைய சொல் மரணித்துவிட்டது
பண்டைய நூல்கள் மரணித்துவிட்டன
தேய்ந்த சப்பாத்துக்களைப் போன்ற
ஓட்டைகளைக்கொண்ட நமது பேச்சும்
மரணித்துவிட்டது.
மரணித்த மனம் தோல்விக்கு
இட்டுச்சென்றது.

2

நமது கவிதைகள் புளித்துவிட்டன
பெண்களின் கூந்தலும், இரவுகளும்,
திரைச்சீலைகளும்
சாய்வுநாற்காலிகளும் புளிப்படைந்துவிட்டன
எல்லாமே புளித்துப்போய்விட்டன.

3

துயருற்ற என் தேசமே,
காதல் கவிதை எழுதும் கவிஞனான என்னை
ஒரு நொடியில்
கத்தியினால் கவிதை எழுதும்
கவிஞனாக மாற்றினாய்.

4

எமது உணர்வுகள் வார்த்தைக்குள்
அடங்காதவை
எமது கவிதைகள் பற்றி நாம்
வெட்கப்படவேண்டும்

5

கீழைத்தேய வார்த்தை ஜாலத்தால்,
ஒரு போதும் ஓர் ஈயைக்கூடக்
கொல்ல முடியாத
அந்தாரிய அகங்காரத்தால், *
பிடில் இசையால், முரசொலியால்
கிளர்ந்தெழுந்தோம்
போரிடச் சென்றோம்
தோல்வியடைந்தோம்.

6

எங்கள் கூச்சல்
எங்கள் செயல்களைவிட உரத்துக் கேட்டது
எங்கள் வாள்கள்
எங்களைவிட உயரமானவை
இதுதான் எமது அவலம்.

7

சுருக்கமாகச் சொன்னால்
நாகரீகத்தின் தொப்பியை நாம்
அணிந்திருக்கிறோம்
ஆயின், எமது ஆன்மா
கற்காலத்தில் ஜீவிக்கிறது.

8

சல்லடியும் புல்லாங்குழலும் கொண்டு
நீ ஒரு யுத்தத்தை வெல்ல முடியாது

9

எங்கள் அவசரத்தின் விலை
ஐம்பதாயிரம் புதிய கூடாரங்கள்

10

சுவர்க்கம் உன்னைக் கைவிட்டால்
சுவர்க்கத்தைச் சபிக்காதே
சபிக்காதே சந்தர்ப்ப சூழ்நிலைகளை
இறைவன் தான் விரும்புவோருக்கு
வெற்றியைக் கொடுக்கிறான்
வாள் அடித்துத்தர அவன் ஒரு கொல்லன்
அல்ல

11

காலையில் செய்திகளைக் கேட்பது
வேதனைக்குரியது
நாய்களின் குரைப்பைக் கேட்பது
வேதனைக்குரியது.

12

எங்கள் எதிரிகள்
எமது எல்லையைக் கடக்கவில்லை
எறும்புகள் போல் எமது
பலவீனங்களுக்கூடாக
அவர்கள் ஊர்ந்து சென்றனர்.

13

ஐயாயிரம் ஆண்டுகள்
எமது குகைகளில் தாடி வளர்க்கின்றன.
எமது நோட்டு அறியப்படாதது.
எமது கண்களோ ஈக்களின் சுவர்க்கமாயின.

நண்பர்களே
கதவுகளை உடையுங்கள்
உங்கள் மூளைகளைக் கழுவுங்கள்
உங்கள் ஆடைகளைக் கழுவுங்கள்

தோழர்களே
ஒரு நூலை வாசியுங்கள்
ஒரு நூலை எழுதுங்கள்
சொற்களையும் மாதுழைகளையும்
முந்திரிகளையும் பயிரிடுங்கள்
பனிவிழும் தேசத்துக்குப் பயணமாகுங்கள்
நீங்கள் குகைகளில் இருப்பது யாருக்கும்
தெரியாது
கலப்பின விலங்குகளாகவே நீங்கள்
கருதப்படுகிறீர்கள்.

14

வெற்று ஆன்மாக்களும்
தடித்த தோலும் உடையோர் நாம்
மந்திர வித்தையிலும் செஸ் ஆட்டத்திலும்
தூக்கத்திலும் நம் நாட்களைக் கழிக்கிறோம்
இறைவன் மனித குலத்தை இரட்சிக்க
அனுப்பிய
சமூகத்தினர் நாம் தாமா?

15

எமது வனாந்திரத்தின் எண்ணெய் வளம்
நெருப்புமிழும் ஆயுதமாகி இருக்க முடியும்
மரியாதைக் குரிய நம் முன்னோருக்கு
நாம் ஒரு களங்கமானோம்
நாமோ, நமது எண்ணெயை
பரத்தையரின் கால்விரல் ஊடே
வழிந்தோட விட்டோம்.

16

மக்களைக் கயிற்றில் கட்டி இழுத்தவாறு
ஜன்னல்களையும் பூட்டுக்களையும்
உடைத்தவாறு
வீதிகளின் ஊடாக நாம் எங்கெங்கோ
ஓடுகிறோம்
தவளைகளைப் போல் நாம் போற்றிப்
புகழ்கிறோம்
தவளைகளைப் போல் பிரகடனம் செய்கிறோம்
குள்ளர்களை வீரர்களாகவும்
வீரர்களை வீணர்களாகவும் மாற்றுகின்றோம்
பள்ளிவாயில்களில்
குறிக்கோளற்று மண்டியிடுகிறோம்
கவிதை எழுதுகிறோம்
பழமொழிகள் கூறுகிறோம்
எதிரியின் மீது வெற்றிக்காக
இறைவனையும் இறைஞ்சுகின்றோம்

## பின்னடைவு நூலுக்கு எழுதிய அடிக்குறிப்புகள்

17

சுல்தானை நான் சந்திக்க முடிந்தால்
எனக்கு ஆபத்து ஏதும் நிகழாது என்று
தெரிந்தால்
நான் அவருக்குச் சொல்லுவேன்:
'சுல்தான்
உமது வெறிநாய்கள் எனது ஆடைகளைக்
கிழித்து விட்டன
உமது உளவாளிகள் என்னைத் துரத்துகின்றனர்
அவர்களின் கண்கள் என்னைத் துரத்துகின்றன
அவர்களின் மூக்குகள் என்னைத்
துரத்துகின்றன
அவர்களின் பாதங்கள் என்னைத்
துரத்துகின்றன
விதியைப்போல் அவர்கள் என்னைத்
துரத்துகின்றனர்
எனது மனைவியை விசாரிக்கின்றனர்
எனது நண்பர்களின்
பெயர்களைக் குறித்துக்கொள்கின்றனர்
சுல்தான்,
நீ இரண்டு யுத்தங்களில் தோற்றாய்
சுல்தான்,
எமது மக்களில் அரைவாசிப்பேர்
நாக்கு அற்றவர்கள்
நாக்கு அற்றவர்களால் யாது பயன்?
எமது மக்களில் அரைவாசிப்பேர்
எறும்புகளைப் போலும் எலிகளைப் போலும்
சுவர்களுக்கிடையில் அடைபட்டுள்ளனர்

எனக்கு ஆபத்து ஏதும் நிகழாது என்று
தெரிந்தால்
நான் அவருக்குச் சொல்வேன்
'சுல்தான்,
நீ இரண்டு யுத்தங்களில் தோற்றாய்
நீ பிள்ளைகளின் தொடர்பினை இழந்தாய்

18

எமது ஐக்கியத்தை நாம் புதைக்காதிருந்தால்
அதன் இளம் உடலைத்
துப்பாக்கிச் சனியனால் கிழிக்காதிருந்தால்
அது நம் கண்களில் தங்கி இருந்திருந்தால்
நாய்கள் நமது தசைகளைக்
கடித்துக் குதறி இரா.

19

கோபமுற்ற ஒரு தலைமுறை நமக்கு
வேண்டும்
வானத்தை உழுதுவிட,
வரலாற்றைத் தகர்த்தெறிய
நமது சிந்தனைகளைத் தகர்த்தெறிய
கோபமுற்ற ஒருரு தலைமுறை நமக்கு
வேண்டும்

தவறுகளை மன்னிக்காத
வளைந்து கொடுக்காத
ஒரு புதிய தலைமுறை நமக்கு வேண்டும்
ராட்சதர்களின் ஒரு தலைமுறை நமக்கு
வேண்டும்

20

அறபுக் குழந்தைகளே,
எதிர்காலத்தின் தானியத் தளிர்களே,
நீங்கள் எமது சங்கிலிகளை உடைப்பீர்கள்
எமது தலை நிறைந்த அபினைக் கொல்வீர்கள்
மாயைகளைக் கொல்வீர்கள்.

அறபுக் குழந்தைகளே,
ஜன்னல்கள் அற்ற எமது தலைமுறையைப்
படியாதீர்
நாங்கள் பயனற்றவர்கள்
கெக்கரிக்கோதுபோல் பயனற்றவர்கள்
எங்களைப் பின்பற்றாதீர்
எங்களை அங்கீகரிக்காதீர்
எங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதீர்
நாங்கள் நேர்மையற்றவர், ஏமாற்றுக்காரர்

அறபுக் குழந்தைகளே,
வசந்தகால மழைத்துளிகளே
எதிர்காலத்தின் தானியத் தளிர்களே
தோல்வியை வெற்றிகொள்ளும்
தலைமுறை நீங்களே.


*** அந்தாரிய அகங்காரம்: அந்தார் (கிபி 525-615) இஸ்லாத்துக்கு முந்திய ஒரு அறபுக் கவிஞர்; அப்பெயருடைய ஒரு காவிய நாயகன். தோற்கடிக்க முடியாத வீரனின் குறியீடாவான்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிஸார் கப்பானி கவிதைகள்



## ஆட்சியாளரும் ஊர்க்குருவியும்

என் கவிதைகளை வாசிக்க
அறபுத்தாயகம் எங்கும் பயணம் செய்தேன்.
கவிதை பொதுமக்களின் ரொட்டி
என்பதை நான் புரிந்து கொண்டேன்
சொற்கள் மீன்கள் என்பதையும்
மக்கள் அவைவாழும் தண்ணீர் என்பதையும்
நான் அறிந்துகொண்டேன்.

அறபுத்தாயகத்தில்
ஒரு குறிப்புப் புத்தகத்துடன் மட்டுமே
நான் பயணம் செய்தேன்
பொலிஸ் நிலையங்கள் என்னை
அலைக்கழித்தன
ராணுவத்தினர் என்னை அலைக்கழித்தனர்
நான் வைத்திருந்ததெல்லாம்
என் சட்டைப்பையில் ஒரு ஊர்க்குருவிதான்
ஆனால் அந்த அதிகாரி
ஊர்க்குருவியின் கடவுச்சீட்டைக் கேட்டான்
சொற்களுக்கும் என் நாட்டில் கடவுச்சீட்டு
வேண்டும்

நான் என் கடவாணைச் சீட்டுக்காகக்*
காத்திருந்தேன்
மணல் மேடைகளை வெறித்து நோக்கியவாறு
ஒரே தாயகம் பற்றிக் கூறும்
ஒரே மக்களைப் பற்றிக்கூறும்
போஸ்டர்களை வாசித்தவாறு
நான் என் கடலாணைச் சீட்டுக்காகக்
காத்திருந்தேன்
உடைந்த கிளாஸ் துண்டுகளைப் போல
என் நாட்டின் கேற்றடியில்
நான் கைவிடப்பட்டேன்.

* கடவாணைச்சீட்டு Pass

## நான் துயரப் புகைவண்டி

ஆயிரக்கணக்கான புகைவண்டிகளில்
நான் பயணம் செய்கிறேன்
என் விரக்தியை ஆசனமாக்கி
என் சிகறற் புகைமேகத்தில் ஏறி
சவாரி செய்கிறேன்
என் காதலர்களின் விலாசங்களை
என் உடுப்புப்பெட்டியில் வைத்திருக்கிறேன்
என் நேற்றைய காதலர்கள் யாரோ?

தன்பாதையில்
தூரத்தின் தசைகளைச் சப்பியவாறு
தன் பாதையில் வயல்வெளிகளை
அழித்தவாறு
தன் பாதையில் மரங்களை விழுங்கியவாறு
ஏரிகளின் பாதங்களை நக்கியவாறு
புகைவண்டி செல்கிறது
வேகமாக, வேகமாக.....

பரிசோதகன் என்னிடம் டிக்கட் கேட்கிறான்
என் தரிப்பிடத்தையும் கேட்கிறான்
எனக்கு ஒரு தரிப்பிடம் உண்டா?
உலகில் எந்த ஹோட்டலுக்கும்
என்னைத் தெரியாது
என் காதலர்களின் விலாசங்களும் தெரியாது.

நானே துயரப் புகைவண்டி
நான் நிற்கக்கூடிய இறங்குதளங்கள்
எவையும் இல்லை
என் எல்லாப் பயணங்களிலும்
என் இறங்குதளங்கள் வழுவிச் செல்கின்றன
என் புகைவண்டி நிலையங்கள்
என்னைவிட்டும் வழுவிச் செல்கின்றன.

**தமிழில்: எம்.ஏ.நுஃமான்**

'நிசார் கப்பானி'யின் கவிதைகள் அடங்கிய தொகுப்பொன்று Joggers (ஓடித்திரிபவர்கள்) என்ற தலைப்பில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.
இஸ்ரேலுடனான அரபு நாடுகளின் குருட்டுத்தனமான சமாதான-உடன்படிக்கைகளை எள்ளி நகையாடும்கவிதைகளடங்கிய இத்தொகுப்பிலுள்ள ஒரு கவிதையின் மொழிபெயர்ப்பே கீழுள்ளது. 'ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள்' எனும் தலைப்பில் இக்கவிதை 'பலஸ்தீன் டைம்ஸ்'ஸில் பிரசுரமாகியிருந்தது.
யசீர் அறபாத் இவர் பற்றி இவ்வாறு கூறுகிறார்"கப்பானி என்னுடைய நல்ல நண்பர், இவர் எங்களோடு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டிருந்தால்,நாம் எவ்வளவு கஸ்டங்களை எதிர் கொண்டோம்-எவ்வளவு முயற்சிகளைப் பிரயோகித்தோம் என்பதை அறிந்திருப்பார்."
கவிதையின் தமிழ் வடிவம்: எம்.கே. எம்.ஷகீப்.

## ஒரு கோபக்காரக் கவிஞனின் செய்யுள்

1
எம் இறுதிக் கன்னியச் சுவரும்
வீழ்ந்து போனது,
நாம் சந்தோஷித்தோம்
ஆடிக்களித்தோம்
ஒப்பமுமிட்டோம்.
'கோழைகளின் சமாதானம்' என
எம்மை ஆசீர்வதித்தார்கள்:
இதைவிட
.... எதுவும் எம்மை இனி தலைகுனிந்து;
வெட்கப்பட வைக்காது....
எம் பெருமிதத்தின் இரத்தக்குழாய்களெல்லாம்
வரண்டு வற்றியாயிற்று.

2
ஐம்பதாவது தடவையாகவும்,
எம் மானம், நேர்மை, கற்பு, கண்ணியம்
எல்லாம் போயாகிவிட்டது.
எதுவித பதற்றமோ
எந்தச் சத்தங்களோ .... எம்மிடம் இல்லை...
எல்லாம் இழந்து....,
இரத்தத்தைப் பார்க்கையில் ஏற்படுகிற
அற்ப அதிர்வுமற்று
மொத்தமாய் எல்லாம் போயிற்று
ஐம்பதாவது தடவையாகவும்
நாம் ஓடித்திரிகிற காலத்தில்
நுழைந்தோம்
அறுவைக் கடைக்கு முன்னால்
ஆட்டு மந்தைகளைப் போல்
வரிசையாய் நாம் நின்றோம்
கொலைகாரர்களின் சப்பாத்துக்களை
முத்தமிடுவதற்காய்
மூச்சுத்திணறத்திணற நாம்
போட்டி போட்டு ஓடினோம்

3.
ஐம்பது ஆண்டுகளாய் அவர்கள்
எம் பிள்ளைகளை
பட்டினி போட்டார்கள்
நீண்ட நோன்பிருப்பின் இறுதியில்
ஒரு வெங்காயத்தை அவர்கள்
எமக்கு எறிந்தனர்

4.
ஐம்பதாவது தடவையாக
அராபியர் கரங்களில் இருந்து
கிரடனாவும் வீழ்ந்தது,
வரலாறும் வீழ்ந்தது
எம் ஆத்மாக்களின் தூண்களும்
எம் சுயத்தினது தூண்களும்
மொத்தமாய் ஐம்பதாவது முறையாகவும்
வீழ்ந்தன.
வீரப்பாடல்கள் இனி இல்லை


இஷபெய்ல்யா அண்டாக்யா
ஹட்டின்... அம்மோரியா
எல்லாம் எதுவுமற்று வீழ்ந்தன.
''மேரி''யும் அவர்களின் சிறைக்கைதியானாள்;
வானத்து அத்தாட்சிகளைக் காக்க
எந்த வீரனுமே இல்லை!

5.
எம் இறுதிக் கன்னிகையும்
ரோமர்களிடம் வீழ்ந்து போனாள்.
இனிச்சண்டையிட என்னதான் இருக்கிறது?
எம் மாளிகையில் தேநீர் ஊற்றுகிற
பெண் கூட இல்லை..
இனி யாரைத்தான் காக்க?

6.
ஓர் அந்தலூசியா கூட
எம் கரங்களில் இல்லை
அவர்கள் கதவுகளைத் திருடினார்கள்
சுவர்களைத் திருடினார்கள்
மனைவிகளைத் திருடினார்கள்
பிள்ளைகளைத் திருடினார்கள்
ஒலிவ் மரங்கள், எண்ணெய் வளங்கள்
வீதிகளில் உள்ள கற்கள்
எலுமிச்சைச் செடியின் ஞாபகங்கள்
எல்லாவற்றையும் திருடினார்கள்
இலந்தைப்-பழங்களை,
நாணயங்களை,
பள்ளிவாசல் விளக்குகளின் எண்ணைகளைக்கூட
அவர்கள் திருடினார்கள்.

7.
'காஸா' எனப்படுகிற
ஒரு மீன்சாடியை அவர்கள்
எம் கையில் விட்டுவிட்டுப் போனார்கள்
'ஜெரிக்கோ' என்றழைக்கிற
ஒரு காய்ந்த எலும்பும் கிடைத்தது
கூரைகள் அற்ற
ஒழுங்காகக் கட்டப்படாத
பலஸ்தீன் என்ற ஹோட்டலையும்
எம்மிடம் விட்டுச் சென்றார்கள்.
இன்னும்;
எலும்புகளற்ற ஒரு செத்த உடம்பையும்
விரல்கள் அற்ற ஒரு கையையும்
அவர்கள் எமக்குத் தந்துவிட்டுச் சென்றார்கள்

8.
நினைத்து அழுவதற்கு
ஒரு துண்டுச் சின்னமும்
எமக்காக இல்லை
அவர்கள் கண்களையே
எடுத்துச்சென்றுவிட்டபோது
ஒரு சமூகத்தால் அழமுடிவதெப்படி?



9.
ஒஸ்லோவில்
இந்த இரகசிய மன்றத்தின் பின்
மொத்தமாய் நாம் கருகிப்போனோம்
ஒரு கோதுமை மணியைவிடச்
சின்னதாய்
ஓர் இருப்பிடத்தை
எமக்கவர்கள் தந்தனர்
ஓர் அஸ்பிரின் குளிசையைப் போல்
தண்ணீரின்றி
விழுங்கிவிடுமளவு
அவர்கள் எமக்கோர் இருப்பிடம் தந்தனர்.

10
ஐம்பது வருடங்களின் பின்னரும்
இடமற்ற ஆயிரம் ஆயிரம்
நாய்களைப் போல்
வறண்ட நிலமே
எம் வசிப்பிடத் தீர்ப்பாயிற்று

11.
ஐம்பது வருடங்களின் பின்னரும்
ஓர் உறைவிடத்தை நாம் காணவில்லை
ஒரு கானலைக் கண்டோம்
ஆனால் அது சமாதானம் அல்ல
எம் இதயங்களை ஊடறுத்துச் செல்கிற
ஓர் ஈட்டி அது
இன்னும்
அது ஒரு பலாத்காரமும் கூட!

12
கடுகளவேனும் பெறுமதியற்றது
ஒஸ்லோவில் பொறித்தவைகள்.
மக்களின் ஆத்மாக்கள்
உயிரோடிருக்கையில்
ஓடித்திரிவதில் தான் பயனென்ன?

13
பசுமை மிகு சமாதானத்தையும்
ஒரு வெள்ளைப் பிறையையும்
ஒரு நீலக்கடலையும்
கப்பல்கள் கட்டும்
ஓர் துறையையும்
நாம் நீண்ட நாளாய்
கனவில் கண்டோம்
ஆனால்
திடீரெனப் பார்த்த போது
நாம் சாணக்கும்பல் ஒன்றில்
குந்திக் கொண்டிருந்தோம்

14
பயந்தாங் கொள்ளிகளின்
சமாதானம் பற்றி
யார் அவர்களிடம் கேள்வி கேட்கப்போகிறார்கள்
தாயக சில்லறை வியாபாரம் பற்றியோ
உடன்படிக்கைகள் பற்றியோ
வியாபாரிகள் பற்றியோ
பங்குதாரர்கள் பற்றியோ
யார் தான் அவர்களிடம்
கேள்வி கேட்கப்போகிறார்கள்
செத்தவரின் சமாதானம் பற்றிக் கூட
யார் கேட்கப்போகிறார்கள்

அவர்கள் வீதிகளை மௌனப்படுத்தினார்கள்
கேள்விகளையும்
கேள்வி கேட்டவர்களையும்
கொன்றொழித்தார்கள்

15.
எம் ஈரல்களைச் சப்புகிற
பிறக்கப் போகும் குழந்தைகளைக்
கொன்றொழிக்கப்போகின்ற
ஒரு பெண்ணுக்கு
எம் விருப்பம் இன்றியே
திருமணம் செய்துவைக்கப்பட்டோம்

நாம் அவளை தேனிலவுக்கு
அழைத்துச் சென்றோம்
அங்கே
குடித்துக்களித்தோம்
ஆடினோம்
மனப்பாடமிட்டிருந்த
காதல் கவிதைகளையெல்லாம்
பாடினோம்
பெற்றோருமாகினோம்
குழந்தைகள் அழகை உருக்குலைத்து
பாய்ந்து திரிகிற தவளைகள் ஆக்கினோம்
நா(மு)ம்
ஒரு நாடுமின்றி ஒரு குழந்தையுமின்றி
துயரங்களின் அருகாமைகளைச்
சுற்றிச் சுற்றி அலைபவர்களானோம்

16
கல்யாண விருந்துக்கு வராதவர்களுக்காய்
ஓரிடத்தும் இல்லாதவாறு
அராபிய நடனம்
அராபிய உணவு
அராபிய சங்கீதம்
ஏன் அராபிய ஒழுக்கம்
எல்லாம் இருந்தன

17
அரைவாசிச் சீதனம்
டொலரில் இருந்தது
வைரமோதிரமும் டொலரில் வாங்கப்பட்டது
திருமணப் பதிவு காரரின் கூலியும்
டொலரில் கொடுக்கப்பட்டது
திருமணக் கேக் - அமெரிக்கா அன்பளித்தது
மணமகளின் ஆடை, பூக்கள்
மெழுகுவர்த்திகள்
எல்லாம்
அமெரிக்கத்தயாரிப்பு

18.
பலஸ்தீன் இல்லாமலேயே
திருமணம் முடிந்தது....
அவளின் உருவத்தை எல்லா ஒளிபரப்புக்களிலும்,
கண்டாய்
அவளின் அழுகை..... சமுத்திரமூடே
சிக்காக்கோ, நியூயோர்க்...
பயணித்ததைக் கண்டாய்.

அறுவைக்கு வந்த பறவையாய்
புலம்புகிறேன்:
இந்தத் திருமணம் எனது திருமணமல்ல.
இந்த ஆடை என்னுடைய ஆடையல்ல,
இந்த வெட்கம் என்னுடைய வெட்கமல்ல....,
இந்த 'வெட்கத்தை' நான்
ஒருபோதும் ஏற்கமாட்டேன்
அமெரிக்காவே....!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரிஸ்மோனா : அரசுக்கு அக்கறையில்லை !

இலங்கை அரசு ஐரிஸ் மோனா பயணிகள் கப்பலை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்து ஓகஸ்ட் 29ம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் உட்பட பெறுமதிமிக்கவையும் எதிரிக்குச் சாதகமானவையுமான பொருட்களைப் புலிகளிடம் பறிகொடுத்தும் சற்றும் மனந்தளதராத விக்கிரமாதித்தனாக யுத்தத்தை வீராவேசத்துடன் முன்னெடுத்துச் செல்லும் இலங்கை அரசுக்கு ஐரிஸ் மோனா விவகாரம் மறந்த ஒன்றாகிப் போய்விட்டது. ஆயினும் கப்பல் சிப்பந்திகளைப் பொறுத்த வரையிலும் அவர்களைச் சார்ந்தோரைப் பொறுத்த வரையிலும் ஜீவமரணப் போராட்டம் நிறைந்த கவலைக்குரிய விடயம் என்பதை நிராகரித்து விடமுடியாது.

இக்கப்பல் நியூகோ சிப்பிங் கொம்பனியிடமிருந்து இலங்கை அரசால் ரூ.85,000 தினக்கூலிக்காகச் சேவைக்கமர்த்தப்பட்டதாகும் இதன் பெறுமதி சுமார் ஆறு கோடி ரூபா எனக்கூறப்படுகிறது. திருகோணமலைக்கும் தீவுப் பகுதிக்கும் இடையே பயணிகளை ஏற்றி இறக்குவதுதான் இதன் கடமையாக இருந்தது.

விடுதலையான சிப்பந்தி ஒருவரின் கூற்றுப்படி வழக்கம் போல் 28.08.95 மாலை 121 பயணியுடன் திருகோணமலையிலிருந்து காரை நகரை நோக்கிப் புறப்பட்டது. ஐந்து சிங்களவர், மூன்று தமிழர் உட்பட எட்டுச் சிப்பந்திகள் கப்பலில் இருந்தனர்.

முல்லைத்தீவுக்கு நேராகச் சென்று கொண்டிருந்தபோது திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்கள் கப்பலைத் தாக்க ஆரம்பித்தன. 29 அதிகாலை 2.10 க்கு ஆரம்பித்த துப்பாக்கி வேட்டுக்கள் 2.15மணியளவில் நின்ற போது கப்பல் அருகில் ஏதோ ஒன்று அசைவது போன்ற உணர்வைத்தொடர்ந்து மூன்று விடுதலைப் புலிகள் கப்பலில் ஏறிவிட்டனர். அதில் ஒருவர் பெண். முதலில் எதிர்ப்பட்ட சிப்பந்தியிடம் கேட்கப்பட்ட கேள்வி 'நீங்கள் யார்?' என்பதாகும். அவர் கப்பலில் தான் செய்யும் கடமையைக் கூறினார். 'அசையாமல் அப்படியே நில்லுங்கள்' என்று மரியாதையாகவும் இறுக்கமாகவும பணிக்கப்பட்டார் அவர்.

இதற்கிடையில் துப்பாக்கி வேட்டுக்களினால் ஒரு வயோதிப மாதுவும் இளைஞரும் காயமடைந்திருந்தனர். உள்ளே நுழைந்த விடுதலைப்புலிகள் தங்கள் அறிவுறுத்தலின் பேரில் கப்பலை செலுத்துமாறு பணித்தனர். கப்பல் திசை மாறிச்செல்ல ஆரம்பித்தது.

சிப்பந்திகள், பயணிகள் பற்றிய விபரங்கள் கரைக்கு அறிவிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. பெண் புலி உறுப்பினர் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி அளிப்பதில் ஈடுபட்டார்.

கப்பல் முல்லைத்தீவையொட்டிய கரையை அடைந்தபொழுது நன்கு விடிந்து விட்டது. பயணிகள் பவ்வியமாக இறக்கப்பட்டனர். காயமடைந்த இளைஞன் சுயநினைவு அற்றுப்போயிருந்தான். பின்னர் இவர் மரணமானார். இப்போது சிப்பந்திகள் மட்டும் கப்பலில்! இரண்டு விடுதலைப் புலிகள் துப்பாக்கிகளுடன் நெருங்கினர். தாங்கள் கொல்லப்படக்கூடும் என் சிப்பந்திகள் பயந்த போதும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

அவர்களை அடுத்து வந்தவர் கடற்புலிகளின் தளபதியான சூசை. தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, மிகவும் மரியாதையாக கப்பல் சம்பந்தமான விபரங்களையும், சிப்பந்திகள் பற்றியும் கேட்டறிந்தார். உங்கள் உடைமைகளை மட்டும் எடுத்துக் கொண்டு வாருங்கள் எனக்கேட்டுக்கொண்டார். இலங்கை அரசுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கும் தளபதி சூசையின் பவ்வியமான வார்த்தைகளில் நெகிழ்ந்து போன சிப்பந்திகள் தத்தம் உடைமைகளுடன் பின்னே சென்றார்கள்.

இரண்டு நாட்களில் உங்களை விட்டு விடுவோம் என்று சொன்ன வார்த்தைகளை அவர்கள் நடைமுறைப்படுத்தாத போதிலும் மிகவும் கண்ணியமாகவே சிப்பந்திகளை நடத்தியுள்ளார்கள். ''ஐயா'' என்று மரியாதையாகவே உரையாடியுள்ளனர். ''அடிபாடுகள்'' நடந்த வேளையிலும் கூட இந்த ஒழுங்கு கண்ணியமாகவே கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது.

வெளிப்பகுதி நடப்புகளை அறிந்து கொள்வதற்காக கொழும்பு தமிழ் வாரப்பத்திரிகையொன்று ஒழுங்காக விநியோகிக்கப்பட்டிருக்கிறது. பிளேட், சவர்க்காரம், உடைகள், உணவு உட்பட குறைவின்றி நடத்தியிருக்கிறார்கள். ஓடுவதற்கு, உடற்பயிற்சி செய்வதற்கு, உலாவி வருவதற்கு எல்லாச் சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வந்து சந்திப்பதற்கும் அவர்களுடன் சுதந்திரமாக உரையாடுவதற்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. சிப்பந்திகளின் கடிதங்கள் படித்துப்பார்க்காமலேயே செஞ்சிலுவைச்சங்கப்பிரதிநிதிகள் மூலமாக உறவினர்களிடம் கையளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் பயணக்கைதிகள் நன்கு கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசு அவர்கள் விடயத்தில் கையாலாகாத்தனமாகவே நடந்து கொண்டிருக்கிறது. தனக்குத்தானே முதுகில் தட்டி இராஜதந்திரம் செய்துகொண்டது.

பணயக்கைதிகள் பிடிபட்டதும் இலங்கை அரசு செய்த முதல் வேலை கப்பல் கம்பனியுடனான ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டதுதான். ஒரு புத்திசாலியான முதலாளியாக அரசு நடந்துகொண்டமை பற்றி பணயக்கைதிகள் பத்திரிகை மூலமாக அறிந்த போது துடித்துப் போனார்களாம்.

காலப்போக்கில் அரசின் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்க்க உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தார்கள். விடுதலைப் புலிகளோ 'இந்த அரசை நம்பி உங்களை நீங்களே வீணாக வருத்திக்கொள்ளாதீர்கள் என்று பல தடவையும் விநயமாகச் சொல்லியும் உண்ணா நோன்பை ஆரம்பித்து' பட்டபின் பணயக்கைதிகளுக்கு புலிகளின் வார்த்தை எவ்வளவு சரியானது என்று தெரிந்தது.

இருபது மாதங்களின் பின் மூவர் விடுதலை செய்யப்பட்டார்கள். பிரதம பொறியியலாளர் வி. சண்முகம், உதவியாளர்களான சே. குமாரசிங்கம, மு. கனகலிங்கம் ஆகிய மூன்று தமிழர்களுமே விடுதலை செய்யப்பட்டனர்.

ஐந்து சிங்களத் தோழர்களும் பணயமாக் கைதிகளாகத் தொடர்ந்து இருக்க தாங்கள் மூவரும் விடுதலையானதில் இம்மூவருக்கும் ஒரு மனத்தாக்கம் தான் எனினும் என்ன செய்ய முடியும்.

காலியைச் சேர்ந்த கெப்டன் லோயலா பர்னாந்து, பொல்காவலையைச் சேர்ந்த பிரதம அலுவலர் ஜயத்துபண்டா விஜயக்கோன், திருகோணமலையைச் சேர்ந்த கே.வி. ரிச்சட், சிலாபத்தைச் சேர்ந்த அன்டனி, பன்விலையைச்சேர்ந்த முனசிங்க ஆகியோர் இரண்டு வருடங்களைக் கடந்து இன்னமும் பணயக் கைதிகளாகவே இருக்கின்றார்கள். இவர்களுடன் அண்மையில் புலிகளால் கைப்பற்றப்பட்ட மிஷன் கப்பற் பணியாளர்களும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

யுத்தக்காலங்களில் இவையெல்லாம் சாதாரணம் என்று அரசு

20→

# தலித்தியக் குறிப்புகள்



## அடையாளங்களை தற்கொலை செய்தல்

சாதாரண கீழ் மத்திய தர வர்க்கத்திலிருந்து மத்திய தர வர்க்கத்தை நோக்கி தம்மை கடத்துவதற்கான முயற்சிகளை கீழ் மத்திய தர வர்க்கத்தினர் செய்வர். சில வேளை அதில் வெற்றியையும் காண்பர். முன்னையதிலேயே சில வேளை தொடர்ந்தும் நிலைப்பர் அல்லது அடுத்த கட்டத்தை நோக்கிய வளர்ச்சியில் ஈடுபவர். இம்முயற்சிகளில் வெற்றியடைந்தால் அப்போதைய அவர்களின் நிலையிருப்பைக் கொண்டே அவர்களின் வர்க்கத்தை அடை யாளப்படுத்துவர். ஆனால் சாதி அப்படிப்பட்டதல்ல. அது பிறப்பால் தீர்மானிக்கப்பட்டது. அது வெறுமனே சாதிப்பெயரோடு சம்பந்தப்பட்ட ஒன்று மட்டுமல்ல. அதன் பின்னால், ஒட்டுமொத்த ஒடுக்குமுறைப் பண்புகளும் வேர்கொண்டுள்ளது. சில வேளை ஒருவரால் ஒரு இனத்தை விட்டு இன்னொரு இனத்துக்கு (மொழிகளையும் மாற்றிக் கொண்டு) மாறிப் போய் விடலாம். (நடைமுறையில் அப்படி நிறைய அனுபவங்களை கண்டிருக்கிறோம்.) ஏன், மதங்க ளைக் கூட மாற்றிக்கொண்டு சென்று விடலாம். ஆனால் சாதி அப்பேர்பட்டதல்ல. சாதிப் படிநிலை யில் கீழிருந்து மேல் நோக்கி போவதெல் லாம் முடியாது. தீர்மானகரமாகவே "இன்ன சாதி" இன்ன சாதிதான் என நிர்ணயிக்கப்பட்டு விட்ட விடயம்.

இதனைக் கருத்திற் கொள்கையில் இந்த சாதிய அடையாளத்தை துறப்பதில் விளிம்பு நிலைச் சாதியினருக்கு ஆர்வமிருப்பினும் அதனை அவர்களால் சாதிக்க இயலாது. என்வே தான் சாதிய அடையாளங்களை இயலுமானவரை மூடி மறைக்கும் ஆர்வமும், முயற்சியும் இவர்களிடம் நிறையவே இருக்கும். விளிம்பு நிலைச்சாதியினரில் காணப்படுகின்ற அரசியல் ரீதியாக முன்னேறிய பிரிவினரோ (குறிப்பாக சாதியப் பண்புகளைப் புரிந்துகொண்ட விளங்கிக் கொண்டு மாற்றைத் தேடி புறப்படும் தரப்பினர்) இந்த சாதிய மூடிமறைப்பை செய்வதில்லை. மாறாக சில வேள்ளகளில் தான் இன்ன சாதி தான் என பகிரங்க மாகவே-தைரியமாக கூறி சவால் விடுவார்கள்.

அந்த வகையில் முன்னாள் அருந்ததியர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்த "பாரதி" முக்கியமானவர். 'அஸீஸ்' போன்ற தொழிற்சங்கத் தலைவர்களுடன் சேர்ந்து சரிசமமாக தொழிற் புரிந்தவர். அந்தக் காலத்திலேயே "மெட்றிக்" பாஸ் பண்ணின அருந்ததியர் என அவரது நன்பர் திராவிட கழக இளஞ்செழியன் என்னிடம் கூறுவதுண்டு. பாரதி நல்ல ஆங்கிலப் புலமையுடையவர். பல இந்திய அரசியற் தலைவர்களின் இலங்கை விஜயங்களின் போது அவர்களது உரைகளைத் தமிழுக்கு மொழி பெயர்த்தவர். இலங்கை திராவிட கழகத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தவர். இவர் மேடைகளில் பகிரங்கமாகவே "நான் ஒரு சக்கிலியன்" என உரக்கச் சொல்லுபவர். அவரது சமூக அந்தஸ்து காரணமாக அவரால் வர்க்க ரீதியில் மேநிலையாக்கமடைய முடிந்தது. அவரின் இறப்புக்குப் பின் அவரது பிள்ளைகள், தங்களது தகப்பனை இந்த விடயத்தில் பெருங்குற்றமிழைத்தவராகவே காண்கின்றனர்.

அவரது பிள்ளைகள் சாதிய அடையாளங்களை ஒளிப்பதிலும், மூடி மறைப்பதிலும் மிகுந்த முயற்சிகளை செய்தார்கள். உறவினர்களுடனான உறவை துண்டிப்பது, உறவினர்களோடு கலந்து வாழாமல் தனித்து ஓரமாக வாழ்வது, என்பது போன்ற முயற்சிகள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களை மணந்து கொண்டு அந்த சமூகங்களாகவே மாறிவிட்டனர்.

அண்மையில் தோழர் இளஞ்செழியனோடு இது குறித்து உரையாடிக்கொண்டிருந்த போது, அவர் இப்படியொரு விடயத்தையும் கூறினார். தான் வீரகேசரியில் கண்ட ஒரு திருமண விளம்பரத்தில் லண்டனிலிருந்து ஒரு படித்த பெண்ணொருவர், தான் கண்டி மஹியாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் (கண்டி மஹியாவை என்று சொன்னாலே யாருக்கும் தெரியும் அது அருந்ததியர்கள் வாழும் பெரிய குடியிருப்புப் பகுதி என்பது.) தான் சக்கிலியர் சமூகத்தைச் சேர்ந்தவரென்றும் அதே சமூத்தைச் சேர்ந்த ஒருவரையே தான் மணமுடிக்க விரும்புவதாகவும் கூறப்பட்ட விளம்பரம் ஒன்று இருந்ததாகக் குறிப்பிட்டார். இப்படியான அதிசயிக்கத்தக்க போக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஒரு புறம் மேநிலையாக்கத்தோடு சாதிய அடையாளங்களை மூடி மறைத்துக்கொண்டு போபவர்கள் நிறையவே உள்ள அதே நேரம், சாதிய ஒடுக்கு முறைகளால் தாக்கமுற்றவர், சமூக மேநிலையாக்கமடைந்ததன் பின், தான் இன்ன சாதி தான் என உரக்க சத்தமிட்டு சமூகத்துக்கு சவால் விடும் முன்னேறிய போக்குகள் சிலவற்றையும் காணமுடிகிறது. (நிச்சயமாக இது போன்ற சம்பவத்துக்குப் பின்னால் சாதிய பெருமிதம் இருக்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் சாதியப் பெருமிதம் பேசுவதானால், சாதியப் படிநிலையில் இதற்குக் கீழும் சாதி(கள்) இருக்க வேண்டியது முக்கியமான ஒன்று).

இந்த தலித்தியக் குறிப்புக்கு உள்ள எதிர்ப்புகளில் பெரும்பாலானவை கூட "எங்களை எவனோ காட்டிக்கொடுக்கிறான்" எனும் தொனியில் தான் கூடுதலாக காணமுடிகிறது. அதிலிருந்து எந்தளவு தூரம் "தலித்தியம்" பற்றி பேசப்படுவதைக் கூட "அடையாளங்களை" காட்டிக்கொடுப்பதாக உணர்கிறார்கள் என்பதை உணரலாம்.

நகர்ப்புறங்களில் செறிந்து வாழ்ந்து வந்த, ஓரளவு வசதியுள்ள அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த சிலர், அந்த இடங்களை விட்டு இடம் பெயர்வதைக் காண முடியும். இவ்வாறு இடம் பெயர்தலுக் கூடாக தொடர்ச்சியாக தாங்கள் வாழ்ந்து வந்த இடத்தில் "சக்கிலியர்" இன்ன இடத்தில், இன்ன ஒழுங்கையில், இன்ன இன்ன வீடுகளில் வசிக்கிறார்கள் என்ற அடையாளத்திலிருந்து தப்ப முயல்கி ன்றனர். புதிய இடத்தை தெரிவு செய்யும் போது அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லாத இடமாக தெரிவு செய்கின்றனர். "சக்கிலியர்" என அசிங்கத்தை குறிப்பது போல தூற்றி அழைக்கப் படுவதிலிருந்து தப்பி வாழ முயல்கின்றனர்.

வசதியில்லாதவர்கள் இந்த இடப்பெயர்வு சாத்தியமில்லாத நிலையில் மனோ ரீதியான சித்திர வதையை சுமந்து கொண்டு இடப்பெயர்வுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அடையாளத்தை மூடிமறைக்கும் முயற்சிகளில் ஒன்றாக அவர்கள் காலாகாலமாக பேசிவந்த தெலுங்கு மொழியை அடுத்தடுத்த பரம்பரையினர் அப்படியே வலுக்கட்டாயமாக அகற்றி னர். கடந்த 20 வருடங்களுக்கு முன் கொழும்பில் ராஜகிரிய எனும் நகரசுத்தித் தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதியில் இயங்கி வந்த "தெலுங்கு ஜன சங்கம்" எனும் அமைப்பினர் இதற்கு மாறாக தொழிற்பட்டிருந்தனர். அவர்கள் "தெலுங்கு, எமது தாய் மொழி தமிழ் எங்கள் மொழியல்ல, தமிழர்கள் எங்களை தமிழர்களாக ஏற்றுக்கொள்ளாத நிலையில் நாங்கள் எங்களை தெலுங்கர்களாகத்தான் அடையாளப்படுத்த வேண்டும். எனவே தெலுங்கு படிப்போம்" என அந்த குடியிருப்பில் தெலுங்கு மொழி வகுப்பு எடுத்தனர். தெலுங்கு மொழியில் நாடகங்கள் போட்டனர். பிறப்பு அத்தாட்சியில் தெலுங்கர் என பதிய வலியுறுத்துமாறு தூண்டினர். இந்த வகுப்பை நடாத்தியதில் முன்னின்றவர் மறைந்த சங்கர் என்பவர்.

இலங்கையில் இந்த "சக்கிலியர்" என்ற தூற்று தல் வெறுமனே தமிழ் சமூகத்திலிருந்து மாத்திர மல்ல ஏனைய சமூகங்களும் பின்பற்றுகின்றன. அந்த சமூகங்களில் இதே சாதியப் பண்புகளை (தமிழ் சமூகத்தில் நிலவும் சாதிய பண்புகள்) அதே வடிவத்தில் உள்வாங்காத அல்லது கொண்டிராத போதும், "சக்கிலியர்" என்ற தூற்றுதலைப் பொதுவாக அவர்கள், எவர் ஒருவருக்கும் பாவித்து வருவதைக் காணமுடியும். எவர் என்ன கழிசடைத் தவறுகளை செய்யட்டும் அப்படியொருவரை ஏச "சக்கிலியன்" என்ற பதம் நிறையவே கை கொடுக்கும். ஏசலுக்கு உள்ளாகும் எந்த ஒருவருக்கும் அச்சொல் அதிக மாக உறைக்கும்.

எனவே சமூகத்தில் "சக்கிலியர்" என்ற சொல் அசிங்கத்தை குறிக்கக் கூடிய ஒன்றாக, கருத்திய லாக ஆழப்பதிந்துள்ள ஒன்றென்றால் அது மிகையில்லை.

இந்தக் கருத்தியலின் தொடர்ச்சியாக சக்கிலியருக்கு எதிரான நிறைய பழமொழிகளும் கூட வழக்கில் உள்ளதைக் காணமுடியும். உதாரணத்துக்கு சத்தம் நிறையஉள்ள இடத்தில் "சக்கிலியோ படி கத்தா வகே" என சிங்களத்தில் சொல்வது வழக்கம். அதன் அர்த்தம் "சக்கிலியர் சம்பளம் எடுத்ததைப்போல" என்பதே.

எனவே ஏனைய விளிம்பு நிலைச் சாதிகளுக்கு இல்லாத சில பண்புகள் அருந்ததியர் சமூகத்துக்கு உண்டு. சமூகத்தில் இவர்களுக்கு எதிரான கருத்துக்களே கருத்தியலாக ஆழப்பதிந்துள்ளன. இலகுவாக அடையாளம் காணக்கூடியவகையில் இன்னமும் - பெரும்பாலும்- செறிவாக வாழ்ந்து வருகிறார்கள். கடைநிலைச் சாதியாதலால் "அகமண"த்துக்குரிய சாத்தியமே அதிகம். மாறாக கலப்பு மணத்துக்குரிய வாய்ப்புகள் அரிது. தொழில் ரீதியில் காலாமாக பெரும்பாலும் நகரசுத்தித் தொழிலிலேயே தங்கி வாழ்கிறார்கள். விளிம்பு மக்களுக்குரிய அதே குறைவிருத்தி பண்புகள் ஏராளமாக உள்ளது.

எனவே தான் முடியுமானோர் அடையாளங்களை தற்கொலை செய்வதில் அதிக பிரயத்தனம் புரிகின்றனர்.

-அருந்ததியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அங்கங்களாக உள்ளன. எனவே யதார்த்த உலகிலும் (Domiain of

சிறப்பாக கையாளப்பட்டது. இப் போக்கினை சி.வி. ஆதரித்து

# வீடற்றவன்: மலையக மண்வாசனையுடன் முகிழ்ந்த ஒரு நாவல்!

மலையக இலக்கிய வரலாற்றில் சுவடு பதித்த இலக்கிய கர்த்தாக் களில் சி.வி. வேலுப்பிள்ளை குறிப் பிடத்தக்கவர். அவரால் எழுதப் பட்ட குறுநாவலே **வீடற்றவன்** ஆகும். இந்நாவல் எழுதப்பட்டு (1962இல் வீரகேசரியில் தொடர் கதையாக வெளிவந்தது.) மூன்று தசாப்தங்களுக்கு மேலாகின்றது. இந்நாவலின் முதற்பதிப்பு ''1981இல்'' வைகறையின் வெளி யீடாகவும், இரண்டாம் பதிப்பு 1984இல் ''நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிமிடட்டின்'' வெளியீடாகவும் வந்தது. இன்று இந்நாவல் சிறிபாத கல்வியியற் கல்லூரியின் பயிலுனர் ஆசிரி யர்களுக்கான பாட நூலாக ஆக் கப்பட்டுள்ளது.

இந்நாவல் தொடர்பான சில கருத் துக்களை விமர்சன அடிப்படை யில் நோக்கி மலையக இலக்கிய வரலாற்றில் அதன் இடத்தினை தரநிர்ணயம் செய்வதே இக்கட்டு ரையின் நோக்கமாகும். நாவலின் முதற்பதிப்பு **'வீடற்றவன் - சில முன்னணிக் குறிப்புகள்'** என்ற மு. நித்தியானந்தனின் குறிப்பையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது இது பதின்மூன்று அத்தியாயங் களையும் நூற்றிப்பதின்மூன்று பக்கங்களையும் கொண்ட குறுநாவலாக திகழ்கின்றது.

இந்நாவல் 1960களில் மலைய கத்தில் இடம்பெற்ற தொழிற்சங்க போராட்டங்கள் எவ்வாறு இருந் தன என்பது பற்றி விளக்குவதாக உள்ளது.

நாவல் பற்றி நோக்குவதற்கு முன்னர் நாவல் தோற்றம் பெற்ற காலகட்டத்தில் (1960களில்) மலையகத்தின் அரசியல் தொழிற் சங்க நிலைமைகள் பற்றிய தெளிவு அவசியமாகின்றது.

இக்காலகட்டத்தில் மலையகத்தில் இடதுசாரி இயக்கம் ஒரு புதிய பரிணாமத்தை எட்டியது. மலையக தோட்டத் தொழிலாளர்களிடையே வேர் கொண்டு கிளைபரப்பியது. இவ்வியக்கமானது மக்களுக்கான தலைமையை தொழிற்சங்கத்தின் மூலமாக முன்னெடுத்த போதும் அரசியல் ஸ்தாபன வேலைத்திட் டமும் உரிய கவனத்துடன் முன் னெடுக்கப்பட்டது. இதன் விளை வாக மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் தங்களது உரிமைக்காக போராடும் கம்பீரத்தையும், திரா ணியையும் பெற்றனர். தவிரவும் இம்மக்களின் நலனுக்கு எதிராக இயங்கி வந்த மிதவாத தொழிற் சங்கத்திற்கும், இடதுசாரி தொழிற் சங்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகளும் தோன்றி வளர்ச் சியடைந்து காணப்பட்டது.

வீடற்றவன் நாவலை அது தோற்றம் பெற்ற கால பின்புலத்தில் வைத்து நோக்குகின்றபோது அன்று மலையகத்தில் இடம்பெற்று வந்த காலமாற்றத்தையும், அரசி யல் கொந்தளிப்புகளையும் இந் நாவல் உள்வாங்கவில்லை என லாம். நாவலில் காணப்படுகின்ற தொழிற்சங்க குறியீடுகளான சங் கக் காரியாலய சுவரில் தொங்கு கின்ற நேருவின் படம் சங்கப் பிரதிநிதி, சங்கத் தலைவர் இராஜன் ஆகியோரது நடவடிக் கைகள் அக்கால கட்டத்தில் இயங்கி வந்த மக்கள் இயக்கத்தை குறிப்பதாக அமையவில்லை. யாவற்றுக்கும் மேலாக ஒரு சந்தர்ப்பத்தில் துரைப்பிரட்டில் இருந்து கங்காணி பிரட்டிற்கு ஆட்களை மாற்ற வேண்டும் என்றவுடன் இதனால் பாதிப் படைந்த பெரியாங்கங்காணியான பெரியசாமி இந்நிலை ஏற்படாது தடுக்க, தொழிற்சங்க உதவியை நாடுகின்றார். இச்சந்தர்ப்பத்தில் கங்காணித்துவ நலனையும் கருத் திற் கொண்டே சங்கம் செயற் படுகின்றது. தவிரவும் மக்களின் எழுச்சி, போராட்டம் என்பன வற்றின் மூலம் பிரச்சினைக்கான தீர்வு காண்பதை விடுத்து கோர்ட்டு, வழக்கு என்பனவற்றின் மூலம் விடுதலை அடைய முனை வதை காணலாம். இதன் காரண மாகத்தான் சட்டத்தரணி அந் தோனி சில்வா இம்மக்களுக்கு விடுதலை வாங்கி தரும் வீர புருஷனாக சித்திரிக்கப்படுகின் றார். இவ்வம்சங்கள் அக்கால கட்டத்தில் இயங்கி வந்த மிதவாத தொழிற்சங்கங்களின் போக்கை எடுத் துக்காட்டுவதாக அமைகின்றது.

இந்நிலையில் நாவல் பற்றிய கருத்தை நோக்குவதற்கு மார்க் கெரட் ஹார்க்னெஸ் என்ற பெண் மணி எழுதிய **'நகரத்துப்பெண்'** (City Girl) என்ற நாவலை வாசித்து விட்டு ஏங்கல்ஸ் எழுதிய கருத் தினை தேவை நோக்கி எடுத்தாள் கின்றேன்.

''விமர்சனம் என்று நான் கூற வேண்டியது எதுவென்றால் கதை போதிய அளவிற்கு யதார்த்த பூர்வமானதாக இல்லையென்பது தான். என்னைப் பொறுத்தவரை யில் யதார்த்தவாதம் (Realism) என்பது உண்மையான விபரங் களை தருவது மட்டுமல்லாது வகைமாதிரியான (Typical) சூழ நிலைகளுக்கு மத்தியில் வகைமாதி ரியான கதாபாத்திரங்களை மறு சிருஷ்டி செய்வதாகும். நீங்கள் படைத்துள்ள பாத்திரங்கள் போதிய அளவிற்கு வகைமாதிரி யானவையாக உள்ளன. ஆனால் அவர்களை சூழ்ந்துள்ள, அவர் களை இயக்குகின்ற சூழல்கள் அந் தளவிற்கு வகைமாதிரியானவை யாக இல்லை. **'நகரத்துப் பெண்'** **ணில்** தொழிலாளி வர்க்கமானது தனக்குத்தானே உதவி செய்ய இயலாத கையறு நிலையில் உள்ள ஒரு கூட்டமாக சித்திரிக்கப்பட் டுள்ளது. தாங்கவொண்ணா அத் துன்பத்திலிருந்து அவர்களை கைதூக்கிவிடும் முயற்சிகள் எல்லாம் அந்த மக்களுக்கு மேலிருந்து வருகின்றனவே யொழிய அவர்களுக்கு மத்தி யிலிருந்து வரவில்லை. செயின்ட் சைமனும் ராபர்ட் ஓவனும் வாழ்ந்த அந்த 1800 அல்லது 1810ல் கதை நடப்பதாக இருந்தால் அது சரி தான். ஆனால் 1887ல் தீவிரமான பாட்டாளி வர்க்கப்போராட்டங் கள் பலவற்றிலும் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக பங்கு கொண்ட ஒருவருக்கு இது யதார்த்த பூர்வ மானதாக இருக்க முடியாது. தங்களைச் சூழ்ந்துள்ள ஒடுக்கு முறை யந்திரத்திற்கு எதிராக தொழிலாளி வர்க்கம் கண்டனம் முழங்குவதும், தாங்களும் மனி தப்பிறவிகள்தாம் எனும் நிலை யினை மீட்டுக்கொள்ளக் கொந்த ளித்துக் கிளம்பி அரைகுறை உணர்வுபூர்வமாகவோ அல்லது முழு உணர்வுபூர்வமாகவோ அவர்கள் முயல்வதும் வரலாற்றின் Realism) நாங்கள் இடம்பெற எனக்கேட்க அவற்றிற்கு உரிமை உண்டு.''

***(மார்க்ஸிய அழகியல் - அருணன் பக் -16)***

மேற்குறிப்பிட்ட ஏங்கல்சின் இரத்தின சுருக்கமான கருத்தினை ஆதாரமாகக்கொண்டு வீடற்றவன் நாவலை நோக்குகின்ற போது அன்றைய காலப்பின்புலத்தில் ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலா ளர்களின் பல்வேறு எழுச்சிகளை யும், இயக்கங்களையும் பின்னணி யாகவும், பொருளாகவும் கொள்ள வில்லை. எனவே எடுத்துக் கொண்ட காலகட்டத்தினை யதார் த்தமாக சித்திரிக்கவும், அந்த சூழலில் இயங்கக்கூடிய உண்மை யான மாந்தர்களை சித்திரித்துக் காட்டவும் தவறி விடுகின்றது. அதனால்தான் சிறந்த சமூக சரித்திர நாவலாக தோன்றியிருக்கவேண் டிய வீடற்றவன் நாவல் சோர் வுவாத நாவலாக அமைந்து விட்டது. நாவலின் இறுதியில் கதாநாயகன் இராமலிங்கம் பலாங் கொடை காட்டில் ''கடவுளே எனக்கு போகும் வழி தெரியவில் லையே'' என தலையில் கையை வைத்து புலம்புவது நாவலின் சோர்வு வாதத்திற்கு தக்க எடுத்துக் காட்டாகும்.

இவ்விடத்தில் நாவல் தொடர்பாக பின்குறிப்பு வழங்கிய மு. நித்தி யானந்தனின் கருத்து நோக் கத்தக்கது.

''கடவுளே எனக்குப் போக வழி தெரியவில்லையே ஒரு எட்டு மில்லையே'' என்று வாய்விட்டு புலம்புகின்றான். மார்க்சிய இயக்க வியலை அதன் பூரண அர்த்தத் தோடு விளங்கிக்கொள்ளும் ஒரு மார்க்சியவாதிக்கு இது சிக்கலை ஏற்படுத்தாது, ஒரு வரட்டு மார்க்சியவாதிக்கு ராமலிங்கம் ஒடுக்கப்பட்ட மக்களை விடுத லைக்கு அழைத்துச் செல்லும் ஒரு தலைமை கதாநாயகனாக தெரிய மாட்டான்.''

மு. நித்தியானந்தனின் இக்கறா ரான கணிப்பு எந்தளவு சரியானது என்பதே இப்பொழுது நம் முன் நிற்கின்ற வினாவாகின்றது.

இனியாவது எங்களுக்கு தெரிய வேண்டும். போர் சுவாலை மிக்க யதார்த்த தளத்தை நாங்கள் தூர விலக்கிவிட வேண்டும். உண்மை யான யதார்த்தத்தை வரலாறு ரீதி யில் உணர்ந்து ஸ்தூலமான முறை யில் அதன் புரட்சிகர வளர்ச்சியை சித்திரித்து காட்டாமல், துன்ப துயரங்களை மட்டும் கண்டு புலம் புவதே மார்க்சிய இயக்கவியல் என்று புரிந்துகொண்ட சுட்டுரையா ளரின் கூற்று இந்நாவல் தொடர் பாக தோன்றக்கூடிய சமூகவியல் விமர்சனத்தை நிராகரிப்பதாக அமைகின்றது.

சி.வி.யின் இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் சிலாகித்து பேசப்ப டுகின்ற ஒரு விடயம் மலையக மண்ணின் மணங்கமழும் பேச்சு மொழியை தனது படைப்புகளில் கையாண்டமையாகும். சி.வி. எழுதத் தொடங்கிய காலகட் டத்தில் தேசிய இலக்கிய கோட் பாடு, தேசிய இயக்கம் என்பன தத்துவார்த்த போராட்டங்களை முன்னெடுத்தன. இச்சந்தர்ப்பத்தில் மொழி தூய்மைவாதத்திற்கு எதி ராக பேச்சு மொழி இலக்கியத்தில் நின்றமையை அவரது நாவல் களில் சிறப்பாக காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையில் இந் நாவல் இவ்வம்சத்தினை முழுமை யாக உள்வாங்கியுள்ளமை இந் நாவலின் தனிச்சிறப்பு எனலாம். உதாரணமாக தோட்ட முகாமையா ளருக்கும் இராமலிங்கத்திற்கு மிடையில் நடைபெறுகின்ற உரை யாடலை சற்று நோக்குவோம்.

''சலாம் தொரைகளே'' என்றான்.

''சலாம் நீ ராமலிங்கம்''?

''ஆமாங்க தொரைகளே''

''நீ தோட்டம் வந்து எவ்வளவு நாள்?''

''நீ மிச்சம் கரச்சல் காரனாம் பெரி யாங்கங்காணி சொல்லியாச்சு''

''நான் அப்படி கரச்சல் குடுக்க லீங்க''

''நான் கரச்சல் குடுக்கிறதா''

இந்த உரையாடலில் மலையக பேச்சு வழக்கு சிறப்பாக கையா ளப்பட்டுள்ளதை காணலாம். உதாரணமாக தோட்ட மக்கள் பெரிய துரையை (Superintendent) ''தொரைகளே'' என்றே குறிப்பி டுவர். சின்னத்துரையை (Asst. Superintendent) தான் ''தொரை'' எனக் குறிப்பிடுவர். இந்தவகை யில் மிக நுணுக்கத்துடன் பேச்சு வழக்குமுறை சிறப்பாக கையாண் டுள்ளதை காணலாம்.

இவ்வாறாக ஆசிரியர் பேச்சு மொழியை சிறப்பாக கையாண்டு நாவலைக் காலம், இடம், சமூகம், தனிமனிதன், சமூகவரைவுகள் என்பனவற்றுக்கு அமைய வெளிப் படுத்தியுள்ளமை அதன் சிறப்புக்கு தக்க எடுத்துக்காட்டாகும். இருப் பினும் இந்நாவலில் பேச்சு மொழியை கையாண்டதில் இடை யிடையே சில பிழைகளும் உள் ளன. அவற்றினை சுட்டிக்காட்டு வதும் அவசியமான ஒன்றாகும்.

''உக்காரு தம்பி சாப்பாட்டுக்கு பொறகு பேசலாம்'' (பக் - 07) பெரகு என வரும்)

''இருந்திருந்தும் நீலக்கிரிக்கா போனீர்கள்'' (பக் -18 போனீங்க என வரும்)

''மிச்சம் பேச வேண்டா ராம லிங்கம்'' (பக் - 30 மிச்சம் பேச வாண்டா என வரும்)

''போடி என் கூத்தியாரே'' (பக் 41 எங் கூத்தியாரே எனவரும்)

மேற்குறிப்பிட்ட பேச்சு மொழியில் சிற்சில தவறுகளும் இடம்பெற் றுள்ளன.

தவிரவும் இந்நாவல் தொடர் கதையாக வெளிவந்தமையினால் தொடர்கதைக்குரிய சில பண்புகள் மேலோங்கி காணப்படுகின்றது. தொடர்கதைக்குரிய சில பண்புகள் நாவலின் பண்பில் சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ப தும் கருத்திற் கொள்ளத்தக்கது.

முடிவாக நோக்குகின்ற போது இந்நாவல் அது தோற்றம் பெற்ற காலகட்டத்தில் ஏற்பட்டுவந்த போராட்ட உணர்வுகளை உள் வாங்கவில்லை என்றபோதும் மலையக மண்வாசனையுடன் முகிழ்ந்த ஒரு நாவலாக உள்ளது என திருப்திகொள்ளலாம்.

**லெனின் மதிவானம்**

13→

## ஜே.வி.பி.யும்..

பெண்களுக்கு அவர்கள் பெண் களாக இருப்பதால் சொந்தமாகப் பிரச்சினைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்ளும் மன உந்துதல் இவ்வமைப்பிடம் இருக்கவில்லை யென்பதை இதன் உண்மையாகும்.

பெண்ணிலைவாதம் தொடர்பான எந்தவிதமான விமர்சனபூர்வமான ஆராய்வுகள் எதுவும் இன்றியே அமைப்பு பெண்ணிலைவாத இயக் கங்களை எதிர்த்தது.

புரட்சிகர இயக்கச் செயற்பாடு களில் இருந்து பெண்களைத் தடுப்பதற்கே பெண்ணிலைவாத இயக்கங்கள் உருவாக்கப்படுகின் றன என அவர்கள் கருதினார்கள்.

உண்மையைச் சொல்வதெனின் இயக்கத்தின் பெண்கள் அமைப் பினுள்ளும் கூட பெண்கள் தாங் கள் சுதந்திரமாக செயற்படுவ தற்கோ முடிவுகள் எடுப்பதற்கோ சூழ்நிலைகள் எதுவும் உருவாக்கப் படவில்லை.

சோசலிசப் பெண்கள் அமைப்பை போலவே ஜே.வி.பியின் தலைவர் களும் அபிப்பிராயங்களையும் கொண்டிருந்தனர். பெண்கள் பிரச் சினையில் இவ்வபிப்பிராயங்களே கட்சியின் கூட்டு மனோபாவமாக வெளிப்பட்டது.

மிகச் சிறந்த உதாரணம் ஜே.வி. பியின் தலைவரின் திருமணம். அவர் தான் ஒரு பொழுதும் கட்சி யில் உள்ள பெண் உறுப்பினரை திருமணம் செய்யப்போவதில்லை எனக்கூறுவார். அவ்வாறு திரு மணம் செய்யின் கட்சி ஒரு பெண் செயலாளியை இழந்து விடும் என்பது அவர் கருத்தாகும்.

இதன்படி அவர் திருமணம் செய்து கொள்கிற பெண் அரசியல் அல்லது சமூகச் செயற்பாடுகளில் பங்கு கொள்ள முடியாது. அவள் வீட்டுப் பெண்ணாகவே இருக்க வேண்டும் என்று ஆகிறது.

மனைவி எனப்படுவர் கணவனது அரசியல் சமூக செயற்பாடுகளில் உதவுகிறவளாக குறைந்த பட்சம் இருப்பதைத்தானும் அவர் நிராக ரித்திருந்தார். மனைவியினுடைய உறவை முற்றிலும் தனிப்பட்ட சொந்த நலனாக அவர் குறுக்கி யிருந்தார்.

அவர் விரும்பியபடிதான் அவரது திருமணம் நடந்தது. அவரது மனைவி அவரது அரசியல் நடவ டிக்கையில் ஒரு பொழுதும் பங்கு கொள்ளவே இல்லை.

எவ்வாறு எனினும் நான் பார்த்த அளவில், 71 கிளர்ச்சியின் பொழு தும் அதன் பின்னரும் பெண் களுக்கென சமூகப்பிரச்சினைகள் உள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. ஆனால் பெண்கள் தொடர்பாக மரபுவழி வந்த பார்வைமுறையே இங்கும் ஆட்சி செய்தது.

பெண்களை சக்திமிக்கவர்களா கவோ, சுதந்திரமாக முடிவுகளை எடுத்து சுதந்திரமாக இயங்க வல்லவர்களாகவோ அமைப்பு கருதவில்லை. இந்த வகையில் தொடக்கத்தில் இருந்தே பெண் களின் முக்கியத்துவமும் அவர்கள் சமூகத்திற்கு செய்யக்கூடிய பங்க ளிப்பும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. பின்னரும் இந்தப் போக்கு முறியடிக்கப்படவில்லை.

o

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோணேஸ்வரிகள்

## விமர்சனம் என்பது குற்றம் காண்பதுதானா?

சரிநிகர் இதழ் 123இல் வெளியான ''கோணேஸ்வரிகள்'' என்ற கவிதையைபடிக்க முடிந்தது. விமர்சனம் எழுத வேண்டும் என்று நினைக்கவில்லை. எனினும், அக்கவிதைபற்றி பின்னர் சில வாசகர்கள் முன்வைத்த கருத்துக்கள் என்னை எனது கருத்தையும் எழுதத்தூண்டியது.

கோணேஸ்வரிக்கு நிகழ்ந்த கொடுமையை அறிந்த் போது மிகவும் ஆத்திரமும் ஆவேசமும் தான் மேலோங்கி நின்றது. எனினும் எம்மால் என்ன செய்ய முடியும் (எதுவும் செய்ய முடியாது) என்கிற இயலாமை, ஒரு வித விரக்தி நிலையின் இறுதியில் கொண்டு போய் விட்டிருந்தது. இங்கு இதற்கு நியாயம் கிடைக்கும் என எதிர்பார்ப்பது சூரியோதயத்தை மேற்கு வானில் தேடுவது போன்றது. எனினும் நடந்த நிகழ்விற்கு நியாயம் கோர வேண்டும். அந்தக் கொடுமையை எல்லோருக்கும் சொல்ல வேண்டும். உரத்தக்குரலில் நடந்தவற்றை நடந்தபடியே கத்திச் சொல்லவேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்து கொண்டுதான் இருந்தது. கலா அவர்களின் கவிதை எனது உணர்வினதும், உந்துதலினதும் பிரதிபலிப்பாகவே அமைந்திருந்தது. சொல்லுக்குள் அடங்காத சொல்ல முடியாத அந்த நிகழ்வின் கொடுமையை அவர் தன்னால் முடிந்தளவிற்கு வெளிப்படுத்த முனைந்திருக்கிறார். அந்தக் காட்டு மிராண்டிகளின் செயலை விபரிக்கக் கொடூரம் கொடுமை, என்கிற வார்த்தைகளே போதா. அவை வலுவிழந்து மென்மையாகத் தோன்றும்.

நினைக்கவே முடியாத கொடுமை அப்பெண்ணிற்கு நடந்து முடிந்திருக்கிறது. அதற்காக நாம் என்ன செய்தோம்? மௌனமாக இருக்கிறோம். இன்னமும் தவறைப் புரிந்தவர்களை தாங்கிக்கொண்டிருக்கிற இந்தச் சமூகத்தில் நாமும் சத்தம் இல்லாமல் எம் இயலாமைகளுடன் அடங்கிப்போய் இருக்கிறோம். இதற்கெல்லாம் வெட்கப்பட்டுக் கொள்ளவும், தலைகுனிந்து கொள்ளவும் தெரியாதவர்கள் நடந்தவற்றை முடிந்தளவிற்கு உலகிற்கு சொல்ல முயன்ற அந்த கவிதைக்குள் சொற்களைத்தேடி வெட்கப்பட்டுக் கொள்வதென்பது வேடிக்கையான விடயம். கவிதை ஒட்டு மொத்தமாக எதனைச் சொல்கிறது என்பதனையும், யோனி, நிர்வாணம் என்கிற சொற்கள் ஏன் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் ஆராய்ந்து பார்க்காது அதற்குள் வெட்கப்பட்டுக் கொள்வது மிகவும் செயற்கைத்தனமானது. வீம்பு நிறைந்தது.

நிர்வாணம் என்ற சொல் கவிதையில் இடம்பெற்ற உடனேயே பெண்களெல்லாம் நிர்வாணப் பட்டுப் போய்விட்டதாகக் கூறுகிறீர்களே, இன்று வரை எத்தனை கிருஷாந்திகள் மீதும், கோணேஸ்வரிகள் மீதும் அந்த சொல்லிற்கு முழு வடிவம் கொடுத்தார்களே. அப்போதெல்லாம் நீங்கள் நிர்வாணமாகி விடவில்லையோ.

தவறை செய்தவர்களை விட்டு விட்டு அதனால் பாதிக்கப்பட்டவர்களிலும், அதற்காக நியாயம் கோர முன்வருபவர்களிலும் குறை கண்டு கொண்டு இருந்தால், இவ்வாறு ஆயிரம் தவறுகள் மீண்டும் மீண்டும் நடப்பதை யாராலும் தடுக்கவே முடியாது. உண்மையில் நீங்கள் அதைத்தான் விரும்புகிறீர்களா? அப்படியாகத்தான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையைப்பார்த்து வெட்கப்பட்டு போய் விட்டதாக கூறுகிறீர்கள். இந்த 'வெட்கம்' என்ற வார்த்தை நடந்த தவறை மறைப்பதற்கான ஓர் இரும்புத் திரை என்றே நான் கருதுகிறேன். நீங்கள் முழுமையாக மூடியிருப்பதாக உலகத்திற்குச் சொல்ல, இக்கவிதைக்குள் சொற்களைத்தேடிக்கொண்டது மிகவும் வேதனைக்குரியது. அதற்குத்தானே எல்லைகடந்த கற்பனைவளம் கொப்பளிக்க நிறைய கவிதைகள் கொட்டிக் கிடக்கின்றனவே!

ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் போது அதைச் செய்தவனை விட்டுவிட்டு தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகிற்குச் சொல்லி நியாயம் கோர முற்படும் பாதிக்கப்பட்ட அப்பெண்ணை குற்றவாளியாகவும், இழிநிலையில் வைத்தும் நோக்கும் இந்த சமூக நடைமுறையின் பிரதிபலிப்பைத் தான் உங்கள் விமர்சனங்களில் காண முடிகிறது. 'வெட்கம்' என்ற ஒன்றைக் காட்டி நடந்தவற்றை மறைக்கச் சொல்கிறீர்களே, ஏன்? இது நடந்து விட்ட நிகழ்வைவிட கோடிமுறை கொடுமையானது இல்லையா?

மேலும் ''புத்தர் வழிவந்தவர்களே'' என்று விளித்தது இனத்துவேஷம் நிறைந்தது என ஒரு வாசகர் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் அது புத்தரைக் கேவலப்படுத்த எழுதப் பட்டிருக்கவில்லை. அந்தப் புனிதனின் போதனைகளை ஏற்றுக் கொண்டதாகக் கூறிக்கொள்பவர்கள் இத்தனைகேவலமாக நடந்து கொள்கிறார்களோ என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடு தான் அது. வாசகர் கவிதையை ஆழமாகப் படிக்கவில்லையென நினைக்கிறேன். இல்லையானால், விமர்சனம் என்றால் ஏதாவது குற்றம் காண வேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ?

இறுதியாக கோணேஸ்வரிக்கும் அவர் போல் பல பெண்களுக்கும் நிகழ்ந்த, நிகழ்ந்துகொண்டிக்கிற கொடுமைகளைக்கண்டு எல்லோரும் மௌனமாக இருக்கிறார்கள். இதில் உண்மையான அக்கறை உள்ளவர்கள்(?) கூட ஊடகமில்லாத இடத்திலிருந்து உரக்கக்கத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் அந்நிகழ்வை எல்லோருக்கும் உரத்துச் சொல்ல முற்பட்ட கலா அவர்கள் பாராட்டுக்குரியவர். புதியவர் என்றால் என்ன (கவிதைக்கு) மிகுந்த புத்துணர்வுடன் தொடர்ந்து எழுதட்டுமே. என்னைப் பொருத்த வரைக்கும் நிகழ்ந்த கொடூரத்தை தன்னால் முடிந்தவரை அக்கவிதை உணர்த்த முற்பட்டிருக்கிறது. எனினும் அந்நிகழ்வுடன் ஒப்பிடும் பொழுது இன்னமும் மெல்லியதாக, மென்மையானதாகவேதான் இருக்கிறது.

**வனஜா**
**கொழும்பு**

## எய்தவன் இருக்க அம்பை நோவதா?

சரிநிகர் 123 இதழில் வெளியான கோணேஸ்வரிகள் என்ற கவிதையைப் பார்த்த போது என்னுள் பல கேள்விகள்! கலா எனும் கவிஞர் பெண்ணா? அல்லது ஆணா? (புனைபெயரில் எழுதியிருக்கலாம் என்று ஒரு சந்தேகம்) பெண்களை மட்டும் இழிவுபடுத்தும் படியாக ஏன் இப்படியொரு கவிதையை எழுதினார் என்ற கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை.

யுத்தப் பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் (குறிப்பாக தமிழ் பேசும்) ஆபத்துக்களும், அச்சுறுத்தல்களும் நாளுக்கு நாள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால் கோணேஸ்வரிகள்... போன்ற பெண்கள் அவர்கள் பெண் என்ற ரீதியில் காம வெறியர்களின் வெறியாட்டத்திற்கும், கீழத்தரமான செயல்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். இது பொலிசாரின் அல்லது இராணுவத்தின் உச்சக்கட்ட அல்லது கீழ்த்தரமான செயல்களைக் காட்டுகிறது. இதற்கான தண்டனையைப் பெற்று தலைகுனிய வேண்டியவர்கள் இவர்கள் (குற்றம் செய்தவர்கள்) அதற்காக தமிழர்களாகப் பிறந்த பெண்கள் மட்டும் ஏன் நிர்வாணப்படுத்தப்பட வேண்டும். ஏன்? எத்தனை சகோதரர்களின் உடன் பிறந்த தங்கைகளும், அக்காக்களும், மனைவிகளும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிமையில்லையா? (நல்ல வேளை இவர்களை கலா, ஆண் சகோதரர்களே..? நீங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள் என்று சொல்லாமல் விட்டார்.)

தங்கள் உரிமைகளைப் பெற போராடுபவர்கள். உரிமைகளை விட்டுக்கொடுத்திருந்தால் ''போராட்டம்'' என்ற சொல்லுக்கு அர்த்தமில்லாமல் போயிருக்கும். கலா சொல்லுவது போல் அடிமைகளாகவே இருந்திக்கலாம். பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே தெரிந்திருக்காது.

*உடைகளைக் கழற்றி...*
*நிர்வாணப்படுத்தி...*
*யோனிகளைத் திறந்து....*

தமிழ்ப் பெண்கள் என்ன? அவ்வளவு அடி முட்டாள்களா...? முற்போக்கான கவிதைகள் எழுத வேண்டும். அதையாரும் தடுக்கப் போவதில்லை. ஒரு கோணேஸ்வரி நிர்வாணப்படுத்தப்பட்டால், எல்லோரும் கோணேஸ்வரிகள் ஆகவேண்டும் என்று அல்ல. கோணேஸ்வரியை இந்நிலைக்கு ஆளாக்கியவர்கள் தலைகுனியும் படியாய்... அதற்கெதிராய் முழுச் சமூகத்திற்கும் இருக்கும் பொறுப்பை, கடமையை,... எடுத்துக் கூறுபவையாக இருக்க வேண்டும். அதைவிடுத்து ''எய்தவன் இருக்க அம்பை நோவது'' எந்த வகையில் நியாயமாகும்?

**வாணி சைமன்**
**அக்கறைப்பற்று**

## 'ஷர்மிலாவின் இதயராகமும்', சில குறிப்புகளும்

இலங்கையில் தயாரிக்கப்பட்டு இறுதியாகத் திரையிடப்பட்ட தமிழ்த்திரைப்படம் ''ஷர்மிலாவின் இதயராகம்'' கொழும்பில் பல நாட்களாக சிலவருடங்களுக்கு முன்னர் ஓடியது. அப்போது பார்க்கக் கிடைக்கவில்லை. அந்த முதலாவது திரையிடலுக்குப்பின்னர் மீண்டும் எங்காவது திரையிடப்பட்டதா என்பதும் ஞாபகமில்லை.

கடந்த இரண்டாம் திகதி கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட பலருக்காக அத்திரைப்படத்தை விஷேட ஒளி பரப்புச் செய்தார் இதன் தயாரிப்பாளர் பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த திருமறைக் கலாமன்ற கலைஞர்களை முக்கியப்படுத்தியே இவ்விஷேட ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'முதலாவது தமிழ்க் கலர்த் திரைப்படம்'' (யாழில் புலிகளால் தயாரிக்கப்பட்டவைகள் கருத்திற் கொள்ளப் படவில்லை.) என்ற வகையிலும், இன்றுவரை இறுதியாகத் தயாரிக்கப்பட்ட படம் என்ற வகையிலும் (மாநகரக் காதல் என்ற படம் விரைவில் வெளிவர இருப்பதாக இருந்தது. ஏனோ இன்று வரை இல்லை) பரவலாகத் திரையிடப்பட சந்தர்ப்பம் அமையாதது தயாரிப்பாளரிடம் ஓர் ஆதங்கமாக இருந்தது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட முடியவில்லையே என்ற ஆதங்கம். இதை ஓரளவாவது நிவர்த்திக்கும் பொருட்டே யாழ் 'கலா நண்பர்களை' அழைத்து திரையிட்டுக்காட்டியது.

ஷர்மிலாவின் இதயராகம்', 'ஷாமிலாவின் இதயராகம்' என்று முஸ்லிம் கதாபாத்திரங்களை பின்னணியாகக்கொண்டு 80களில் 'சிந்தாமணி'யில் தொடர் 'நாவலா'க வெளிவந்தது. பின்பு நூலாகவும் வந்தது. எழுதியவர் ஜெக்கியா ஜுனைதீன். தமிழ் நாட்டைப் பிரதி பண்ணி எழுதப்படுகிற ஒரு கதையாகவே இந்நாவலும் அமைந்திருந்தது. வித்தியாசமாய் இது, முஸ்லிம் கதாபாத்திரங்களைக் கொண்டிருந்தது. இந்நாவலை திரைப்படமாக்கும் ஒரு நீண்ட பிரயத்தனத்தில் ஜுனைதீன் ஈடுபட்டு ஒருவாறு திரையிட்டும் விட்டார். ஒரு படத்தயாரிப்பின் பின்னால் இருக்கிற உழைப்பு, இழப்பு, இன்னபிறவிடயங்கள் தாண்டி இது வெளிவந்தது. இதன் பின்னால் இருக்கிற அவலங்களை தயாரிப்பாளர்களே நன்கறிவர். (இதன் செலவுகளை ஈடுகட்ட தயாரிப்பாளர் தன் வீட்டையும் விற்க வேண்டி நேர்ந்ததையும் அறியமுடிந்தது)

ஆக, இவ்வாறான சில பின்புலங்களின் மத்தியில் வெளியிடப்பட்ட இத்திரைப்படம் சினிமா' என்ற ரீதியில் வெற்றிபெற்றதா? என்பது கேள்விக்குரிய விடயமே.

இலங்கையர்களை 'பயன்படுத்தியதைத் தவிர வேறொன்றையும் சிலாகிக்க முடியாதளவுக்கு தமிழகச் சினிமாக்களை எம்நாட்டு 'லெவலு'க்குப் பிரதிபண்ணியிருப்பதாகவே இப்படமும் அமைந்துள்ளது. நிறைய எதிர்பார்க்கின்ற எம்மைப்போன்றோருக்கு இது ஏமாற்றமே.

'தேசிய தமிழ்ச் சினிமா' என்ற ஒரு குறிப்பு ஆரம்ப எழுத்துக்களில் வருகிறது. அதற்கான குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கூறுகள் இல்லை. முற்றிலும் இலங்கையர்களானது என்பதைத்தவிர, சிலவேளை அதற்காகத்தான் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம்.
மாணவியின் காதலுடன் (மாணவி + கதாநாயகி - வீணா ஜயக்கொடி) படம்தொடங்குகிறது. காத்திருந்து காதலனுடன் கதைத்துவிட்டுச் செல்கையில் அனேக தமிழ்ப்படங்களில் கதாநாயகியை பலாக்காரப்படுத்த வருபவர்கள் போல் இருவர் வந்து முயற்சிக்க காதலன் காப்பாற்ற, கொலை நடக்க.. இவ்வாறு தொடங்கி பெற்றோரின் நிர்ப்பந்தத்தின் பேரில் மனைவியிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிற வேறொருவனுக்கு (கதாநாகயனுக்கு-ஷசி) வாழ்க்கைப்படுகிறாள். அதிகம் எதிர்பார்த்து ஏமாற்றமாகும் கணவன் - நண்பர்கள் சிலருடன் சேர்ந்து குடிகாரனாகி மாற்றானின் மனைவியுடன் வாழ்ந்து கொள்ளையடித்து அகப்பட்டு, இறுதியில் சுபம் வரும் வரை நகர்த்தப்பட்டிருக்கிறது கதை. மனைவி, துயரங்களின் மத்தியில் 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று விட்டுக்கொடுப்புக்கள், தியாகங்கள் என வழமைபோல் பார்க்கப்பட்டிருக்கிறாள்.

இப்படத்தில், எல்லோரும் குழம்பிப்போகிற ஒரு விடயம் இறுதியில் வருகிறது. முன்பு காதலனாகக் காட்டப்பட்ட நபரை இறுதியில் தன்னுடன் கூடப்பிறந்த சகோதரன் என அறிமுகப்படுத்துகிறார் கதாநாயகி. குறிப்பிட்ட நபரும் கதாநாயகியும் ஒரு பாடற்காட்சியிலும் தோன்றுகிறார்கள். இந்தக் (குழப்பமான) முடிவுபற்றி தயாரிப்பாளர் என்ன கருத்துக் கொண்டுள்ளாரோ தெரியாது.

நடிக, நடிகையர் தெரிவுகள் பொருத்தமானதாக இல்லை. 'இன்னும் நெஞ்சில் முடி கூட முளைக்காத கதாநாயகனுக்கு- முகத்தில் கைரேகைகள் போன்ற சுருக்கங்கள் 'விழுந்த கதாநாயகி!' என்று சோலைக்கிளி எங்கோ எழுதியிருந்தது ஞாபகம்.

நாவலின் முஸ்லிம்பாத்திரங்களை, திரையில் 'பொதுப்பாத்திரங்களாக அதாவது தமிழ்த் திரைப்படத்துக்குரிய பாத்திரங்களாக மாற்றுவதில் சிக்கல்பட்டிருப்பதாக உன்னிப்பாக அவதானிக்கையில் விளங்குகிறது. இதை சேலை உடுத்தும் முறை, தாவணி சில மொழிப் பிரயோகங்க்ள் என்பவற்றின் மூலம் அறியலாம்.

'டப்பிங்' திருப்தியில்லை. 'ஜங்கிள்புக் குரல்களை ஞாபகப்படுத்துகிற 'கணீ'ரென்ற குரல்கள். உ-ம் கே.எஸ் பாலச்சந்திரன்

ஓரளவு திருப்தி தருகிற 'சரத் தசநாயக்கவின் இசை; 'Close - up shot' களாய் அனேகம் வருகிறது யோகராஜாவின் கமெரா, (ஈழத்துப்)பாடல்களை பார்க்காமல் கேட்கலாம்.

நாம் சினிமாத்துறையில், தொழிநுட்பரீதியுட்பட சகலவற்றிலும் எங்கோ இருக்கிறோம் என்பதை கசப்புடனும், கவலையுடனும் ஏற்கத்தான் வேண்டும். சிங்கள மொழியில் வருகின்ற நல்ல படங்கள், நாடகங்களைப் பார்க்க ஏற்படுகிற ஆர்வம் எம் சொந்தப்படங்களில் ஏற்படாதது துரதிருஷ்டம் தான். இந்தநிலைக்குப் பின்னால் இருக்கின்றவைகள் களையப்படவேண்டும். குறைந்தது நல்ல படங்களைப் பார்க்கிற, அது பற்றிக் கதைக்கிற நிலையாவது ஏற்படவேண்டும். இது அண்மைக்காலமாக ஓரளவு நடைபெறுகிறது. 'விபவி' சினிமாபற்றி கருத்தரங்கு நடத்தியது. 'மாற்று' அமைப்பும் ஏற்பாடு செய்திருந்தது. நல்ல சினிமாக்கள் ஆங்காங்கு காண்பிக்கப்படுகின்றன.

இலங்கைத் தமிழ்ச் சினிமாத்துறையில் முக்கிய பங்கேற்பவர்கள் இவற்றிலெல்லாம் குறிப்பாய் கலந்து கருத்துக்களைப் பரிமாறி நிலைகளை உணரவேண்டும்.

பெரும்பாலும் இவற்றில் வாசகர்களும், ரசிகர்களுமான மூன்றாவது பங்கேற்பாளர்களே கலந்து கொள்கிறார்கள்.

இதுவும் மாறவேண்டும். எல்லாமும் மாற வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# "நான்தான் ராசீக் !"

## ராசீக் பதிலளிக்கிறார்

தங்களது 125வது சரிநிகர் இதழ் கண்டேன். ''யார் இந்த ராசீக்'' என முன்பக்கத்தில் தலைப்பிட்டு, எனக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து என்னை விளம்பரப்படுத்தியதற்கு முதலில் எனது நன்றிகள்.

பத்திரிகை எழுதுவதற்கு ஓர் மொழி இருக்கின்றது என நான் நம்புகின்றேன். அதிலிருந்து விலகிப்போவதென்பது ஆரோக்கிய எழுத்தாக இருக்கும் என நான் நம்பவில்லை. உங்களது மொழி நடையை கையாள்வதில் நான் தேர்ச்சி பெற்றவனல்ல. உங்களது சித்தாந்தப்படி கொலைகாரனுக்கு என்ன மரியாதைக் கொடுப்பது என நீங்கள் யோசிக்கலாம். ஆனால் நீங்கள் எழுதிவிட்டீர்கள் என்பதற்காக நான் கொலைகாரன் என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. உங்களிடம் வெளிநாட்டு உதவியில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகை உள்ளது. அதில் நீங்கள் விரும்பிய எந்தக் குப்பையையும் எழுதலாம். நான் நாளாந்தம் ஆயிரக்கணக்கில் அப்பாவிகளை கொலை செய்து குவிக்கின்றேன் என்ற பாணியில் உங்கள் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அப்படியாயின் நான் எத்தனை அப்பாவிகளைக் கொலை செய்தேன் என்ற பெயர் விபரங்கள் உங்கள் கையிலிருக்குமே, அதனை வெளியிடுவது தானே. அது மாத்திரமல்ல மனித உரிமை மீறல் சட்டத்தின் கீழ் எனக்கு எதிராக வழக்குத்தொடரலாமே. அதனை விடுத்து நான் கொலை செய்து குவிக்கின்றேன் என்று பொதுவாகச் சொல்வதில் என்ன அர்த்தமிருக்கிறது.

முதலில் நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள். நான் புலிகளுக்கு எதிரானவன். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஏன் நான் புலிகளுக்கு எதிரானவனாக மாறினேன் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். (உங்களுக்கு அது புரியாதென்பதல்ல ஆனால் அதனை நீங்கள் எழுத மாட்டீர்கள்)

நான் ஒன்றும் புலிகளுக்கு எதிராகச் செயற்பட வந்தவனல்ல. நானும் தனிநாடு காண்பதற்கே, எனக்கு பிடித்த ஓர் இயக்கத்தில் சேர்ந்தேன். ஆனால் எனது இயக்கத்தையும், என்னையும் அழிப்பதற்கு புலிகள் அன்றிலிருந்து இன்று வரை போராடிவருகிறார்கள். இதனை சரிநிகரோ அல்லது என்னைப்பற்றி எழுதிய ''கல்வி மானோ'' சரி என்கின்றார்களா? எனது மக்களுக்காகப் போராடும் எனது உரிமை புலிகள் என்று சொல்லப்படும் தமிழ் குழுவால் மறுக்கப்பட்டதே. அதனை சரி என்கிறீர்களா? புலிகள் ஒவ்வொரு இயக்கத்தையும் அழிப்பதற்கு ஒவ்வொரு காரணத்தைக் கூறி அவர்களை துரோகிகள் என கொன்று குவிப்பார்கள். அதனைச் சரி என்கிறீர்கள? இந்தப் பத்திரிகையை நடாத்தும் நீங்கள் யாழ்ப்பாணத்திலோ, திருகோணமலையிலோ இருந்து இப்பத்திரிகையை நடாத்தலாமே. ஏன் கொழும்பில் இருந்து நடாத்துகின்றீர்கள்? புலிகளுக்கு பயந்துதானே. இல்லையென்று கூறப் போகின்றீர்களா? இந்நிலையில் நான் புலிகளை எதிர்த்துப் போராடுவதைத் தவிர என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

வட-கிழக்கில் மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டுமெனில், அங்கு ஜனநாயக சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக புலிகள் இவ் ஜனநாயகச் சூழலை மறுத்து வருகிறார்கள். நீங்கள் குதர்க்கமான பல கேள்விகளைக் கேட்கலாம். இராணுவம் ஜனநாயகச் சூழலை அனுமதிக்குமா, ஏனைய இயக்கங்கள் ஜனநாயகச் சூழலை அனுமதிக்குமா என்றெல்லாம் நீங்கள் கேட்கலாம். முதலாவதாக எமது போராட்டமே சிறீலங்கா படைகளுக்கெதிராகத் தான் இருந்தது. எல்லா இயக்கங்களும் சிறீலங்காப் படைகளுக்கு எதிராகத்தான் போரிட்டன. ஆனால், என்று ஏனைய இயக்கப் போராளிகளை கொலை செய்து புலிகள் தாம் தான் ஏக பிரதிநிதிகள் என கொக்கரிக்கத் தொடங்கினார்களோ, அதன் பின்னர், புலிகளை அழிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? ஒரே நேரத்தில் புலிகளையும் அழித்து, இராணுவத்தையும் அழிக்கும் வலிமை எந்த தமிழ் இயக்கத்திற்கும் இல்லை. அதனால் தான் ஈ.பி.ஆர்.எல்.எப். தவிர்ந்த எல்லோருமே இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள். உங்களுக்குச் சில வேளை தெரியாமல் இருந்திருக்கலாம். எதிரியுடன் இணைந்து இன்னொரு சகோதரனை அழிக்கும் வித்தையை கற்றுத்தந்தவர்களே புலிகள்தான். இந்திய இராணுவ காலகட்டத்தில் இருந்து சிறீலங்கா அதிரடிப்படையுடனும், இராணுவத்துடனும் இணைந்து எமது எத்தனை தோழர்களும், குடும்பங்களும், ஆதரவாளர்களும் புலிகளால் கொல்லப்பட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியாமல் போயிருக்காது.

யாழ்ப்பாணம், வன்னி என எல்லாவற்றையும் இழந்து ஈழ விடுதலைப் போராட்டத்தையே நாசமாக்கிய பிரபாகரன், இன்று கூட வேறுயாரையும் போராட அனுமதிக்க மாட்டார். அவரது முதல் எதிரி தமிழ் இயக்கங்கள் தான். எத்தனை தலைவர்களை கொன்றொழித்துள்ளார்கள். இன்றும் எத்தனை பேரை கொன்று வருகின்றார்கள். இது சரியெனக்கூறப்போகின்றீர்களா? புலிகள் மாத்திரம் தான் தமிழ் மக்களின் விடுதலைக்கு போராட வேண்டும் என தமிழ் மக்கள் கூறினார்களா? இந்தப் பத்திரிகையை நடாத்தும் உங்களில் பலரும், முன்னர் ஏதோ ஓர் இயக்கத்தில் இருந்தவர்கள்தானே. உங்களால் ஏன் போராட முடியவில்லை. எனவே என்னைப் பொறுத்தவரை வட-கிழக்கில் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டுமெனில் அங்கு ஜனநாயகச் சூழ்நிலை வேண்டும். அதற்கெதிராக இருப்பது புலிகள் தான். அவர்கள் ஆயுதங்களுடன் இருந்து ஏனையோரை அழிக்கும் போது, அது சரியென ஏற்றுக் கொண்டு நானும் சாவதற்கு நான் ஒன்றும் இயேசுபிரானல்ல. எனவே தான் புலிகளை ஒழிக்க வேண்டுமென நான் முடிவெடுத்தேன்.

எனது செயற்பாடுகளில் சில தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால் நீங்கள் கூறுவது போன்று, புலிகளின் பெற்றோரையோ, அவர்களின் சகோதரரையோ நான் தேடி அழிக்கவில்லை. இறுதியாக மட்டக்களப்பில் கொல்லப்பட்ட இளைஞன் கூட ஓர் அப்பாவி என புலிகள் கூறியதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் அவனது பெற்றோரிடம் போய்க் கேட்டால் அவன் யாரென அவர்கள் உங்களுக்கு கூறுவார்கள். என்னைப் பற்றி விமர்சிப்பதில் தப்பில்லை. ஆனால் உண்மைகளை அறிந்து விமர்சியுங்கள். எனது பெயரைக் கூட சரியாக உங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் ஏனையவை எவ்வாறு இருக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம். நீங்கள் குறிப்பிட்ட தம்பியோ அல்லது ரகுவோ ஈ.பி.ஆர்.எல்.எப். இல் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எப்பொழுதும் எனது குழுவிலோ அல்லது புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கையிலோ ஈடுபடவில்லை. ஆனால் அவர்களின் பெயர்களையும் நீங்கள் குறிப்பிட்டுள்ளதானது, உங்களுக்கு கிடைக்கும் தகவல்கள் எவ்வளவு பொய்யானது என்பதையே காட்டுகின்றது.

எனது திருமணம், எனது உயரம், நிறம், எனது குணாம்சம் என எனது சொந்த வாழ்க்கையை அலசுகிறீர்கள். அதனைப்பற்றி முழுமையான தகவல் வேண்டுமெனில் பெண் வீட்டாரிடமோ அல்லது என்னிடமோ கேட்டுத்தெரிந்திருந்தால், சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் இவற்றைக்கூட உங்களால் சரியாகப் பெறமுடியவில்லை.

உண்ணாவிரதம் இருந்த பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் பிரபாகரன் திருமணம் முடித்தார். ஆயிரக்கணக்கான சகபோராளிகளை, அவர்களின் குடும்பங்களை கொலை செய்து குவித்தார். பல பொது மக்களைத் துரோகிகள், காட்டிக்கொடுப்போர் என மரண தண்டனை விதித்தார். அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களை வெட்டியும், சுட்டும் நரவேட்டை ஆடினார். அவர் செய்ததெல்லாம் சரி என்கிறீர்களா? அல்லது ''யார் இந்தப் பிரபாகரன்'' என்று உங்களால் எழுதத்தான் முடியுமா? இல்லையேல் யார் இந்த மாணிக்கதாசன், யார் இந்த டக்ளஸ் என்று உங்களால் எழுத முடியுமா? இல்லை. ஏனெனில், பின்னர் கொழும்பிலும் உங்களால் வாழ முடியாமல் போய்விடும். சரிநிகர் வெளிநாட்டில் இருந்துதான் வர வேண்டியிருக்கும். ராசீக்கை பற்றி என்ன எழுதினாலும் எதுவும் நடக்காது என்று நினைக்கின்றீர்கள் பாருங்கள், அந்தளவிற்கு நான் ஜனநாயகத்துக்கு கொடுக்கும் மதிப்பை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சியே.

நான் ஒன்றும் துப்பாக்கி வெறிபிடித்த மனநோயாளி அல்ல. நானும் இந்தியாவில் இருந்து வரும் பொழுது, துப்பாக்கி இல்லாத ஓர் ஜனநாயக அரசியலை மேற்கொள்ளவே விரும்பினேன். ஆனால் புலிகள் அதனை மறுத்தார்கள். அதன் பின்னர் தான் நான் இராணுவத்தில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. புலிகளை ஜனநாயக வழிமுறையில் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்த வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். விரும்புகின்றது. ஆனால் புலிகள் துப்பாக்கிகளுடன் அலையும் வரையில் அது சாத்தியமில்லையென்பதே எனது நிலைப்பாடு. இதனால் தான் நானும் துப்பாக்கி ஏந்த வேண்டியேற்பட்டது. மற்றும்படி கொள்கை ரீதியில் எனக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்.பிற்கும் எந்த கருத்து வேற்றுமையும் கிடையாது. சரிநிகர் பத்திரிகையை நான் மதித்து எழுதுகின்றேன் என்பதல்ல. அதன் தரத்தைப்பற்றி நான் நன்றாகவே அறிவேன். ஏதோ ஓர் வகையில் கச்சைக்கட்டிக்கொண்டு புலிப்பாட்டு பாடுவது ஒரு புறமிருக்க, ''ஆண்குறி போல நீண்டுள்ள இந்தியாவின் தென்முனையும்'', ''புத்தரின் வழிவந்தவர்களுக்காய் உங்கள் யோனிகளைத் திறவுங்கள்'' எனத் தமிழ்த் தாய்மாரிடமும், சகோதரிகளிடமும் அழைப்பு விடும் கவிதைகளே உங்கள் பத்திரிகையை நிரப்புவதே உங்கள் வக்கிரமான சிந்தனையை வெளிப்படுத்தப் போதுமானது. நீங்கள் குறிப்பிட்டது போல் நான் கொடூரமானவன் என்று எடுத்துக்கொண்டாலும், எனது நடவடிக்கைகள் எனது எதிரியான புலிகளையே பாதிக்கும். ஆனால், உங்கள் பத்திரிகையில் வெளிப்படும் வக்கிரமான சிந்தனைகள் உங்கள் பத்திரிகையை வாசிக்கும் ஆயிரக்கணக்கான வாசகர்களைப் பாதிக்கும். உங்களைப் போல் வெளிநாட்டு பணத்திற்கோ குறிப்பாக சி.ஐ.ஏ பணத்திற்கோ எனது மூளையை விற்பவனல்ல நான். எனது மூளைக்கெட்டிய வகையில் தெளிவாக சிந்தித்தே எனது முடிவுகளை எடுத்து செயற்படுகின்றேன். கிழக்கு மாகாணத்தில் மின்மாற்றிகளைத் தகர்ப்பதாலும், தண்டவாளங்களைத் தகர்ப்பதாலும், எத்தனை ஆயிரம் மக்கள் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகின்றார்கள், படிக்கும் பிள்ளைகள், வைத்தியசாலைகள் போன்றவை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றது என்பது கொழும்பில் இருந்து இலவசக் காசில் பத்திரிகை நடாத்தும் உங்களுக்குப் புரியாது. கொழும்பில் மின்வெட்டு ஏற்பட்டால் மாத்திரம் பதி பந்தியாக அரசை விமர்சித்து எழுதுவீர்கள். தமிழ் மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கும் நீங்கள் இது பற்றி எப்பொழுதாவது எழுதியுள்ளீர்களா? 18ம்நூற்றாண்டு நிலவரத்துக்கு புலிகள் யாழ்ப்பாணத்தை, இட்டுச் சென்றது போல் கிழக்கையும் அழித்தொழிக்கும் வரை கண்ணை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றீர்களா? அதனைத் தடுப்பது சமூகப்பொறுப்புள்ள விடயமென நான் கருதுகின்றேன்.

ஆகவே இனிமேலாவது உங்கள் பத்திரிகையில் இனங்களுக்களுகிடையில் நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கான பொறுப்புணர்வுடனும், சமூக சிந்தனையுடனும் எழுதுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

ராசீக்

# தல புராணம் வேறு வரலாறு வேறு!

**1.** சில ஆண்டுகள் முன்னம் 'சூர்யா' என்பவரது பத்தி பற்றி ஆட்சேபித்து ஆசிரியருக்கு எழுதிய கடிதம் ஆட்சேபனைக்குரிய பத்திக்குள் இடம்பெற்றதன் முறைகேடு பற்றி இரண்டு தடவை எழுத நேர்ந்தது. முன்னதை ஒத்த முறையிலேயே 'சத்யா' என்பவரது பத்தி பற்றிய என் ஆட்சேபனையும் பத்திக்குள் விழுந்துவிட்டது. இந்த நடைமுறை, வாசகனுக்கும் பத்திரிகை ஆசிரியருக்கும் உள்ள உறவிற்கு ஒவ்வாத பல பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை மீள நினைவூட்ட அவசியமில்லை.

இது ஒரு புறமிருக்க. என் கடிதத்தை அறிமுகப்படுத்தும் வரிகளில், 'பிரசுரிக்கிறோம்' என்று கூறும் சத்யா, பிரசுரகர்த்தாக்களில் ஒருவரா? வெளியீட்டாளர்கள் சார்பிலா அவரது 'பொறுப்பேற்பு' நடக்கிறது? தனிப்பட்ட கருத்துக்கள் எவை, ஆசிரியர் குழுவினவை எவை என்பது பற்றிச் சரிநிகர் கூடிய தெளிவு காட்டுவது நல்லது.

எங்கேயோ பொறுக்கின பொறுப்பற்ற நிந்தனைச் சொற்களுக்கு எதிர்வினையாக அறிவு சார்ந்த விவாதங்கள் உருவாகும் என்றால், இந்து நேசன், சினிமா நேசன் போன்ற ஏடுகள் மூலம் எவ்வளவோ அறிவுசார்ந்த விவாதங்கள் விருத்திபெற்றிருக்க வேண்டும். சும்மா, சாதி அடையாளங்காட்டி, மற்றவர்களது வாயை அடைக்க முயல்வது தமிழ் நாட்டுப் 'புத்திசீவிகள்' சிலருக்குக் கை வந்த கலை. இவர்கள் வழிபடுகிற பின் அமைப்பியல், பின் நவீனத்துவ விக்கிரகங்களது நிற அடையாளம் ஏனோ இவர்கட்கு முக்கியமில்லை. இந்த விதமாக, வசதிக்கேற்ற படி, சாதி, நிறம், இனம் என்று படைப்பையும் படைப்பாளியையும் கருத்தையும் அளவிடத் தொடங்குகிறவர்கள், தாமே அதற்குப் பலியாக அதிக நாள் எடாது. என்னளவில், கைலாசபதி, நிந்தனைகளைக் கையாண்ட விதம் போற்றுதற்குரியது. ஆயினும் பிரச்சினை ஏதெனில், சரிநிகருக்கு இந்த மாதிரி விழலெல்லாம் வேண்டுமா என்பதுதான்.

**2.** பெ.மு. என் கடிதத்தை மிகவும் கவனமாகத்தான் வாசித்திருக்க வேண்டும். 'எந்த நேரத்திலும் அரை டசினாவது தி.மு.கக்கள் இருந்தபோதும்' என்ற கருத்துப்பட எழுதியதை எவ்வளவு அழகாக 'அரைடசின் பேராவது இல்லாத இ.தி.மு.க.' என்று மறுவாசிப்புப்பண்ணி இரண்டு பத்தி நீளத்துக்கு ஜமாய்த்திருக்கிறார் மனுஷர்.

எஸ்.வி. ராஜதுரை, பெ.மு.வின் நூலை வைத்து எப்படியான தவறான முடிவுகட்கு வந்து சேர்ந்திருக்கிறார் என்று சொல்லப்போன நான் அவர் (பெ.மு.வுக்குச்) செமத்தியாகச் சாற்றியது பற்றிப் புளகமெய்துவதாக பெ.மு. காணும் முடிவு என்னைப் புல்லரிக்க வைக்கிறது. கடிதமே எஸ்.வி ராஜதுரையின் முடிவுகள் பற்றியனவாக இருக்கையில், பெ.மு. அதிற் காணுகிற காழ்ப்பு, அவரது சீரிய ஆய்வுத்திறமைக்குச் சான்று கூறுகிறது.

→20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

## காத்தான்குடி மீனவர்களின் படகுகள் தீக்கரை:

# தமிழ் இயக்கம் ஒன்றின் விடுதலைப் பணி!

**04.09.97** வியாழன் இரவு 11.30 மணியளவில் அந்த நாசகாரச் சம்பவம் அரங்கேறியது. ஆம், முன்பு புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு இரண்டு வருடங்களாக அகதிகளாய் அல்லலுற்று பின்னர், மீண்டும் தமது சொந்த இடங்களில்குடியேறியிருந்த பாலமுனை மற்றும் காத்தான்குடி பிரதேச முஸ்லிம் மீனவர்களின் சுமார் 75 லட்சம் ரூபா பெறுமதியான வள்ளங்கள், மற்றும்இதர மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் ஜனநாயக (?) வழிக்குத்திரும்பிய தமிழ் இயக்கமொன்று தீயிட்டுக் கொளுத்தியது .

ஆரையம்பதி- காத்தான்குடி எல்லைப்பகுதியிலுள்ள காத்தான்குடி கடற்கரைப்பிரதேசத்திலும் மற்றும் பாலமுனை கடற்கரையிலுமாக (வெள்ளிக்கிழமை ஜும்மா தினமாகையால்கடலுக்கு செல்லாது) நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 31 இயந்திரப்படகுகளும், 39 தோணிகளும், வலை .மற்றும் மீன்பிடி உபகரணங்களும் அம் மீனவ . மக்களின் எரிபொருள் தேவைக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோலைக் கொண்டே எரித்துநாசமாக்கப்பட்டுள்ளன.

இந் நாசவேலையால், சுமார் 800க்கும்மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கல்லடி முகத்துவாரம், நொச்சிமுனை ஆகிய பிரதேசங்களில்ராசிக் குருப்பினரும்ரெலோ உறுப்பினர்களும், ஒவ்வொரு படகுக்கும் நாளொன்றுக்கு ரூபா 200 பணமும், மீனும் கப்பமாக அறவிட்டு வருவதும் கப்பமாகக் கிடைப்பதில், தமது தேவை போக எஞ்சிய மீனை விற்பனை செய்து வருவதும் நடைமுறையில் இருக்கின்றதென்பது தெரிந்ததே. இதே பாணியிலேயே இங்கும் சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு முதல் நாள், குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற டெலோ உறுப்பினர்கள் தங்களுக்கு கப்பமாக மீன்கேட்டதை எதிர்த்த மீனவர்களோடு ஏற்பட்ட வாய்த்தர்க்கத்துக்கு பழி வாங்கும்நடவடிக்கையாக இத்தீவைப்பு சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்று காத்தான்குடிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆரம்பத்தில் இத்தீவைப்புச் சம்பவத்தையும் வழமை போலவே சிலர் புலிகளே செய்தார்கள் என்று கூற முயன்ற போதும் மேற்படி சம்பவம் தொடர்பாக பிரதித் தபால் தொலைத் தொடர்பு தகவல்துறை அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள தொலைமடலில் இத்தீவைப்புச் சம்பவத்துக்கும் புலிகளுக்கும்எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும், ஆயுதப் படைகளுடன் இணைந்து செயல்படும் தமிழ் இயக்கமொன்றே இதற்குப் பொறுப்பென்றும் மக்கள் தன்னிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க சம்பவத்தைக் கண்டித்து "யார் பொறுப்பாளியாக இருப்பினும் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப் படவேண்டு" மென்று ஈ.பி.ஆர்.எல்.எப். தேசியச் செயலாளர் ஆர்.துரைரட்னம்.பாதுகாப்பு செயலாளர் சந்திரானந்தடி சில்வாவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில்குறிப்பிட்டுள்ளார். மேலும் டெலோ இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பா.சாந்தன், மேற்படி தீவைப்புச் சம்பவத்துடன் தமது அமைப்பை சம்பந்தப்படுத்தும் முயற்சியை கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆயினும் மேற்படி நாசகார நடவடிக்கைக்கு ரெலோ இயக்கத்தினரே காரணமென்ற தமது அபிப்பிராயத்தை காத்தான்குடி பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.கடந்த சனியன்று இச்சம்பவத்தைக் கண்டிக்குமுகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலின் போது மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேச முஸ்லிம் வர்த்தகர்கள், தமது வியாபார ஸ்தலங்களை மூடி ஹர்த்தாலுக்கு தம் பூரண ஆதரவை வழங்கினார்கள். மட்டுமல்லாது ஆரையம்பதியைச் சேர்ந்த சில தமிழ் வர்த்தகர்களும் கடைகளை மூடி மேற்படி தீவைப்புச் சம்பவத்திற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இத்தீவைப்பின்எதிரொலியாக தமிழ் மக்களிடையே ஒரு கலவரம் தோன்றுவதற்கு இடமளிக்காத விதத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பழைய புரிந்துணர்வு மீளத் துளிர் விட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆதே வேளை மட்டக்களப்பில் படையினரோடு சேர்ந்து ராச்சியம் நடாத்திவரும்இத்தமிழ்இயக்கத்துக்கு எதிராக அரசாங்கம் என்ன சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதே அங்குள்ள மக்கள் ஒவ்வொருவரதும் கேள்வியாக உள்ளதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

_ அஹ்மத் _

## கிழக்கில் இரண்டு வர்க்கெடுப்புக்கள்!

இவ்வருட இறுதிக்குள் கிழக்கு மாகாணத்தில் இரு பிரதேசங்களில் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கள் இரண்டை நடத்துவது தொடர்பாக அரசின் கவ்னம் திரும்பியுள்ளது.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக விஷேட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ள "தென்-கிழக்கு" மாகாணம் தொடர்பாக சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய பிரதேச மக்களின் விருப்பத்தை அறிய ஒரு ம.க.க.வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. மற்றைய ம.க.க.வாக்கெடுப்பு மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்ட மக்களுக்காக நடத்தப்படவுள்ளது. இவ்விரு மாவட்டங்களையும்வட-கிழக்கு மாகாணத்துடன் இணைப்பதா? இல்லையா என்பது தொடர்பாகக்கருத்து அறிந்து கொள்வதே இவ்வாக்கெடுப்பின் நோக்கமாகும்.

எவ்வாறெனினும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறைப் பிரதேசம் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை தொடர்பாக அரசு இன்னும் உடன்பாடொன்றுக்கு வரவில்லை என அறியக் கிடைக்கிறது. இவ்வருடத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ம.க.க.வாக்கெடுப்புக்கள் இரண்டுக்கும் உரித்துடையதல்லாத அம்பாறை மாவட்டத்தை, ஊவா மாகாணத்துடன் இணைப்பது தொடர்பாகவோ அல்லது அம் மாவட்டத்தைத் தென்-கிழக்கு மாகாணத்தின் ஒரு பிரிவாக வைத்திருப்பது தொடர்பாகவோ இதுவரை உறுதியான முடிவொன்றுக்கு வரவில்லையெனப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

## கருத்துக்கணிப்பிற்கு எதிர்ப்பு!

உத்தேச புதிய அரசியலமைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்தினால்ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விடுத்துப் பொது சன ஐக்கிய முன்னணியின் ஏனைய அரசியல் க்ட்சிகளின் ஒத்துழைப்பு அதற்கு கிடைக்காத நிலையொன்று தோன்றியுள்ளது.

லங்கா சம சமாஜக்கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணி ஆகிய கட்சிகள் அவ்வாறான மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றுக்கு உடன்பாடாயில்லை என அறியக் கிடைத்துள்ளது. மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்துவதென்பது அரசியலமைப்புக்குப் புறம்பாக எடுக்கப்படும் முடிவாகும் எனவும் அதனூடாக அரசாங்கம் எதிர்பார்க்கும் இலாபம் அரசாங்கத்துக்கு கிடைக்குமா என்பது சந்தேகத்துக்கிடமானது எனவும்லங்கா சம சமாஜக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்காக எடுக்கப்படும் அதிசிறந்த நடைமுறையானது ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாடொன்றுக்கு வருவதே என்பதால் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பது இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகும் என அக் கட்சியின் பேச்சாளரொருவர் கூறினார்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவியை நீக்காது அரசியல் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நயவஞ்சகமாக மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்துமேயானால்தமது கட்சி அதற்குக் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவிக்கும் என ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணியின் நியமனப் பா.உ.ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அரசின்உயர் மட்ட அரசியல்வாதியொருவரிடம் வினவிய போது நாட்டை அதலபாதாளத்தினுள் இழுத்து வீழ்த்தியுள்ள இனச்சிக்கலைத் தீர்ப்பதற்காக மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றையோ அல்லது பொருத்தமான வேறெந்த நடவடிக்கையோ எடுப்பதற்காக அரசு தயங்காது என அவர் கூறினார்.

## மின் கட்டனம் அதிகரிக்குமா?

தற்போது உள்ள மின் கட்டணம் இன்னும்இரு வருடங்களில்இப்போதுள்ள அளவைவிட மும்மடங்காக அதிகரிக்கும் என மின்சார சபைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்அதிகரிப்பானது ஒரேயடியாகச் செய்யப்படாது கட்டங் கட்டமாகச் செய்யப்படவுள்ளது. இவ்விதமாக மின் கட்டணங்களை உயர்த்துமாறு உலக வங்கி, மின்சார சபைக்கும், மின் சக்தி அமைச்சுக்கும்பல முறை ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்போது சபை அலகொன்றுக்கு அறவிடும் தொகை ரூ 2.20 ஆகும். தொழிற்சாலை, வர்த்தக நிலையங்களிடமிருந்து அலகொன்றுக்கு அறவிடும் தொகை கேள்வி அதிகமான சந்தர்ப்பங்களில்ரூ.8.90 ஆகும். இக்கட்டணங்கள் இரண்டுக்குமிடையேயுள்ள இடைவெளி மிகவும் அதிகமானதால் அதனைக் குறைப்பதற்காகச் சாதாரண பாவனையாளர்களின கடடணததை அதிகரிக்க வேண்டுமென உலக வங்கி பரிந்துரை செய்துள்ளது. இதன் படியே மின்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டினுள் செய்யப்படும் மின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக உலக வங்கியின்நிதி உதவிகளையும் கடன்களையும் பெற்றுக்கொள்வதற்காக இப் பரிந்துரைகள் கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டி இருப்பதாக சபையின் அதிகாரியொருவர் சுட்டிக் காட்டினார்.

செப்டம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்படி சபை மின் கட்டணத்தை அதிகரிப்பதனூடாக இதற்குமுன்னைய மாதங்களின் கிடைத்த மின்கட்டண தொகையைவிட ரூ.9,000 இலட்சம் அதிகமாகச்சபைக்கு கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.ஆயினும் இதுவரை கட்டனம் அதிகரிக்கப்படாததால் எந்நேரமும்இது அதிகரிக்கப்படலாம்என எதிர்பார்க்கப்படுகிறது

மாற்று கருத்தரங்கு -07

ஒவியம்

காலம் : 1997.09.16 செவ்வாய்

பி.ப. 5.00 மணி

இடம்:இராமகிருஸ்ணமிசன்

(சிறிய மண்டபம்)

வெள்ளவத்தை

கருத்துரைகளைத் தொடர்ந்து

கலந்துரையாடலும் நடைபெறும்.

அனைவரும் வருக !

### வெளியீட்டு விழா

ஈஸ்ட் லங்கா யூத் பவுண்டேசன் அனுசரணையோடு 'விழுதுகள்' வெளியீட்டகத்தின் வெளியீடான

**இன்னும் நாங்கள்**

(கவிதைத் தொகுதி)

வெளியீட்டு விழா .

காலம் : 1997.09.16 (செவ்வாய்)

மாலை 3மணி

இடம் : இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயம் அக்கரைப்பற்று.

அனைவரையும் அழைக்கின்றோம்.

-மக்கள் முற்போக்கு அபிவிருத்திச் சங்கம்.

### ஜரிஸ்...

மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. உண்மையில் இது அரசால் தோற்றுவிக்கப்பட்ட மாயையே.

கொழும்பில் இருந்து கொண்டு அரச கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், கைப்பற்றிக் கொள்வதற்காகவும் போட்டி போடும் அரசியல் தலைவர்கள் வளர்த்து விட்ட இனவாதத்தினால் அழிந்து கொண்டிருக்கும் சிங்கள, தமிழ் இளைஞர்களின் உயிர்களைவிட, வளங்களைவிட, அரச போகத்தில் திளைப்பவர்கள் இம்மியளவும் தானும் பெறுமதியானவர்கள் அல்ல.

சிங்களவர்களோ, தமிழர்களோ அவர்கள் இந்த நாட்டின் மைந்தர்கள். மண்ணின் வளங்கள் என்ற பாடத்தை மக்கள் அரசியல் வாதிகளுக்கு புகட்ட முன்வந்தால் அன்றி சாதாரண குடும்பங்களின் தவிப்பும், பிரிவுத்துயரமும் போர் என்ற மாயைக்குள் அதிகரிக்க அதிகரிக்க அரசியல்வாதிகள் குளிர்காய்ந்து கொண்டேயிருப்பார்கள்.

திரிபுரன்

19→

### தலபுராண...

பண்டாரநாயக்கா 7 பேர் கொண்டு தொழிற்சங்கமும் 7 சங்கங்கள் கொண்டு சம்மேளனமும் அமைக்க இயலுமாக்கியது, அஸீஸுடைய வசதிக்காகவோ மலையக மக்களது நலனுக்காவோ அல்ல. அதன் அரசியல் முக்கியத்துவம் தென்னிலங்கையின் தொழிற்சங்க இயக்கத்திற்குள் தேசியவாத ஊடுருவல் தொடர்பானது.

இலங்கைத் தி.மு.கக்கள் பற்றிய தொல்பொருள் ஆராய்ச்சி மூலமே இன்று நாம் அதை அறிய வேண்டி உள்ளதென்றால், அதன் வரலாற்றுத்தொடர்ச்சியான தடயங்கள் அழிந்து விட்டன என்பதே காரணம். இது நம் சிந்தனைக்குரியது.

1961 சத்தியாக்கிரகத்தின் தோல்வியால் தமிழரசுக்கட்சியின் கையாலாகாத்தனம் புலனாகியபின்பு, மலையகத்தில் நுழைய ஒரு வாகனம் தேவைப்பட்டது. பாவம், அகப்பட்டது ஒரு தி.மு.க.தான். தமிழரசுத் தந்தை'யின் மலையக அரசியற் பிரவேசம் வெகுவிரைவிலேயே முடிவுக்கு வந்து விட்டது. அதன் பின்பு ஜீ.ஜீ.பொன்னம்பலமும், தொண்டமானும் அவருமாக ஐ.தே.கட்சி அரசில் சங்கமமாகியது தமிழ் தேசியவாதிகள் மறக்க விரும்பும் சரித்திரம்.

சிலருக்குத் தல புராணத்துக்கும் வரலாற்றுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. இப்போது வருகிற 'பெரியார் புராண' வசனங்களும் இதற்கு விலக்கில்லை.

3. நட்சத்திரன் செவ்விந்தியன் பாரதிதாசன் இனவாதியல்ல என்ற தொனியில் எழுதியிருக்கிறார். பாரதிதாசன் கவிதையில் மட்டுமன்றி, அவரது தலையங்கங்களிலும் கடுமையான இனவாத/ இனத்துவேஷக் கருத்துக்கள் உள்ளன. இதை விரிவுபடுத்த இங்கு இடம் போதாது. கலாவின் கவிதை பாரதிதாசனது இனவாதத்தின் சாயலை உடையதல்ல.

சிவசேகரம்
கொழும்பு

குறிப்பேட்டு வாசகர்களைக் கருத்திற்கொண்டே குறிப்பேடு பற்றிய சிவசேகரம் அவர்களது கடிதம் அப்பத்தியில் பிரசுரிக்கப்பட்டது. இது சிவசேகரத்தின் ஆட்சேபனைக்கு உள்ளாகியிருக்கிறது. அவ்வாறு பிரசுரமாகியமைக்காகவும், ஏற்பட்ட அசௌகரியங்களுக்காகவும் வருந்துகிறோம்.

ஆசிரியர் குழு

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை. கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 334. காலி வீதி. இரத்மலானை. 

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்